வார இதழ்

# ஆதவன்






ராவய வெளியீடு
ATHAVAN ආදවන

ஒளி: 25
03.12.2000
விலை ரூபா 12.00
Registered as a Newspaper in Sri Lanka

WITH COMPLIMENTS

## முஸ்லிம்களின் உணர்வுகளும், உரிமைகளும் தட்டிக் கழிக்கப்படுமா?





## தரமற்ற நிவாரணப் பொருட்களையா அரசு வழங்குகின்றது?

## மாவீரர் தினத்தில் கடவுள் கூட மௌனமா?

## வாசகர் குரல்

ஆசிரியருக்கு

கடந்த இதழில் (2000-11.19 சோ சிவபாதசுந்தரம் நினைவாக என்ற பத்தியில் சில தகவற் பிழைகள் உள்ளன. "தமிழ்நாட்டில் இருந்தபோது தனது சாற்றியலிஸம்". என்ற நூலை எழுதசில ஆலோசனை பெற தன்னை சோ. சிவபாதசுந்தரத்திடம் அழைத்துச் செல்ல எஸ்.வி.ராஜதுரை என்னைக் கேட்டிருந்தார். என்று செ.யோ.(மன்னிக்கவும் யோகா) குறிப்பிடுகிறார். சாற்றியலிஸம். என்றொரு நூலை பாபா தான் எழுதியிருந்தாார். அதுவும் யோகநாதன் தமிழ் நாட்டில் தங்கியிருக்க முன்பே வெளிவந்தது. எஸ்.வி. ராஜதுரை அவர்கள் எழுதியது "எக்ஸிஸ் டென்ஸியலிஸம்" அதுவும் யோகநாதன் தமிழ்நாடு செல்ல முன் வெளிவந்தது. அதன் திருத்திய பதிப்பும் எண்பதுகளின் முற்கூற்றியே வெறிவந்தது. எனவே யோகநாதன் தமது நினைவாற்றலை மீட்டுப்பார்ப்பது நல்லது. யோகநாதன் பொய்சொல்கிறார் என்றல்ல உண்மையைத் தெளிவுபடுத்திக்கொள்ளவே இதை எழுதுகிறேன்.

ஓவியக் கலைஞர் மாற்கு "சோ. சிவபாதசுந்தரம் நினைவாக" போன்ற பல விடயங்களை நூல் மதிப்புரைகள் யோகநாதன் எழுதுகிறார். புனைபெயர்களில் எழுதும் போதும் அதில் ஒளித்து மறைந்து விளையாடவில்லை. குறைந்தபட்சம் தாம் ஒளித்துக்கொண்ட பெயருக்காயினும் விசுவாசமாயிருக்க வேண்டும். சஞ்ஜயன் என்ற பெயரில் எழுதும் போது "யோகநாதன் கதைகள் என்ற தனது முதற் தொகுதி" என்று குறிப்பிடுகிறார் ஓவியர் மாற்கு பற்றிய கட்டுரையில் பிறகேன் யோகநாதன் என்ற பெயரிலேயே அக்கட்டுரையை எழுதலாம். யோகநாதன் இதன் மூலம் எதை விரும்புகிறார் என்பது தெளிவு. எந்தப் பெயரில் எழுதினாலும் அது நான் தான் என்பது வாசகர்களுக்குத் தெரிய வரவேண்டும். தனது எழுத்துக்கு தானேபொறுப் பேற்றல் என்பது ஒரு எழுத்தாளனுக்கு இருக்க வேண்டிய நேர்மைதான். ஆனால் இங்கு அது பொருந்தாது. எல்லாவற்றிலும் நானேதான் எனத் தன்னைமுன்னிறுத்துகின்ற முனைப்பு யோகநாதன் எவ்வளவோ எழுதிக் குவித்தவர் இத்தகைய ஒரு முனைப்பு இன்னும் ஒரு எழுத்தாளனிடம் தொழிற்படுகிறது என்றால் எழுத்து சார்ந்த துறையில் ஏற்படவேண்டிய பக்குவம் குறித்து சந்தேகம் எழுகிறது. அத்துடன் பல்வேறு புனைபெயர்களினூடும் குறித்த ஒரு எழுத்தாளரோ ஒரு பத்திரிகையின் (சஞ்சிகை என்றாவது சகித்துக்கொள்ளலாம்) பலபக்கங்களை ஆக்கிரமித்து கொள்ளுதல் என்பது பத்திரிகையின் பொறுப்பின்மையையும் காட்டும். பலரும் ஆதவன் பத்திரிகையில் எழுதுவதில்லை என்பதைக் காட்டும். ஒரு நபரிலேயே அது தங்கியிருக்கிறது போலும் என்ற பிழையான (?) கருத்தை உருவாக்கும் பல்வேறுகோணங்களிலான பார்வைகள் ஆளுமைகள் பத்திரிகையில் வெளிவராமல் ஒரு கை எழுத்தாதிக்கத் தன்மை கொண்டதாக இருக்கும் இது ஒரு மாற்றுப்பத்திரிகையாக எதிர்பார்க்கப்பட்ட "ஆதவனில்" படிந்து விட்ட பிழையான பக்கமாக மாறிவிட்டது. எனெனில் ஆதவனின் வரவை அப்படியே நாம் எதிர்பார்த்தோம். பலபக்கக் கண்ணோட்டம் பலதுறைகளிலும் வெளிப்படுமாறு பார்த்துக் கொண்டு தன்னை நிலை நிறுத்தவேணய்டிய பத்திரிகை ஒரு கை ஓசையாக மாறிவிடக்கூடாது என்பது எனது ஆதங்கம்.

வில்வரத்தினம்
198/ 2, கீழைவீதி, உவர்மலை
திருகோணமலை.

தமிழ்த் தேசிய அரசியல் அன்றிலிருந்து இன்றுவரை என்ற கட்டுரையைத் தொடர்ந்து படித்து வருகிறேன். ஒரு அரசியல் தொடர் எப்படி எழுதப்படக் கூடாது என்பதற்கு இந்தக் கட்டுரை உதாரணமாகி விடக் கூடாது. என்ற நன்நோக்கத்துடன் இத்தொடர் பற்றிய கருத்துக்கள் சிலவற்றை முன்வைக்கின்றேன்.

தேவையற்ற கட்டுரை அமைப்புக்கு பொருத்தமில்லாத பல விடயங்களை திணிப்பாக குறிப்பிடலாம். நாவலர், விபுலானந்தர் பற்றிய பக்கங்கள் மிகத் திணிப்பானவை நான்கு வரிக்குள் செய்ய வேண்டியவற்றை ஐந்து பந்திகளில் எழுதி கட்டுரைப் போக்கை ஆசிரியர் திசை திருப்பி வாசகனை குழப்பவைக்கிறார்.

இதைவிட முக்கியம் பிறரின் ஆய்வுகளை எடுத்தாழுகின்ற போக்கு இன்னொருவர் கருத்தை எடுத்தாழும் போது அந்தக் கருத்து இன்னாரால் சொல்லப்பட்டது. என்று அதே கட்டுரையில் குறிப்பிடப்படுவது வேண்டியதுதான் முறை. குறைந்தது அடைப்புக் குறிக்குள்ளாவது பிறர் கருத்தை குறிப்பிட வேண்டும். கடைசியில் உதவிய நூல்களை குறிப்பிடுவது எவ்விதத்திலும் சரியானது அல்ல.

24 தொடர்களையும் ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் கட்டுரைத் தொடர் எதைச் சொல்ல வருகிறது என்பதைச் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆசிதிசங்கர் இந்தக் கட்டுரைத் தொடரை எழுத வந்த நோக்கம் என்ன? சொல்வது என்ன? ஆதவனின் ஒவ்வொரு பக்கமும் பயனுள்ளதாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கிறோம். அவசரமான காலம் இது சொல்ல வந்ததை சுற்றி வளைக்காமல் அப்படியே சொல்ல வேண்டும். விரிவுரையாற்றும் விரிவுரையாளரைப் போல இக்கட்டுரை செல்லக் கூடாது. என்பதை என்னைப் போன்ற அரசியல் எழுத்தை விரும்பிப் படிப்போரின் தாழ்மையான வேண்டுகோளாகும்.

ஆ.குகநேசன்
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமுலை.

## வைகறை நிலவு இதழிலிருந்து

## நெஞ்சோடு நெஞ்சம்

# கவிதை என்பது...

கவிதை என்பது மேம்பாடுற்ற பேச்சு என்பது பிரபல விமர்சகர் ஒருவரது கருத்தாகும். பேச்சு எவ்வாறு மேம்பாடு உறுகிறது? சாதாரண பேச்சு மொழியில் வரும் சாதாரணமான சொற்கள், கவிதையில் வருகையில் மேம்பாடு பெறுவது எப்படி? இது பற்றி விரிவாக விளக்குவதானால், அது கவிதைக்கலை பற்றிய ஆராய்ச்சி அகிவிடும். அத்தகைய ஆராய்ச்சியில் இறங்காது, கவிதைச்சொல் மேம்பாடு பெறுவதற்கான ஒரு வழி ஓசை ஒழுங்காக்கம் என்னும் உண்மையை மாத்திரம் இங்கு கருதுவோம்.

கவிதையில் வரும் ஓசை ஒழுங்காக்கம் பல்வேறு படித்தரங்களில் நிகழும், பேச்சோசையை ஒட்டி அதற்கு மிகவும் கிட்டிய விதத்தில் நிகழும் ஒழுங்காகம் ஒரு வகை. இவ்வாறு பேச்சோசையை ஒட்டி எழும் இயற்பாக்கள் நவீன கவிதையின் பிரதான கிளையாக வளர்ந்து வருகின்றன. இக்கவிதைகளில் பேசும் குரலை அடிப்படையாகக்கொண்ட ஓசையைக் கவிஞர்கள் தம்கருத்து வெளியீட்டின் பொருட்டும் கையாளுகின்றனர். ஓசை ஒழுங்காக்கத்தின் பிறிதொரு வகை இசைக்கலையை அதாவது சங்கீதத்தை மிகவும் தழுவிய ஒன்றாகும். இவ்வித ஒழுங்காக்கத்தின் பூரண நிலையை சங்கீத சாகித்தியங்கள் என்னும் இசைப்பாங்களில் நாம் காண்கிறோம்.

அங்கையன் கயிலாசநாதனின் கவிதைகள் சங்கீத சாகித்தியங்கள் அல்ல. (அங்கையன் பாடல்கள் சங்கீத சாகித்தியங்களே என்பது குறித்தற்பாலது) எனினும் அவை இசைத்தன்மை மிக்கனவாக உள்ளமையை அவை பாடுங்குரலை ஆதரிசமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளமையை பாடற் சுவைஞர்கள் நிச்சயம் உணர்வார்கள்.

அவரது பாடல்கள் சில, மெல்லிசை அமைத்துப் பாடுவதற்கென எழுந்தவை என்பதையும் நாம் கவனித்தல் வேண்டும். இந்த வகையில் மணிக்குரல் ஒலித்ததே என்னும் பாட்டும் மழைசிந்தும் கடலோரம் இளநண்டு படங்கீறும் என்னும் பாட்டும் பட்டு இதழ்விரித்து என்னும் பாட்டும் மக்கள் மனத்தில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளவை எனல் பிழை ஆகாது. இவை பொருத்தமான இசையுடன் வானொலியில் அடிக்கடி ஒலிபரப்பவாது பெருமைப்படத்தக்க செய்தியாகும்.

அங்கையன் மெல்லிசைக்கென முழுக்க முழுக்க எழுதிய பாடல்களைத் தவிர்ந்த ஏனைய பாடல்களிற்கூட இசைப்பாவினத்துக்குரிய பண்புகள் முதன்மை பெற்று நிற்பதையே நான் காண்கிறேன். கண்ணதாசன் போல மிகப்பல இசைப்பாடல்களை எழுதிக் குவிக்காவிட்டாலும் கயிலாசநாதனும் தம்பாட்டுக்களிலே இலகுவில் மக்களை ஈர்க்கும் இதமான சொற்பிரயோகங்களைக் கையாளும் வழக்கம் உடையவர். சோமு என்னும் மீ.ப. சோமசுந்தரம் அவர்களின் பாட்டுக்களிற் காணப்படுவது போன்ற ஏக்க-சோக-இனிமை- இசைக்கலவை அங்கையனின் பாடல்களிலும் சிற்சில இடங்களிலே தலைகாட்டகின்றன. சோமுவைப் போலவே அங்கையனும் வானொலியுடன் தொடர்பூண்டு இருந்தமையை நாம் நினைவுகூரலாம். ஆயினும், வானொலிப்பணியைத் தொடங்க முன்னரே அங்கையன் கவிதைகளிற் பலவற்றை எழுதி முடித்து விட்டார் என்பது கருதத்தக்கது.

இனி இசைப்பாக்கள் சிறந்த கவிதைகள் ஆகுமா என்ற ஐயமும் சிலரிடையே எழுதல் கூடும், காலம் சென்ற சிங்களக் கவிஞர் மகா (கம சேகர அவர்களின் சிறந்த பாடலாசிரியரே எனினும் கவிஞர் என்று பார்க்கும் போது அவர் இரண்டாந்தரத்தவரே என்றும் சிலர்வாதிக்கிறார்கள். அது எவ்வாறாயினும் ஈழத்துத் தமிழர் ஆக்கி ஈழத்துக் கலைஞர்கள் இசையமைத்து ஈழத்துப் பாடகர்கள் குரல் கொடுத்து ஒலிப்பதிவான ஈழத்துப் பாடல்கள் என்னும் புதிய கலைத்துறை இப்பொழுது உருவாகி வருவதனை எவரும் மறுத்தல் இயலாது இத்துறையின் தொடக்க காலத்திலே பல தயக்கங்களும் மயக்கங்களும் இருந்தன. இசைவாணர் எப்படிப் பாடுவாரோ என்ற எண்ணம் எதுவும் இல்லாத புலவர்கள் இயற்றிய பாட்டுகளை சங்கீத வித்துவான் ஏதோ ஒரு தாளத்தில் ஏதோ ஓர் இராகத்தில் தாம் தமது குரு தாளத்தில் ஏதோ ஒரு கிருதி அல்லது கீர்த்தனத்தின் மெட்டிற்குள்ளே திணித்துப்பாடிவிட்டுப் போகும் போக்கே ஆரம்பாலத்தில் இருந்தது. ஆனால் ஆரம்ப காலத்துப் போக்குகள் பல இன்று மாறிவிட்டன தயக்க மயக்கங்கள் பல நீங்கி விட்டன. இன்றைய ஈழத்துப் பாடலாசிரியர் இசைவாணரின் போக்குகளை உணர்ந்தே எழுதுகிறார். இசைவாணரும் கவிஞரின் எண்ணவோட்டங்களையும் உணர்ச்சிச் சுழிப்புககளையும் மனங்கொண்டே இசையமைக்கிறார். ஆதலால், ஓரளவு திருப்திகரமான இசையமைக்கிறார். எஸ்.கே பரராஜசிங்கம், ஆர். முத்துச்சாமி, ரி.வி. பிச்சையப்பா முதலான இசையமைப்பாளர்கள் உருவாகி வருகின்றனர். இசைப்பா ஆசிரியர்களும் நூற்றுக்கணக்கிலே தோன்றிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், இசைவாணர்களும் கவிஞர்களும் ஒருங்கே அமர்ந்து தமது படைப்புத் தொழிலில் ஈடுபடத்தக்க நெருக்கமான சூழல் இன்னும் தோன்றவில்லை. அப்படியொரு நல்லுறவு ஏற்படுமாயின் திறமான பல ஈழத்துப் பாடல்கள் பிறப்பெடுக்கும் என்பதில் ஐயமில்லை. அங்ஙனம் பிறப் பெடுக்குமாயின், ஈழத்தமிழ் மெல்லிசைக் கலை புதிய பரிமாணங்கள் பலவற்றைப் பெற்று விருத்தியடையும். அங்ஙனம் விருத்தியடையும் இசைக் கலை வரலாற்றில் அங்கையன் கயிலாசநாதனின் பாட்டுகளும் திடமானதோர் இடம் பெற்றுத் திகழும் என்பது நிச்சயம்.

கயிலாசநாதனின் கவிதைப் பொருள் பற்றியும் இங்கு சில சொற்கள் கூறுதல் வேண்டும். காதலும் குடும்ப வாழ்க்கையும் குழந்தைப் பேறும் கலையின்ப நுகர்வும் இவரது கவிதைகளின் உள்ளடக்கமாகத் திகழ்கின்றன. சமுதாயச் சச்சரவுகள் நீங்கி அமைதி பிறத்தல் வேண்டும் என்ற பொதுப்படையான நல்லெண்ணமும் அவர் கவிதைகளில் உண்டு. அத்துடன் இயற்கையை நயக்கும் போக்கும், அழகியல் ஈடுபாடும் ஆங்காங்கே காணப்படுகின்றன. இறையன்பும் ஈடுபாடும் சில கவிதைகளிலே தெரிகின்றன.

இன்னும் மிகப்பல கவிதைகளையும் பிற கலையாக்கங்களையும் செய்து, தமிழ்க் கலையுலகைக் கயிலாசநாதன் வளப்படுத்தவார் என்று ஈழத் தமிழுலகம் நம்பியிருந்தது. காலத்தின் கொடுமையால் அந்த நம்பிக்கை பாழாகி விட்டாலும், அவரது ஆன்மாநாதம் நூலுருப்பெற்று வருவது தேறுதல் தரும் செய்தியாகும். வரவேற்று உவந்து நயக்கத்தக்க இந்த நூலை அறிமுகம் செய்யும் பேற்றை எனக்கு அளித்தமைக்காக நூல் வெளியீட்டாளர்க்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

**இ.முருகையன்**

# அரசின் கஜானா காலி! நிதி நிலைமை மோசமாகின்றது

இலங்கை அரசு பாரிய நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதோடு திறைசேரி வற்றிப் போயுள்ளதன் காரணமாக குடியேற்ற- குடியகல்வுத் திணைக்கள கடவுச் சீட்டுக்களின் மூலம் கிடைக்கும் பணம், சுங்கத்திணைக்களத்திற்கு வரிகளின் மூலம் கிடைக்கும் பணங்களை தினந்தோறும் திறைசேரிக்கு வரவழைத்துக் கொள்ள வேண்டிய நிலையொன்று உருவாகியுள்ளது. அதிகமான அரச நிறுவன ஊழியர்கள் ஊதியத்துக்கான பணத்தை வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற்றுச் செலுத்த வேண்டிய நிலையும் உருவாகியுள்ளது.

சென்ற வரவு செலவு திட்டத்தின் மூலம் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு 510 கோடி ரூபாக்களை வேறுபடுத்தி இருந்த போதிலும் வருடம் கழிய மூன்று மாதங்கள் இருக்கையில் 8300 கோடி ரூபாக்களுக்கும் மேலாக செலவழித்திருப்பதும், மசகெண்ணை விலை உயர்வும் இந்த நிதி நெருக்கடிக்கு முக்கிய காரணமாகியுள்ளது.

அரச செலவுகளை சீர்படுத்திக் கொள்வதற்காக இலங்கை வங்கி இலண்டன் வனிக வங்கியிடமிருந்து 10 கோடி அமெரிக்க டொலர்களை (810 கோடி ரூபா) பெற்றுள்ளது.

இலங்கை மத்திய வங்கி இந்நாட்டு வகை வங்கிகளுக்கான தற்காலிக ஏலத்திற்கான வட்டி 20வீதம் தொடக்கம் 25 வீதமாக உயர்த்தியுள்ளதோடு உடனடிக் கொள்வனவுக்கான பெறுமதி 15 வீதத்தில் இருந்து 17 வீதம் வரைக்கும் உடனடி திருப்பிக் கொள்வனவுக்கான பெறுமதி 18 வீதத்திலிருந்து 20 வீதம் வரைக்கும் உயர்த்தப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கி வட்டி வீதத்தை இவ்வாறாக அசாதாரணமான முறையில் உயர்த்தப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாவதோடு, இதன் காரணத்தால் அனைத்து வணிக வங்கிகளுக்கும் இந்த நிலைக்கு முகம் கொடுப்பதற்காக 3 மாத குறுகிய கால வைப்புக்களுக்காக 15வீதமாக வட்டி வீதத்தை கூட்ட வேண்டியும் ஏற்பட்டுள்ளது. நீண்ட கால வைப்புகளுக்காக குறைந்த வட்டி வீத வழங்கலும், குறுகிய கால வைப்புகளுக்காக அதிக வட்டி வீத வழங்கலும் இலங்கை வங்கித் துறையில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையொன்றாகும்.

வட்டி வீதத்தை அதிகரிப்பதற்கான பிரதான காரணம் அரச கடன்பெறுதல் அதிக அளவில் உயர்ந்துள்ளதேயாகும். வட்டி விகிதத்தை அதிகரிப்பதன் மூலம் ரூபாவின் பெறுமதியும் அதிகரிக்கின்றன. அரச சமுதாய மார்க்கங்கள் தேவையான அளவு அபிவிருத்தியடையாததும், பாதுகாப்புச் செலவு அதிகரிப்புக் காரணமாக வரவு செலவின் இடைவெளி தூரமாவது தவிர்க்க முடியாததொன்றாகின்ற தென்பது பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும்.

## "நானே துறைமுக அபிவிருத்தி அமைச்சர்"


றொனி டி மெல் கூறுகிறார்

ஒலுவில் துறைமுகம் சம்பந்தமாக ஹக்கீமுக்கு றொனி டி மெல் உச்சியடியான பதிலை பேட்டியொன்றில் கொடுத்துள்ளார். நான் துறைமுக அபிவிருத்தி அமைச்சர். ரவூப் ஹக்கீம் கப்பல் போக்குவரத்துக்கு பொறுப்பானவர். அதன்படி ஒலுவில் துறைமுக விஷயம் என் சம்பந்தமானது. அதைவிட இப்போதைய நிதி நிலையில் ஒலுவில் துறைமுக அபிவிருத்தி சாத்தியமற்றது என றொனி டி மெல் தெளிவாகக் கூறியுள்ளார்.

## தண்ணீர் பெறுவதற்கு ஆயிரம் ரூபா முற்பணம்

உத்தேச நீர் விநியோக முகாமைத்துவ சட்டத்தை நிறைவேற்றிய பின்பு நீர் பெறுவதற்கான உரிமை வேண்டும், ஆயிரம் ரூபா முற்பணம் செலுத்த வேண்டும் என நீர்வள செயலகம் அரசிற்கு புனிந்துரை வழங்கி இருக்கின்றது.

நீர்வள செயலகம் தயாரித்துள்ள நீர்வள சட்டமும் கொள்கையும் ஆலோசனைகளும் என்ற குறிப்பில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. தண்ணீர் பெறுவதற்கான விண்ணப்பத்திற்கு ஆயிரம் ரூபாவும், புதுப்பிப்பதற்கு ஐந்நூறு ரூபாவும் நீர் உரிமையை வழங்குவதற்கு இருநூற்றி ஐம்பது ரூபாவும் அறவிடப்படுமென மேலும் குறிப்பிட்டுள்ளது.



## கைதுகள் தொடருமானால் சட்டமறுப்பு தொடங்கும்

பெ.சந்திரசேகரன்

பண்டாரவளை பிந்துனவேவ சம்பவத்தை கண்டித்து மனிதாபமான முறையில் அகிம்சை வழியில் ஹர்த்தால் செய்து தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு நடைமுறையில் உள்ள சாதாரண சட்டத்தைப் பயன்படுத்தும்படி அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் மற்றும் சகல தரப்பினர்களுக்கும் நாம் பல்வேறு நியாயமான கோரிக்கைகளை விடுத்தும் கூட இதுவரை அது கணக்கில் எடுத்துக் கொள்ளப் படாதது ஒரு திட்டமிடப் பட்ட செயலாக இருக்குமோ எனவும் எண்ணுகிறோம்.

அவசரகாலச் சட்டம் எவ்வாறு இந்த கைதுகளில் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது என்பதனை நீதிமன்றத்தில் நீதிபதிகளுக்கு எமது சட்டத்தரணி தெளிவு படுத்திய சட்ட வாதத்தினாலேயே, சில இளைஞர்களை எம்மால் சமீபத்தில் பிணையில் விடுதலை செய்து கொள்ள முடிந்தது.

இவ்வாறு தேவைப்படும் இளைஞர்கள் பொலிசில் சரணடைவது, அவசரகால சட்டத்தின் கீழ் வரும் அனைத்து கொடுமைகளையும் தாமே விரும்பி அனுபவிப்பதாகவே அமையும் என்பதால், மலையக மக்கள் முன்னணி இவ்வாறான சரணடைவை அனுமதிக்காது.

இளைஞர்களின் விடுதலை தொடர்ந்தும் திட்டமிட்ட வகையில் தாமதமாகினால், இவர்களின் விடுதலைக்காக தான் சட்ட மறுப்பு போராட்டம் ஒன்றினை ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுவேன் என்றும் மேற்படி அறிக்கையில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் குறிப்பிட்டுள்ளார்.

## நீதிமன்றில் பொலிஸ் அதிகாரிகள்

பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் ஜனக பண்டார தென்னக்கோன் கொலைவழக் கொன்றில் சிக்கினார். அவரை அப்பகுதி பொலிஸ் அதிகாரி வேண்டுமென்றே கைது செய்யவில் என அறியப்படுகிறது. இது சம்பந்தமான வழக்கில் பல விஷயங்கள் வெளிச்சத்துக்கு வர நீதிபதி தம்புளைப் பகுதியின் உயர்பொலிஸ் அதிகாரிகளை நீதிமன்றத்துக்கு வரவழைத்து தென்னக் கோனை ஏன் கைது செய்யவில்லை என்று காரணம் கேட்கிறார். உயரதிகாரிகள் என்ன பதிலை யாரிடம் கேட்டுச் சொல்லப் போகிறார்கள்?

## சமாதான பேச்சுவார்த்தைக்கான திட்டங்களை ஆராய தூதுவர்கள் சந்திப்பு

அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்காக ஆற்ற வேண்டிய செயல்பாடுகள் குறித்து அமெரிக்க ஐக்கிய குடியரசு, நோர்வே , பிரித்தானிய, இந்திய பிரதிநிதிகள் கூடி கடந்த 27ம் திகதி அமெரிக்க உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் ஆராய்ந்துள்ளனர். இவ் கலந்துரையாடல் மூன்று மணித்தியாலங்கள் நடைபெற்றது. தெற்காசியாவுக்கான அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் கார்ல் எப்- இன்டர் பேத்தும் அமெரிக்க தூதுவர் அஸ்லவில்ஸ், பிரித்தானிய தூதுவர் லிண்டா டூபில் நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்டிபேர்க் இந்திய தூதுவர் கோபால கிருஷ்ண காந்தியும் இக் கலந்துரையாடலில் பங்கு கொண்டனர்.

கலந்துரையாடலின் போது விடுதலைப்புலிகளின் யுத்த முனைப்பு பற்றி வெகுவாக ஆராயப்பட்டது.

## மீறப்பட்ட அடிப்படை உரிமை தண்டனை யாருக்கு?

நுவரெலியா மாவட்டத்தில் நடந்த கொடூரமான துப்பாக்கிச் சூட்டில் நான்கு பேர் கொல்லப்பட்டனர். இலங்கை சட்டமுறைப்படி, விபத்துமரணம் கொடூர முறையிலுண்டான மரணம், சூழ்நிலை காரணமாக எற்படும் விளக்க முடியாத மரணம் ஏற்பட்டால் அதைப்பற்றி விசாரணை செய்து, மரண பரிசோதனைக்குப் பிறகு உரியவரிடம் பிரேதம் கையளிக்கப்பட வேண்டும். ஆனால் நுவரெலியா பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பின் இந்தச் சட்ட முறைகள் யாவும் முற்றாகவே மீறப்பட்டதாம். இப்போது விஷயம் அம்பலமாகிவிட்டது. இதைச் சொன்னவர்களும் செய்தவர்களும் பதவி உயர்வை எப்போது பெறுவார்களோ என மக்கள் பேசிக் கொள்கின்றார்கள். அரசியல் வாதிகளோ வாய் திறக்கவில்லை

## இந்திய நிறுவனங்களின் ஆடைகண்காட்சி

இந்திய செயற்கை, றெயோன் துணிவகைகளை ஏற்றுமதி செய்யும் அபிவிருத்தி சபை உட்பட முன்னணிக் கம்பனிகள் 35ன் ஒத்துழைப்போடும், இலங்கைக்கான இந்திய தூதுவராலய அநுசரணையோடும் இரண்டாயிரமாம் ஆண்டுக்கான துணிவகைகள் கண்காட்சியொன்றை நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. "இந்திய பெப்ரிக்கும், இந்திய உடைகளும்" என்ற தலையங்கத்தின் கீழ் நடாத்தப்படும் இந்தக் கண்காட்சி எதிர்வரும் 6,7,8ம் திகதிகளில் லங்கா ஒப்ரோய் ஹோட்டலின் "ஏட்ரியம்" வொபியில் காலை 10 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறுவதோடு இந்தக் கண்காட்சி டிசம்பர் 6ம்திகதி கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்படும். அதிதிகளுக்கான அலங்காரக் கண்காட்சி அன்றைய தினம் 7 மணிக்கு ஆரம்பமாகும்.

விக்டர் ஐவன் எழுதுகிறார்

# நோர்வே பிரவேசத்திற்கான வரையறைகள்

நோர்வேயின் சமாதான முயற்சி இன்றைய காலகட்டதட்தில் பல்வேறு மட்டத்தில் கருத்து பரிமாறல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. சமாதானம் தொடர்பாக பேசுபவர்கள் வெறும் புகழ்பாடும் நிலையிலேயே இருக்கின்றனர். எப்பொழுதும் யுத்தத்தின் மூலம் இரண்டில் ஒன்றைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பவர்கள் தமது முழுச் சக்தியையும் பயன்படுத்தி சமாதானத்திற்கும், அரசியல் தீர்விற்கும எதிரான தாக்குதலை தொடுத்த வண்ணம் இருக்கின்றனர்.

இவ்வேளையில் நோர்வே, இந்தியா சமாதான முயற்சிகளை மேற்கொண்ட பொழுது நிறைவேற்றிக் கொள்ள முடியாது போன முயற்சிகள் மூலம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களை கற்றுக் கொண்டு அரசியல் தீர்வொன்றுக்கு தேவையான அடிப்படை நிபந்தனையொன்றாக ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் பின்னணியொன்றிற்கான அரசியல் அடித்தள முக்கியத்துவத்தை உணர்ந்து அந்த நோக்கத்தை நோக்கி செயல்பட வேண்டும்.

அன்று பிராந்திய வல்லரசான இந்தியா ஆயுதம் தாங்கிய தமிழ் அரசியல் குழுக்களையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் இணக்கப்பாட்டிற்கு கொண்டு வந்தால் மாத்திரம் போதுமானது என கருதியது. அதனால் ஏனைய அரசியல் கட்சிகளின் இணக்கப்பாடு தேவையில்லையெனவும் சிந்தித்தது. அதனால் ஏனைய அரசியல் கட்சிகளிடமிருந்து பல்வேறுப்பட்ட எதிர்ப்புகள் வெளிவந்தாலும் அதனை கட்டுப்படுத்த முடியுமென இந்தியா கருதியது.


அவ்வாறான வேளையில் இந்தியா கவனத்தில் கொள்ளாத முக்கிய காரணிகள் பின்வருமாறு-

1. அவ்வமயம் ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சி 11 வருடங்களாக தொடர்ந்தும் அதிகாரத்தில் இருந்ததனால் பொதுமக்களின் அதிருப்திக்கு உள்ளாகி இருந்ததுடன் எதிர்கட்சி தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட ஜனநாயக விரோத அடக்கு முறைகளின் காரணமாக எதிர்கட்சிகள் ஆளும் கட்சி தொடர்பாக வைராக்கியம் கொண்ட நிலையிலேயே இருந்தன.

2. ஜனாதிபதித் தேர்தலும் பாராளு மன்றத் தேர்தலும் நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையிலேயே இந்தியா ஆளும் கட்சியுடன் ஒப்பந்தம் செய்தது. ஆட்சியாளர்கள் மீது மக்கள் எவ்வளவு வெறுப்பு கொண்டிருந்தாலும் ஒப்பந்தத்தை பாதுகாக்கும் நோக்குடன் இவர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு இந்தியா தம்மால் இயன்ற அனைத்தையும் செய்ய தயாராக உள்ளது என்பதனை ஒப்பந்தம் மூலம் வழங்கப்பட்ட அரசியல் சமிக்ஞையாக இருந்தது.

இவ்வாறானதொரு நிலைமை இந்தியா முன்னெடுத்துச் சென்ற செயல் திட்டங்களுக்கும் இலங்கைக்கும் எதிராக எதிர்கட்சிகள் கடும் போக்கை கையாள வேண்டிய நிலைமைக்குத் தள்ளி விட்டன. வளர்ந்து வந்த இந்த சூழ்நிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணியினர் பாரிய கிளர்ச்சியொன்றிற்கும் வித்திட்டதுடன் இதன் காரணமாக தென்னிலங்கையில் கொல்லப்பட்டவர்களின் தொகை இனப்பிரச்சினை காரணமாக எழுந்த யுத்தத்தினாலும், இனக்கலவரங்களினாலும் கொல்லப்பட்டவர்களிலும் பார்க்க பத்து மடங்கு அதிகமானதாகும். இறுதியில் இந்தியாவின் செயல்பாடுகள் இனங்களுக்கிடையே பிரச் சினையை தீர்ப்பதற்கு பதிலாக மேலும் தமிழ்-சிங்கள சமூகங்களுக்கிடையே உள்ள இடைவெளி மேலும் தூரமாகி முழு நாடும் சிக்கலான நிலைமைக்கு தள்ளுவதற்கும் ஏதுவாயிற்று.





இந்தியா ஆட்சியிலிருந்து ஐ.தே.க. விற்கும் ஆயுதக் குழுக்களுக்கும் சாதகமான கொள்கைகளை முன்னெடுப்பதற்கு பதிலாக தீர்வுக்கு எதிராக போட்டிக் களத்திலிருந்த அனைத்து அரசியல் கட்சிகளுக்கிடையேயும், அந்நியோன்னிய கௌரவத்துடனும், நம்பிக்கையுடனும் செயற்படுவதற்கான சூழலொன்றை உருவாக்கி ஜனநாயக மறுசீரமைப்பு செயற் திட்டங்களை முன்னெடுக்க ஆளும் கட்சியை உடன்பாடொன்றிற்கு கொண்டு வந்திருந்தால் இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு உந்துசக்தியாக இருந்திருக்கும். அத்தோடு ஏற்படுத்திக் கொண்ட பொது உடன்பாட்டிற்கு ஜனநாயக நீரோட்டத்திற்கு அப்பால் நின்ற தமிழ் அரசியல் குழுக்களையும், மக்கள் விடுதலை முன்னணியையும் அந்த செயல்பாட்டில் ஒரு அங்கமாக இணைத்து ஜனநாயக மறுசீரமைப்பிற்கான நடவடிக்கைகளுக்கு பொது உடன்பாடொன்றை ஏற்படுத்திக் கொண்டு சர்வகட்சி காபந்து அரசாங்கம் ஒன்றின் கீழ் நீதியான பொதுத் தேர்தல் ஒன்றினை நடாத்தி அரசியல் தீர்விற்கான மறுசீரமைப்பு திட்டங்களை செயல்படுத்தும் பிரதான பொறுப்புகளை வெற்றி பெறும் கட்சியிடம் ஒப்படைத்திருக்குமாயின் இதனால் கிடைக்கும் பெறுபேறு கிடைத்த பெறுபேற்றை விட உன்னதமாக இருந்திருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

நோர்வே அரசின் பிரவேசமும் ஓரளவு இந்தியப் பிரவேசத்திற்கு சமமானதாகவே இருக்கின்றது. பலப்போட்டியில் ஈடுபட்டுள்ள அரசியல் கட்சிகளிடையே அந்நியோன்னிய கௌரவத்தோடும் நம்பிக்கையோடும் செயற்பட முடியுமான சூழலொன்றை ஏற்படுத்துவதற்கான தேவை பற்றி தேவையான அளவு கவனம் கெண்டிருப்பதாகத் தெரிவதற்கில்லை. கூடிய கவனம் கொண்டுள்ளது பிரதான இரண்டு கட்சிகளிடையே உடன்பர்டுகளை ஏற்படுத்திக் கொள்ளும் தேவை பற்றியதாக மட்டுமே உள்ளது. நோர்வே அரசு முயற்சி செய்வது புலிகளுடன் உடன்பாடுகளுக்கு வருவதற்கு அடுத்தபடியாக பிரதான இரண்டு கட்சிகளிடையேயும் உடன் பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் மட்டும் இனப்பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொள்வதாயின் இந்தியா சரிந்து வீழ்ந்தது போல் நோர்வே அரசு சரிந்து வீழ்வதும் நிச்சயமான தொன்றாகும்.

பிரதான இரு கட்சிகளினதும் தலைமைத்துவத்துடன் மேற்கொள்ளும் பேச்சு வார்த்தைகள் மூலமாக மட்டும் இந்த இரண்டு கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் சக்திகளினிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது. தீர்வொன்றைத் தேடும் போது பிரதான பெரிய கட்சிகளின் உடன்பாடுகள் மிக முக்கியமாவதாயின் சிறுகட்சிகளைக் கவனம் கொள்ளாதிருப்பது பாரிய பிரச் சினைகள் ஏற்படக் காரணமாக அமையும். ஒழுங்குபடுத்தாத பத்து இலட்சத்தையும் விட ஒழுங்கு படுத்திய ஆயிரம் பேர் பலம்பெற்றவர்களாக இருக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. நாட்டுக்குத் தேவையாவது சிறிய, பெரியதெனப் புறக்கணிக்கப்படாத முன்னெடுப்புக்களேயாகும். அனைவரையும் உடன்பாடுகளுக்குக் கொண்டு வருவது கடினமான காரியமாயினும் உடன்படாதவர்களை எதிர்க்காத நிலையில் வைத்துக் கொள்வது மிக முக்கியமானதொன்றாகும்.

இனப்பிரச்சினைக்கு மட்டும் வரையறுக்கப்படாத சரிந்து வீழ்ந்து கொண்டிருக்கும் ஜனநாயக முறைக்கு புத்துனர்வளிக்கக் காரணமாக அமையும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக அனைத்து கட்சிகளினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். நடந்து முடிந்த தேர்தல் கபடத்தனங்கள் சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மீண்டும் திட்டமிட்டவாறு தேர்தல் வன்முறைகள் ஏற்பட சந்தர்ப்பங்கள் கிடைக்காத வகையில் ஸ்தாபன முறைகளை ஏற்படுத்தல், நிறைவேற்று அதிகாரத்திற்குள் கடுமையாக அகப்பட்டுள்ள நீதிமன்றத்தை சுயாதீனப்படுத்தல், ஜனாதிபதி முறையை அகற்றல் அல்லது நிறைவேற்று அதிகார மிக்க ஜனாதிபதி முறையை அகற்றல் அல்லது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியை பாராளு மன்றத்திற்கு அல்லது நீதிமன்றத்திற்குப் பொறுப்புக்கூறும் நிலைக்குக் கொண்டு வருதல், பாராளு மன்றப் பிரதிநிதிகளுக்கான ஒழுக்க நெறிகளை ஏற்படுத்தி குற்றவாளிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கும் முறையொன்றை ஏற்படுத்தல், அரசமட்டத்தால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களின் போது அவைபற்றிய விபரங்களை பெறுவதற்கான உரிமையை சட்டரீதியாக்குதல், எந்தவொரு ஆட்சியாளருக்கும் எதிர்கட்சிகளையோ அல்லது அவைகளின் ஆதரவாளர்களுக்கு தொந்தரவு செய்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படாமலிருப் பதற்கான முறைகளை ஏற்படுத்தல், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொழிற் துறைகள், விவசாயம், வியாபாரம் மற்றும் தேசிய சொத்துக்கள் சம்பந்தமாக தேசிய அளவிலான கொள்கைகளை வகுத்தல் போன்றவை அவ்வாறான மறுசீரமைப்புத் திட்டங்களுக்குள் அடங்க வேண்டிய அத்தியாவசியமான அங்கங்கள் எனக் கொள்ளலாம். தேசத்தின் பொது நன்மைகளுக்கான அவ்வாறான செயற்பாடுகளுக்கு எந்த அரசியல் கட்சியினதும் எதிர்புகள் கிளர்ந்தெழாது அவ்வாறான மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பல போட்டியின் போது எழும் வைராக்கியங்களை இல்லாமல்ச் செய்து அனைவரும் அந்நியோன்னிய நம்பிக்கையுடனும் கௌரவத்துடனும் செயற்படும் ஒரு பின்னணியை உருவாக்குவதோடு, இனங்களிடையே உள்ள பிரச்சினைக்கு தீர்வொன்றைத் தேடிக்கொள்வதற்கான பொது உடன்பாடுகளைத் தேடிக் கொள்ள முடிவது அவ்வாறானதொரு சூழலில் மட்டுமேயாகும்.

---

## மாவீரர் தின உரை 5ம் பக்கத் தொடர்ச்சி...

அத்துடன்அரசியல் ரீதியிலான பேச்சு வார்த்தைகள் மூலமே இனநெருக்கடிக்கு தீர்வொன்றைக் காப்பதற்கான வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்ற நழுவல் போக்குகளுடன் ஐக்கிய தேசியகட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கா கருத்து தெரிவித்துள்ளார். இவற்றிற்கெல்லாம் அப்பால் இலங்கையின் இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்று .எட்டப்பட வேண்டுமென்ற சர்வதேசநாடுகளின் மத்தியஸ்த முயற்சிகள் பிரபாகரனின் மாவீரர்தின உரையின் அம்சங்கள் உட்பட அண்மைக்கால புதிய அரசியல் நிலைமைகள் தொடர்பாக இந்தியா மிகவும் அவதானமாக பரிசீலித்து வருவதுடன் ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் லக்ஷ்மன் கதிர்காமர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஐக்கிய தேசிய கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க ஆசியயோருடனும் கலந்துரையாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சர்வதேசரீதியாகஇலங்கையின் இனநெருக்கடிக்கு அரசியல் ரீதியாக தீர்வொன்று எட்டப்பட வேண்டுமென்ற நெருக்குதல்கள் காரணமாகவே புலிகளின் தலைவர் பிரபாகரன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளார் என்ற குற்றச்சாட்டுகளுக்கு அப்பால் பிரபாகரன் நீட்டியுள்ள சமாதானக் கயிற்றை இலங்கை அரசு எவ்வாறு இறுகப் பற்றிப்பிடிக்கப் போகிறது என்பதே சமாதானத்தை நோக்கிய சகலரினதும் எதிர்பார்ப்பாகும்.

சிங்கள பௌத்த பேரினவாதப் பிடியில் தொடர்ந்தும் இலங்கை அரசியலாளர்கள் தமது அரசியல் நடத்தைகளை முன்னெடுக்க விரும்பினால் அது தமிழ்மக்களின் குரல் வளைகளையல்ல சிங்கள மக்களின் குரல் வளைகளையே நெரிப்பதாகவே அமையும் ஏனெனில் தொடரும் போர்ச் செலவினங்களாலும் மனித அழிவுகளாலும் திணறிப் போய் தள்ளாடிக் கொண்டிருக்கும் இலங்கை சமாதானப்பாதையிலிருந்து நழுவினால் அழிவைத் தவிர வேறொன்றையும் சந்திக்க முடியாதென்பதே இன்றைய யதார்த்த நிலையாகும்.

ஆதவன்

இல-83, பிலியன்தல வீதி மஹரகம

தொலைபேசி எண் - 851672, 851814

விநியோகப் பிரிவு - 842064

தொலைமடல் - 851814

## வாசகர் உரிமை!

தம்மைப் பாதிக்கும் விதத்தில் ஆதவனில் ஏதாவது பிரசுரிக்கப்பட்டதாக நபரொருவர் அல்லது நிறுவனமொன்று கருதும் பட்சத்தில் உரிய கருத்துத் தெரிவிக்கும் உரிமை வாசகருக்குண்டு.

அது தொடர்பாக அந்த நபர் அல்லது நிறுவனம் எழுதி அனுப்பி வைக்கும் கருத்துக்களை வெளியிட "ஆதவன்" கடப்பாடுடையது.

# கடந்த கால நிகழ்வுகளிலிருந்து பாடங்களை கற்றுக் கொண்டு...

சமாதான விரும்பிகள் எதிர்பார்த்ததைப் போல் விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் உரை நிகழ்ந்துள்ளது. இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக உள்ளதென்றும் அதற்கான சமாதான நல்லெண்ண சூழலை அரசே முன்னெடுத்து செல்ல வேண்டும் என சமாதானம் பற்றி சுருங்கக் கூறியிருக்கின்றார்.

இதற்கு முன்பு எத்தனையோ தடவைகள் சமாதான பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. அவை அனைத்தும் நம்பிக்கையீனத்தின் மத்தியிலும், உறுதியற்ற நிலைப்பாட்டாலும் இடைநிறுத்தப்பட்டு யுத்தத்தின் கதவுகள் மீளவும் திறக்கப்பட்டன. இரண்டு தசாப்தங்களாக நடைபெறும் யுத்தத்தினால் கண்ட பயன் ஏதும் இல்லை, வெறும் உயிரிழப்புகளும், பொருளாதார நாசமுமே நடைபெற்றது. எனவே இந்த யுத்தத்திற்கு சமாதான வழியிலான அரசியல் தீர்வே முடிவாகும். அதற்கான தருணமும், சூழ்நிலைகளும் உருவாகி இருக்கின்றது. இது வீண்விரயமாகி விடக் கூடாது. இருதரப்பாரும் நம்பிக்கையுடனும், புரிந்துணர்வுடனும், பொறுமையாகவும் நடந்து கொண்டு சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும். இதுவே இன்று எமது நாட்டிற்கு கட்டாய தேவையாகும்.

இன்றைய சமாதான முயற்சியை வரவேற்பவர்களும் உண்டு. அதே போல் தமது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்ள எதிர்த்து செயல்படுபவர்களும் உண்டு, எதிர்ப்பவர்கள் யுத்தத்தின் மூலம் தான் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு என்றும் மேலும் சிலர் ஏகாதிபத்திய வாதிகளின் நாட்டை பிரிக்கும் சூழ்ச்சியெனவும் கூறிவருகின்றனர். இவர்கள் ஒன்றை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று யுத்தத்தினால் இலங்கை தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் நாசம் பற்றி இவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இலங்கைக்கான சமாதானத்திற்கான வழிபற்றிய திடமான திட்டங்களை இவர்கள் முன்வைக்க வேண்டும். இல்லையேல் தற்காலிகமாக இவர்களுக்கு இன்றைய நிலைப்பாடு கை கொடுத்தாலும் எதிர்காலத்தில் இவர்களது அரசியல் இருப்பையே கேள்வி குறியாக்கி விடும்.

அரசும் இவ் விடயத்தை கவனமாகவும், தெளிவாகவும் தீர்க்க தரிசனத்துடனும் கையாள வேண்டும். இல்லையேல் இலங்கை- இந்திய ஒப்பந்தத்திற்கு நேர்ந்தகதியாகி விடும். இந்தியா சமாதான முயற்சிகளின் போது நடந்த நிகழ்வுகளிலிருந்து பாடங்களை கற்றுக் கொண்டு அவை நடைபெறாதவாறு அவதானத்துடன் அரசு செயல்பட வேண்டும்.

சிங்களவர்கள், சிங்களவர்களாகவும், தமிழர்கள் தமிழர்களாகவும், முஸ்லிம்கள் முஸ்லிம்களாகவும் சிந்திக்காதவாறு நாம் இலங்கையர் என்ற ரீதியில் சிந்தித்து முதல் அடிவைக்க நடைபெறப் போகும் பேச்சுவார்த்தைகள் முதல்படியாக அமையட்டும்.

ஆசிரியர்.

# மாவீரர் தின உரை சமாதானத்துக்கான தீர்வை முன்னெடுக்குமா?

செந்தணலோன்

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வொன்றைக் காண்பதற்கான சமாதானப் பேச்சுக்களில் பங்கேற்பதற்கு நிபந்தனை எதையும் விதிக்கவில்லை ஆனால் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு உகந்ததான் சூழ்நிலையும் இயல்பு நிலையும் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையே நாம் வலியுறுத்துகின்றோமென்ற உள்ளார்ந்த விடயங்களை கொண்டதான விடுதலைப்புலிகள் இயகத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் தினச் செய்தி சர்வதேச சமூகத்தின் எதிர்பார்புகளை ஒட்டியதாகவே அமைந்துள்ளது. வருடத்திற்கொருமுறை



அதுவும் விடுதலைப் போரில் உயிர்நீத்த போராளிகளை நினைவுகூரும் மாவீரர் தினத்தில் மட்டுமே விடுதலைப்புலிகள் இயக்கத்தின் எதிர்கால அரசியல் மற்றும் இராணுவ முன்னெடுப்புகள் நிலைப்பாடுகள் தொடர்பாக உரையாற்றும் பிரபாகரனின் பேச்சினை உள்ளூர் அரசியலாளர்களும் சர்வதேச சமூகமும் உன்னிப்பாக கவனித்து வருவது குறிப்பிடத்தக்கதோர் நிகழ்வாகும்.

கடந்த காலங்களில் செவிமடுக்கப்பட்ட பிரபாகரனின் மாவீரர்தினச் செய்திகளில் காணப்பட்ட கடும்தொனியை இம்முறை காணவில்லை மாறாக சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான முன்னெடுப்புகள் தொடர்பாக இதுவரை காலமும் புலிகளிடம் இருந்த இறுக்கத்தை தளர்த்தி அதன் பிடியை இலங்கை அரசின் பக்கம் வீசியிருப்பதாகவே அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதுமட்டமன்றி பிரபாகரனின் நீண்டமாவீரர்தின உரையில் இனநெருக்கடிக்கு தீர்வொன்றைக் காணவேண்டுமென்பதற்கான முன்னோடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நோர்வேயின் சமாதான நல்லெண்ண முயற்சிகளுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளதுடன் யாழ்குடாநாட்டின் மீதான பாரிய போர் முன்னெடுப்புகளில் சிக்கித்தவித்த அரச படைகளை மீட்பதற்கு இந்திய அரசு கடற்படை உதவி நல்க முன்வந்த விடயமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாணச்சமரில் புலிகளின் இறுதிவெற்றியைத் தவிர்க்க உலகநாடுகள் பல நவீனரக ஆயுத உதவிகளை வழங்கி ஒரு தலைப்பட்சமாக நடந்து கொண்டமையையும் பிரபாகரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் ஏனைய தமிழ்க்கட்சிகள் தொடர்பான விடயத்தில் கடந்த காலத்தில் இந்திய அரசு வரதராஜப்பெருமாள் தலைமையிலான பொம்மை ஆட்சியொன்றை நடத்தியது போன்று சந்திரிகா அரசும் உயர்பீடத்தில் தமிழினத்துரோகிகளை அமர்த்தியுள்ளதென ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈபிடிபி)யினரையும் மறைமுகமாக சுட்டிக்காட்டப்படுள்ளது.

சிங்கள இனவாத ஆட்சியாளர்களை சமாதானப்பாதையை நோக்கி திசைதிருப்ப வேண்டுமெனில் அதற்கான பாரிய பொறுப்பு பொருளாதாரரீதியாக உதவி செய்துவரும் உலக நாடுகளிடமேயுள்ளது. ஏனெனில் தென்னிலங்கையின் சகல சமூகமட்டங்களிலும் பூதகரமாக வளர்ந்துவரும் சிங்கள பௌத்த பேரினவாதம் காருண்யநிலைப்பாட்டுடன் ஒரு போதும் தமிழ் மக்களை அரவணைத்துக் கொள்ளுமென நாம் நினைக்கவில்லை. இன வாதப்பிடியிலிருந்து விடுபடாமல் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை தொடருமெனில் நாம் பிரிந்து சென்று தனியான தமிழீழ தனியரசை அமைப்பதைவிட வேறுவழியில்லை, காலமும் வரலாறும் உலகமும் அதனை ஏற்றுக் கொள்ளுமென்றும் பிரபாகரன் தனது மாவீரர்தின உரையில் இறுதியில் அழுத்தம் நிறைந்த தனது அரசியல் நிலைப்பாட்டினை வெகுவாக உணர்த்தியுள்ளார்.

வடக்கு கிழக்கின் இராணுவ கட்டுப் பாடற்ற சகலபகுதிகளிலும் மாவீரர் தினவைபவங்கள் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. அதேநேரம் அன்றைய தினம் வடக்குகிழக்கு பகுதிகளிலுள்ள படைமுகாம்களும் தலைநகர் கொழும்பு உட்பட தென்னிலங்கையின் பலபகுதிகளிலும் அதிஉச்ச பாதுகாப்பு நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

முல்லைத்தீவுக்கடற்கரையோரம் அலம்பில் பகுதியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள கரும்புலிகள் நினைவாலயத்தில் 158 கடல், தரை கரும்புலிகள் அணிவகுத்து நிற்க பிரபாகரன் பிரதான ஈகைச் சுடரை ஏற்றிவைத்து அஞ்சலி செலுத்தியதுடன் முதலாவதாகப் பலியான லெப்டினன் சங்கரின் உருவப்படத்துக்கும் பிரபாகரன் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதேவேளை மாவீரர் தினமன்று யாழ்குடாநாட்டிலுள்ள ஆலயங்களில் மணியோசை ஒலிக்கக்கூடாதென்ற படையினரின் கண்டிப்பான உத்தரவையும் மீறி யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்தின் உள்ளேயுள்ள பரமேஸ்வரர்கோயிலில் மணியோசையை ஒலிக்கச் செய்து ஈகைச்சுடர் ஏற்றியமை படைவட்டாரங்களில் ஆத்திரத்தை ஊட்டியுள்ளதாகவும் தெரியவருகிறது. இதற்கெல்லாம் அப்பால் இச்சம்பவங்களெல்லாம் "தொடரும் போரை" முடிவுக்கு கொண்டு வந்து தமிழ் மக்களுக்கு கௌரவமான தீர்வொன்று அவசியமென்பதை சகல மட்டத்திலும் உணர்த்துவதாகவேயுள்ளது.

விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் 1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் திகதி தொடக்கம் கடந்த 20ம் திகதி வரையான காலப்பகுதியில் 16, 599 போராளிகள் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 3407பேர் பெண்போராளிகளாவர். கரும்புலிகள் 213 பேராவர்.

இதெல்லாவற்றிற்குமப்பால் இனநெருக்கடிக்கு தீர்வொன்றைக் காண்பதற்கு நோர்வே எடுத்துவரும் சமாதான முன்முயற்சிகளை எவ்வித தடைகளுமின்றி எடுத்துச் செல்லக் கூடிய வாய்ப்பை விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தினச் செய்தி தெளிவாக எடுத்துக் காட்டகின்றதென வெளிநாட்டு இராஜதந்திரிகளும் அரசியல் அவதானிகளும் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

பிரபாகரனின் மாவீரர் தினச் செய்தி வெளியிடப்பட்ட அன்றைய தினம் கொழும்பில் தங்கியிருந்த தெற்காசிய விவகாரங்களுக்கு பொறுப்பான அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் கார்ள் இன்டர் பேர்த் உடனான சந்திப்பில் கலந்து கொண்ட மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் பலர் பிரபாகரனின் மாவீரர் தினச் செய்தி தொடர்பாக கலந்துரையாடியதாகவும் இச்சந்திப்பின் போது ஆளும்கட்சி எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் பலரும் கலந்து கொண்டதாகவும் தெரிய வருகிறது.

நிபந்தனையற்ற விதத்தில் பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தை இலங்கை அரசு இறுகப் பற்றிக்கொள்ளத் தவறினால் சமாதானத்திலிருந்து நழுவிப் போனதான குற்றச்சாட்டை இலங்கை அரசாங்கமே ஏற்க வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகலாமென மேற்கு நாட்டு இராஜதந்திரிகள் அச்சந்திப்பின் போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேநேரம் இச்சந்திப்பில் கலந்து கொண்ட ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரும் அரசாங்கத்தினால் கடந்த பாராளுமன்றத்தின் இறுதித்தருணத்தில் முன்வைக்கப்பட்டதுமான அரசியல் தீர்வுத் திட்டத்தை கடுமையாக எதிர்த்தவரும் சிங்கள பௌத்த மகாசங்கத்தினரின் நம்பிக்கைக்குரிய வருமான மகிந்த ராஜபக்ஷ இனநெருக்கடிக்கு தீர்வு காண்பது தொடர்பான விடயத்தில் மேற்கு நாடுகளின் தலையீடு குறிப்பாக நோர்வேயின் மத்தியஸ்த முயற்சிகளை சிங்கள மக்கள் விரும்பவில்லையென அச்சந்திப்பில் தெரிவித்த கருத்து இராஜதந்திரிகள் மத்தியில் கிலேசத்தை ஏற்படுத்தியதாகவும் தெரியவருகிறது.

இவ்வாறே ஆளும்பொதுஜன ஐக்கிய முன்னணியின் அதிகாரமிக்கவரான பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்கா தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் கருத்துக்களும் இனநெருக்கடிக்கும் மோதல்களுக்கும் தீர்வொன்றைக்காண முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு முட்டுக் கட்டையாகவேயுள்ளன.

எமது உள்நாட்டுப்பிரச்சினையில் சமாதானம் செய்யப்போவதாகக் கூறிக் கொண்டு உள்ளே நுழையும் வெளிநாடுகளின் தாளத்திற்கு ஏற்ப எம்மால் ஆடமுடியாது. புலிகளை ஒழித்துக் கட்டும்வரை போர்நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லையென்று கர்ஜிக்கும் தொனியுடனான பிரதமரின் பேச்சு எதிர்கால அரசியல் நிகழ்வுகளில் பல்வேறு எதிர் நிகழ்வுகளை உருவாக்க கூடியவை.

அதேநேரம் நிபந்தனையின்றி பேச்சுவார்த்தைக்கு முன்வந்திருக்கும் பிரபாகரனின் மாவீரர்தின உரையின் சகல அம்சங்களும் கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.

தொடர்ச்சி 4ம் பக்கம்

**தேவதாசிகள் தொடர்பான இவ்வாய்வுக் கட்டுரை கலாநிதி செல்வி திருச்சந்திரனின் தமிழ் வரலாற்றுப் படிமங்களில் ஒரு பெண் நிலை நோக்கு எனும் புத்தகத்திலிருந்து வாசகர்களுக்காக தொடர்சியாக தொகுத்து வழங்கப்படுகிறது.**

**தொகுப்பாசிரியர்**

## காலனித்துவ ஆட்சியின் கீழ்

கலாநிதி செல்வி திருச்சந்திரனின் ஆய்வு நூல்களுள் ஒன்றான தமிழ் வரலாற்றுப் படிமங்களில் ஒரு பெண்நிலைவாத நோக்கு என்னும் புத்தகத்திலிருந்து தேவதாசிகள் தொடர்பான தோற்றம் வளர்ச்சி, அதன் முரண்பட்ட தன்மை என்பன தொடர்பாக கடந்த சில வாரங்களாக இப்பகுதியில் தொடர்ச்சியாக தொகுத்து வழங்கப்பட்டு வருகின்றன என்பதை வாசகர்கள் அறிவர். சோழர் காலத்தில் தேவதாசிகளுக்கு வழங்கப்பட்ட சமூக அந்தஸ்தும் சமூகத்தில் காணப்பட்ட மேன் நிலையான போக்கும் அன்னியரின் வருகைக்குப் பின் வீழ்ச்சிடைந்து வந்தமைக்கான காரணங்களை இனி ஆவதானிப்போம்.

தேவதாசிகள் எனச் சொல்லப்படும் இவர்கள் வரலாற்று ரீதியில் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களாகவும் பின்னர் தெய்வத்துக்கு சமனாக மதிக்கப்பட்டவர்களாகவும் அதன் பின் வந்த காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இவர்களது செல்வாக்கு மிக மிக குறைந்து ஆண்களின் இச்சையை பூர்த்தி செய்யும் போகப் பொருளாக மாற்றப்பட்டு கீழ்த்தரமான நிலையில் பாவிக்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது.

சோழர் காலத்தில் தேவதாசிகளின் வீழ்ச்சியானது பிரித்தானியர்களின் வருகைக்குப் பின்னரே நடைபெற்றது. தேவதாசி முறையின் வீழ்ச்சிக்கு பல காரணங்கள் இருந்தன. அவற்றில் சில கோட்பாட்டு ரீதியாகவும் சில அமைப்பியல் தொடர்பாகவும் இருந்தன.

பிரித்தானியரின் வருகைக்குப் பின் கோயில்களில் அரசின் ஆதிக்கம் முற்றாக இல்லாமல் போய்விட்டது. இவ்வாறு கைவிடப்பட்ட நிலையில் இருந்த சமயம் சம்பந்தமான விடயங்களில் பிராமணர்கள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். பிராம



# நாகரீகம் என்ற போர்வைக்குள் மறுக்கப்பட்ட பெண்களின் சுதந்திரம்

ணர்கள் இவ்வாறு ஆதிக்கம் செலுத்துவதற்கும் ஊடுருவுவதற்கும் உள்ளூர் நிலக்கிழார்கள் தமது சமூக, பொருளாதார ரீதியில் இவர்களுக்கு உடந்தையாக இருந்தார்கள் என்பது ஒரு முக்கியமான அம்சமாகும். கோயிலில் நடந்த சமய சம்பந்தமான பூஜைகள், ஏனைய சடங்குகள் என்பன பிராமணர்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன இவ்வாறு நிலைமை மாற்றம் அடைந்ததால், தேவதாசிகளுக்கென அரசினால் வழங்கப்பட்ட அந்தஸ்தும் சலுகைகளும் பின்னர் இல்லாமல் போயின. இதனால் இவர்கள் இந்த உள்ளூர் நிலக்கிழார்களினது வைப்பாட்டிகளாக மாறினர். இவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளும் அந்தஸ்துகளும் நிறுத்தப்பட்டமையால் பிராம ணர்களிலும் நிலக்கிழாந்தர்களிலும் இவர்கள் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது இதனால் இவர்கள் ஆண்களின் காம இச்சையை தீர்க்கும் போகப் பொருட்களாக மாறினர்.

கலையின் காப்பாளர்களாக இருந்த இத்தேவதாசிகளுக்கான முறையான சமூக அந்தஸ்து வழங்கப்படாமை காரணமாக இவர்களை பராமரித்து பயிற்றுவிப்பதற்கு போதிய ஒழுங்கமைப்புகள் இல்லாமல் அவை அருகி அழிந்து செல்லும் நிலைகள் ஏற்பட்டன. அனேகமாக தேவதாசிகள் இக்காலகட்டங்களில் ஒழுங்கமைப்புகள் இல்லாத இரசனையற்ற ஆடல் பாடல்களில் ஈடுபட்டனர் என ஆய்வாளர் கூறுகின்றார். மேலும் இவர்கள் கீழ் சாதியின ராக சமூகத்தால் வரையறுக்கப்பட்டு, அவர்களது எந்தவொரு செயலும் சாதியின் பெயரால் இழிவு செய்யப்பட்டு, இவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டனர். காலனித்துவ ஆட்சியின் பின்னர் இவ்வாறான நிலைமைகள் எமது பிற்போக்கான சமுதாயத்தில் எழுதப்படாமல் பெண்களுக்கென்றே வகுத்து வைத்திருக்கும் சட்ட திட்டங்களையும் ஒழுக்க முறைகளையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு

போன்ற கொடுமை சமூக வழக்காறுகள் தோற்றம் பெறுவதற்கு இது வழிவகுத்தது. பிற்கா லங்களில் இவை சமூகக் கொடுமைகளில் ஒன்றாக கணிக்கப்பட்டு இந்தியாவின் பிற்போக்கு முறைகளில் இவையும் ஒன்றாகக் கருதப்பட்டன.

மேலும் இசை நடனம் போன்றவற்றில் காணப்பட்ட தனியுடமை மரபு நீக்கப்பட்டது. இக்கீழைத்தேய பண்புகள் அவற்றை மீட்டெடுத்த வேதாகமத்தினரால் இனங்காணப்பட்டன. அன்றிலிருந்து தேவதாசி நடனம் பரத நாட்டியம் என பெயர்பெற்றது. அத்தோடு கர்நாடக இசை கௌரவமானதும் தெய்வீகமானதுமான குடும்பப் பெண்ணைச் சென்றடைந்தது நுண்கலைப் பெண்களையும் குடும்பப் பெண்களையும் பிரித்த இடைவெளி காலப் போக்கில் இந்தியப் பகைப்புலத்தில் இல்லாமல் போயிற்று எனினும் இது ஒரு துறைக்குள் நுழைந்தது. காலங்காலமாக இருந்த காரணமாக இருந்தன.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சுதேசிகள் மத்தியில் வாழ்ந்த உயர் குலத்தவர்கள் அடக்குமுறையுடன் பழக்கவழக்கங்களை ஒழித்து சீர்திருத்தக்கூடிய வேலைகளில் ஈடுபட்டனர். அவற்றில் தேவதாசிகள் தொடர்பான பிரச்சி னையில் மூன்று பகுதி மக்கள் இணைந்து அவர்களது எதிர்ப்பினை காட்டினர்.

அவர்களில்

**பிரித்தானியர்**

**உள்ளூர் மக்களை நாகரீகமானவர்களாக மாற்றும் பணி அவர்களுக்கும் உண்டு என கருதினர்.**

**இரண்டாமவர்கள்**

**உள்ளூர் உயர் குழாத்தவர், தேசியவாதிகள் சமூக சேவையாளர்கள் என்போர் தேவதாசிகள் அமைப்பை கேள்விக்குள்ளாக்கி அவ்வாறான ஒரு அமைப்பு இருப்பதானது இந்திய பண்பாட்டுக்கு கறையை ஏற்படுத்துவதாக கூறினர்**

**மூன்றாமவர்களான**

**பாதிரிமார், ஏகாதிபத்தியவாதிகள், உள்ளூர் மத்தியதரவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அதை ஒரு தீய ஒழுக்கமாகக் கருதினர் இவர்கள் விக்டோறியாகாலத்து கொள்கைகளால் பாதிக்கப்பட்டவர்களாக காணப்பட்டனர்.**

**இது தொடர்பில் முரண்பட்டவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்தமையால் அவர்களது நோக்கம் நிறைவேறியது. இதனால் தேவதாசிகள் முறை ஒழிக்கப்பட்டது. இது பின்னர் பல சிக்கல்களை உண்டுபண்ணியது.**

தேவதாசிகளின் சடங்குகளோடு சம்மந்தப்பட்ட அந்தஸ்து அவர்களுடைய சமூக பொருளாதார நிலையில் தனியுரிமையும் சுதந்திர மும் உடையவர்களாக இருந்தன. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டதனால், வரலாற்று ரீதியாக பெண்களுக்கிருந்த இம் முக்கியமான அம்சங்கள் இல்லாமல் போயின. அவர்கள் சமூக ரீதியாக பின் தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். வரை யறுக்கப்பட்ட குடும்ப எல்லைக்குள்ளோ, குடும்ப பணிகளுக்குள்ளோ, பிள்ளைப் பராமரிப் புகளுக்குள்ளோ ஈடுபடாமல் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருந்த இவர்கள். இவ்வாறான உரிமைகள் மறுக்கப்பட்டதால் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. இதன் மூலம், உடன் கட்டை ஏறுதல், பெண் குழந்தைகளை அழித்தல், விதவைகளை ஒதுக்கி வைத்தல்

தேவதாசிக் கருத்தியல் இப்போது தமிழ்ச் சினிமா நடிகைகளைச் சென்றடைந்தது. பரத நாட்டியம் ஆடியவர்களும், கர்நாடக இசைபாடியவர்களும், மதிப்புக்கும் சமய ஆத்மீக விஷயங்களுக்கும் நெருக்கமானவர்களாக பார்க்கப்பட்ட அதேவேளை சினிமாவில் நடிகைகளாக வந்த பெண்களை விஜய நகர காலத்து தேவதாசிகள் எவ்வாறு தரக்குறைவாக மதிக்கப்பட்டார்களோ அவ்வாறே இவர்களும் கணிக்கப்பட்டார்கள்.

இப்போக்கு சிறிதளவு சீர்ப்பட்டாலும் சினிமா நடிகைகளின் படிமங்கள் ஒரு மட்டத்தில் லட்சிய வடிவங்களாகவும் இன்னொரு மட்டத்தில் கவர்ச்சிப் பண்டங்களாகவும் மலிவு பொருட்களாகவும் காட்சி தருகின்றது.

இம்முறை தொகுக்கப்பட்டிருக்கும் தேவதாசிகளின் வீழ்ச்சிக்குரிய காரணங்களின் ஆய்வாளர் மிக நுணுக்கமாக உட்சென்று தர வுகளைத் தராவிட்டாலும் இம்மேலோட்டமான விடயங்கள் கூடி மிகக் கருத்துச் செறிவானதாக இருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. பரத நாட்டியமும் கர்நாடக இசையும் இத்தேவதாசிகளாலேயே வளர்க்கப்பட்டு வந்தது எனினும் இதில் பரதநாட்டியம் மட்டும் காலப்போக்கில் தேவதாசிகளின் நடனமாக மாறி பின்னர் இந்தியப் பகைபுலத்தில் இல்லாமல் போனது என அய்வாளர் குறிப்பிடுகின்றார்.

இது வரை தொகுக்கப்பட்ட தேவதாசிகள் தொடர்பான இவ்விடயங்கள் அனைத்தும் தென்னிந்திய வரலாறா. இனி அடுத்த இதழில் இலங்கையில் எவ்வாறு தேவதாசிகளின் வருகை ஏற்பட்டது. அவர்களது அமைப்பு முறை எவ்வாறு அமைந்திருந்தது என்பதனை அவதானிப்போம்.

தொடரும்....

**சுதர்ஷினி**

## தனித்துவம் தழைக்க

கற்களை அடுக்கி, அடுக்கி
மாளிகை கட்டும் கலைஞனே
எந்த வரிசையில் நீ இடம் பிடித்தாய்!

கையில் அகப்பட்டதை எல்லாம்
சேர்த்துச் சோடித்து
சித்தரித்தவை யாவும்
ஒரு மார் அடைமழைக்கே நிற்காது
மண்ணாய்க் கரைந்ததுவே!

மகாகுரு! உன்படைப்பு
கால்நீட்ட முடியாத
கட்டாந்தரையாகி
காட்சி அளிப்பதைக்
கண்திறந்து பார்த்திடு!
காரியம் புரிந்துவிடும்! கலங்காதே!
பொழுதும் சரிந்து போகின்றது....
பொன்னை உருக்கிப் புடம்போட்டு
பொங்கும் உணர்ச்சி கொப்பளிக்க
புதிய சிற்பி வானத்தில்
பொலவாய் எழிலாய்ப் படைக்கின்றான்!
பொறுமையாக மனத்திலெடு!
ஆய்ந்து அளந்த பளிங்குக்கற்கள் அணிசேர்க்க
அருமை படையல் தருவாய் நீ.
தனித்தவமாய் அது தழைக்கட்டும்,
அதனால் உள்ளம் பூரிக்கும்!
அண்டைஅயலை வாழ்விக்கும்!

✻ மு.சடாட்சரன்


# விடுதலை புலிகள் விதிக்கும் நிபந்தனைகளை வைத்தே புலிகளை தாக்கும் அரசு...




கௌதமன்

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வொன்றை எட்டுவதற்காக நிபந்தனையற்ற பேச்சுக்களுக்குத் தயாரென விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவித்துள்ளார். கடந்த மாத முற்பகுதியில் வன்னி சென்ற நோர்வேயின் விஷேட பிரதிநிதி எரிக் சோல்ஹெய்ம் பிரபாகரனை சந்தித்த பின்னர், புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்கு தயாராயிருப்பதாகவும் அந்தப் பேச்சுக்களுக்காக அவர் நிபந்தனைகள் எதனையும் விதிக்கவில்லை எனவும் கூறியிருந்தார். ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சரை சந்தித்த போதும் எரிக்சோல்ஹெய்ம், பிரபாகரனின் இந்த நிலைப்பாட்டை விளக்கிக் கூறியிருந்தார். எனினும் புதிய பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசிய ஜனாதிபதி, பேச்சுக்கு புலிகள் நிபந்தனைகளை விதித்திருப்பதாகவும் இதனால் அவர்கள் நிபந்தனைகளை அறிந்த பின்பே அடுத்த நகர்வு குறித்து முடிவு செய்யப்படுமெனவும் கூறியிருந்தார். எனினும் இந்து பத்திரிகைக்கு பேட்டியளித்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பேச்சுக்களுக்கு புலிகள் நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை என்றே சோல்ஹெய்ம் தன்னிடமும் ஜனாதிபதியிடமும் கூறியிருந்ததாகவும் எனினும் ஜனாதிபதி அதனைச்சற்று தவறாக புரிந்து கொண்டு புலிகள் நிபந்தனை விதித்திருப்பதாக கூறியிருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் போர் நிறுத்தம் இராணுவ வாபஸ் பொருளாதாரத் தடை நீக்கம் எல்லாம் பேச்சுவார்த்தைக் காலத்தில் புலிகள் தங்களை நன்கு பலப்படுத்த பயன்டுத்தும் ஆயுதங்களெனக் கூறிய இராணுவ தலைமைப்பீடம், பேச்சுக்களுக்கு புலிகள் விதிக்கும் முன் நிபந்தனைகள் எதனையும் அரசு ஏற்கக் கூடாதெனவும் யுத்த நிறுத்தமென்றொன்று ஏற்படுவதாயின், அரசு புலிகள் பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற்று இறுதி உடன்பாடென்று எட்டப்பட்ட பின்பே அதுபற்றி முடிவெடுக்கப்படுமெனவும் கூறியிருந்தது. புலிகள் நிபந்தனை எதுவுமின்றி இதுவரை காலமும் பேச்சுக்களுக்கு முன்வராத நிலையில் இம் முறையும் புலிகள் பேச்சுக்களுக்கு நிபந்தனைகளை விதிப்பார்களென்றே அனைவரும் எதிர்பார்த்திருந்த வேளையில் பேச்சுக்களுக்காக தான் நிபந்தனைகள் எதனையும் விதிக்கப் பேவதில்லை எனக் கூறி அனைவரையும் ஆச்சரியமடைய வைத்த பிரபாகரன் மோதலற்ற சமாதான சூழலொன்றில் பேச்சுக்கள் நடைபெறும் போது அது பேச்சுக்களில் நல்ல முடிவுகளை எட்டுவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்துமெனவும் கூறியுள்ளார். எனினும் பேச்சுக்களுக்காகப் போரை நிறுத்தும் நிலையில் அரசு இல்லையென பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறியுள்ளதுடன் பயங்கரவாதத்தடை வேருடன் அழித்தொழிக்கும் வரை இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாதெனவும் கூறியுள்ளார்.



மாவீரர் தின உரையில், நிபந்தனையற்ற பேச்சுக்களுக்குத் தயாராயிருப்பதாக புலிகள் அறிவித்ததன் மூலம் தற்போது அரசியலரங்கில் பந்து அரசின் பக்கத்திற்கு தட்டிவிடப்பட்டுள்ளது. எரிக் சோல்ஹெய்மின் வன்னி விஜயத்தை தொடர்ந்து சமாதானப் பேச்சுக்களின் சாத்தியம் அதிகரித்தநிலையில் பிரபாகரனின் அடுத்த அறிவிப்புக்காக மாவீரர் இறுதிநாள் வரை முழு உலகமும் காத்திருந்தது. இந்த நிலையில் பிரபாகரனின் இந்த உரை நாட்டில் அமைதியை தோற்றுவிக்க இலங்கை அரசுக்கு புலிகள் நல்லதோர் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளதாகவே பல நாட்டு ராஜதந்திரிகளும் தெரிவித்துள்ளனர். யுத்த நிறுத்தம் படை வாபஸ் என முன்னைய நிபந்தனைகளை இம்முறையும் புலிகள் விதிப்பார்கள் என அனைவரும் எதிர்பார்த்திருந்த வேளையில் அவ்வாறு அவர்கள் நிபந்தனை எதனையும் விதிக்காதது அரசுக்கு ஒரு விதநெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. நோர்வே போன்றதொரு மூன்றாந்தரப்பு அனுசரணையாளர் இந்த விவகாரத்தில் புகுந்த பின்பும் புலிகள் பேச்சுக்களுக்கு நிபந்தனைகளை விதித்து குழப்ப முயல்கிறார்கள் என அவர்கள் மீது எல்லாப் பழியையும் போட்டுவிட்டு தாங்கள் தப்பாலாமென அரசு நினைத்திருந்த அதே நேரம், புலிகள் விதிக்கும் இந்த நிபந்தனைகளை வைத்து அவர்கள் நன்கு பலவீனமாகிவிட்டார்கள் மீண்டும் தங்களைப் பலப்படுத்த நோர்வேயின் இந்த அனுசரணை முயற்சியை பயன்படுத்த முனைகிறார்கள், யுத்த நிறுத்தமுமில்லை படை வாபசும் இல்லை இதற்குக் கூட்டுப்பாவிட்டால் பேச்சும் இல்லை எனக் கூற இராணுவத்தினர் தங்களை தயார்படுத்தியிருந்த வேளையில் நிபந்தனை எதுவுமில்லை எனப் பிரபாகரன் கூறியிருப்பது பேச்சுக்களின் போது யுத்தம் தொடருமென அரசு ஒரு வித நிபந்தனை போடுவது போல் கூறிவருவதற்கு சர்வதேச ரீதியில் எதிர்ப்பை ஏற்படுத்தி, பேச்சுக்கள் ஆரம்பமாகும் பட்சத்தில் போர் நடவடிக்கையை நிறுத்துமாறு இலங்கை அரசை சர்வதேச சமூகம் நெருக்குதலுக்குள்ளாக்கும் சூழ்நிலை தோன்றி வருகிறது.

தான் விதிக்கும் நிபந்தனைகளை வைத்தே தனக்கடிக்க முயலும் அரசை நிபந்தனைகள் எதனையும் விதிக்காது பேச்சுக்களுக்கு வருமாறு புலிகள் அழைத்திருப்பதன்மூலம் தாங்கள் எதிர்பார்க்கும் யுத்த நிறுத்தத்தை இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் கொடுக்கும் அழுத்தமொன்றின் மூலம் ஏற்படுத்த புலிகள் முயன்றிருப்பது ஒரு வித அரசியல் சாணக்கியமே. யுத்தம் நிறுத்தப்பட்டு நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்படவேண்டும் என்பதற்காக ஆரம்பிக்கப்படவுள்ள பேச்சே யுத்தத்தில் பாதிக்கப்படுவதை சர்வதேச சமூகமும் ஏற்குமானால் யுத்தத்தை தொடர்ந்து கொண்டே பேசமுடியும். ஆனால் எந்த மக்கள் இனியும் துன்புறக் கூடாதென்பதற்காக சமாதானம் ஏற்படவேண்டுமென சர்வதேச சமூகம் விரும்புகிறதோ அந்த சமூகம் யுத்தம் தொடர்வதன் மூலம் ஏற்படும் சாதக பாதக நிலைமை பேச்சுக்களின் போக்கில் பெரும் தாக்கம் ஏற்பட அனுமதிக்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. அதேநேரம் யாழ்குடாநாட்டில் 1995ம் ஆண்டில் படையினர் மேற்கொண்ட ரிவிரச இராணுவ நடவடிக்கை மூலம் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அங்கிருந்து உடுத்திய உடுப்புகளுடன் அடுத்து எங்கு செல்வதென்று வகையறியாது வெளியேறிய போது எதுவுமே செய்யாது கைகட்டிப் பார்த்துக்கொண்டிருந்த சர்வதேச சமூகம் புலிகள் ஆணையிறவைக் கைப்பற்றி தென்மராட்சியினுள் நுழைந்து யாழ். மாநகர சபை எல்லைக்குள் நுழைந்த போது இலங்கை அரசு எழுப்பிய அவலக்குரலைக் கேட்டு அங்கு சிக்கிப் போயிருந்த 30,000 படையினரை மீட்கவும் அவர்களுக்கு உதவவும் அயல்நாடான இந்தியா உட்பட வல்லரசுகள் வரை பல நாடுகள் முண்டியடித்து முன்வந்ததுடன் இலங்கைப் படையினரை இராணுவ ரீதியில் எந்தளவுக்கு பலப்படுத்த முடியுமோ அந்தளவிற்குப் பலப்படுத்தி புலிகளுக்கெதிரான போரில் சர்வதேச நாடுகளும் மறைமுகமாகக் குவித்ததையும் பிரபாகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அப்பாவி மக்கள் படை நடவடிக்கைக்கு அஞ்சி வெளியேறிய போது வாராதிருந்த இந்த சர்வதேச சமூகம் இராணுவத்தினருக்கு ஆபத்தென்றதும் அதற்கு உதவ முன்வந்திருப்பதும் புலிகள் இலங்கையில் தனிநாடொன்றை உருவாக்க அனுமதிக்க முடியாதெனக் கூறிவருவதும் நகைப்புக்கிடமானது. அன்று இந்த நாடுகள் வழங்கிய மிகப்பெருமளவு ஆயுத உதவிகள் புலிகளின் யாழ்நகர் நோக்கிய நகர்வை சற்றுத் தாமதப்படுத்தியதாகவும் கூறிய பிரபாகரன் எப்படியும் யாழ். நகரை தாங்கள் கைப்பற்றியே தீருவோமெனவும் உறுதி கூறியுள்ளார். அவரது இந்தக் கூற்றானது யுத்த நிறுத்தமின்றி பேச்சுக்கள் நடத்த முயலும் அரசின் நடவடிக்கைக்கு பெரும் மனக்கிலேசத்தையும் ஏற்படுத்தியிருக்கும். அத்துடன் பேச்சுவார்த்தை நடைபெறும் காலத்தில் யாழ்ப்பாணத்துக்கான போர் பெரும் எதிர் விளைவுகளைக் கூட ஏற்படுத்திவிடலாமெனவும் அஞ்சப்படுகிறது. குடாநாட்டுப் போரையொட்டி முப்படைகளும் அவசர அவசரமாக நவீனமயப்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு நாடுகளிலுமிருந்தும் யுத்த தளபாடங்கள் வந்தவண்ணமுள்ளன. மேலும் பல நாடுகளிலிருந்து ஆயுத தளபாடங்கள் இங்கு வந்து சேரவுள்ளன. புலிகளும் தங்களை நன்கு பலப்படுத்தி வருகிறார்கள்.

குடாநாட்டுப் போர் முனையில் தினமும் மோதல்கள் நடைபெற்று வருகின்றன. அங்கு நிலைகொண்டுள்ள இருதரப்பும் யுத்தமுனைகளில் மிகக்குறுகிய இடைவெளியிலேயே தயார் நிலையில் நிற்கின்றனர். இதனால் திடீர் திடீரென நடைபெறும் மோதல்கள் சில வேளைகளில் பாரிய சமராகக் கூட மாறலாம்.

இந்த நிலையில் நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு புலிகள் தயாராகியுள்ளதாலும் முன்னரைப் போலன்றி கடும்போக்கை கடைப்பிடிக்கும் பிரதமரும் மிகமோசமாக இனவாதம் பேசி நோர்வேயின் சமாதான முயற்சியை முற்று முழுதாக எதிர்த்து வரும் ஜே.வி.பி, பத்து ஆசனத்துடனும் புதிதாக இனவாதம் பேசும் சிஹல உறுமய ஒரு ஆசனத்துடனும் பாராளுமன்றில் இருப்பதாலும் வெறுமனே இந்தப் பிரச்சினையை லாபநோக்கம் கருதி மதில்மேல் பூனை போலிருந்து செயற்படும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுமிருக்கையில் எந்த அடிப்படையில் எவ்வாறு இந்தப் பேச்சுக்கள் முன்னெடுத்துச் செல்லப்படப் போகின்றன என்பதே தற்போது அனைவர் முன்பும் எழுந்துள்ள கேள்வியாகும்.



# நிவாரணத்திற்கு கையேந்தி நிற்கும் குடா நாட்டு மக்கள்

கடந்த 17 ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் போரின் சாபக் கேடாகத் தமிழ் மக்கள் இடம் பெயர்வு என்ற அவலத்தை அனுபவித்து வருகின்றனர். வடக்கு- கிழக்குப் பிரதேசங்கள் முழுவதிலும் இந்த இடப்பெயர்வு அவல நிலை தொடர்ந்து நீடிக்கின்றது. இதற்கு யாழ்ப்பாணக் குடாநாடும் விதிவிலக்கல்ல.

தற்போது குடா நாட்டில் வசிக்கக் கூடிய சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் குடும்பங்களில் ஒரு லட்சத்து 16 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணத்துக்கும் மாதாந்தம் அரசிடம் கையேந்தும் நிலையில் இருக்கின்றனர். இது இடம் பெயர்ந்தோரின் பிரச்சனை எவ்வாறு இருக்கும் என்பதைப் புரியவைக்கப் போதுமான தகவலாக இருக்கும்.

இவ்வாறு உலர் உணவு நிவாரணத்தைப் பெற்று வரும் இடம் பெயர்ந்த மக்களின் கணிசமானளவு தொகையானோர் வேறெந்த வருமானத்தையோ, வாழ்வாதாரத்தையோ கொண்டவர்களல்ல, குறிக்கப்பட்ட சில பிரதேசங்கள் மனித நடமாட்டத்திற்குத் தடை செய்யப்பட்டிருப்பதாலும், முழுமையாக இடம் பெயர்ந்திருப்பதாலும், மாற்றுத் தொழில் வசதிகளின்மையாலும், மீன்பிடி, விவசாய முயற்சிகளுக்கு வரையறுக்கப்பட்ட பிரதேசங்களே அனுமதிக்கப்பட்டுள்ளதாலும், வேலையின்மை போன்ற பிரச்சனைகளாலும் இடம் பெயர்ந்த மக்களின் கணிசமானோர் மாற்றுப் பொருளாதாயத் தேடலை மேற்கொள்ள முடியாதிருக்கின்றது.

மாற்றுப் பொருளாதார வாய்ப்பின்றி வெறும் நிவாரணத்துக்காகக் கையேந்தும் நிலையில் உள்ள மக்களுக்கு இந்த அரசாங்கமோ அல்லது அரச அதிகரிகளோ உரிய வகையில் நிவாரணத்தை வழங்குகிறார்களா? அண்மையில் இந்த விவகாரம் நீதிமன்றத்தில் சர்ச்சைக்குள்ளாகியும் இருக்கிறது.

கடந்த மேமாதம் அசம்பாவிதங்களின் போது குருநகர் அரச களஞ்சியத்தில் 49 லட்சம் ரூபா திருட்டு தொடர்பாக நடைபெற்ற வழக்கில் அரச செயலகம் வழங்கிய கணக்கு விபரங்களை நீதிபதி சந்தேகித்தார். திருட்டுப் பெறுமதிக்குள் முன்னரே இருந்த பொருட்களும் அடக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை அடுத்து அரச களஞ்சியக் காப்பாளர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

இதையடுத்து வழக்கமாக மாதத்தின் முதல் வாரத்திலேயே வழங்கப்படும் நிவாரணம் இரண்டாவது வாரத்திலும் வழங்கப்படாத நிலையில் ஊடகங்களில் செய்தியாகியது. நிவாரணத்தை மட்டுமே நம்பியிருந்தோருக்கு உலர் உணவு நெருக்கடி ஏற்பட்டது. ஆனால் அரச செயலகம் இது குறித்து மாற்று ஏற்பாடு எதையும் செய்திருக்கவில்லை.

இதற்கிடையில் இன்னொரு விடயத்தையும் கூற வேண்டும். ஒக்டோபரில் தேர்தல் நடைபெறுவதால் நிர்வாக வேலைகள் அதிகமென்று செப்டம்பரிலேயே இரு மாத நிவாரணங்களும் வழங்கப்பட்டன. நிர்வாக வேலைகளைக் காரணம் காட்டி அரசியல் செல்வாக்கைத் தேடும் நோக்கிலேயே இரு மாத நிவாரணம் ஒன்றாக வழங்கப்பட்டதாகவும் பேச்சடிப்படுகின்றது.

இரு மாத நிவாரணத்தைப் பெற்றுக் கொண்ட பலர் தமது வறுமை நிலை காரணமாக மேலதிக பொருட்களைக் குறைந்த விலைக்கு விற்று தமது மாற்றுத் தேவைகளைச் சிறிதேனும் நிறைவேற்றினர். இந்த நிலையில் நவம்பர் மாத நிவாரணம் தாமதித்ததால் பல குடும்பங்கள் பட்டினியால் வாடின. பலர் வீதிகளில் பிச்சைக்காகக் கையேந்தினர்.

அரச களஞ்சியக் காப்பாளர் விளக்க மறியலில் இருந்த நிலையில் நிவாரணப் பொருட்களை விநியோகிக்க அரச செயலகம் மாற்று நடவடிக்கை ஏதும் எடுக்காததால் நிலைமை மோசமடைந்தது. இதனிடையே திருட்டு வழக்கு விசாரணையின் போது இந்த நிவாரண விநியோகத் தடை குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அங்கு தான் அரச அதிகரிகளுக்குச் செம்மையான "குட்டு" நீதிபதியால் கிடைத்தது. அரச செயலகம் மாற்று நடவடிக்கை எடுக்காதமை அடிப்படை மனித உரிமைகளைப் பாதிக்கும் விடயமென்றும், அரச அதிகாரிகள் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்றும் கண்டித்த நீதிபதி உடனடியாக நிவாரண விநியோகத்தை ஆரம்பிக்குமாறும் களஞ்சியக் காப்பாளரை பொலிஸ் காவலுடன் களஞ்சியங்களுக்கு கூட்டிச் செல்லுமாறும் உத்தரவிட்டார்.

நீதிபதி தனது தயவால் மேலும் இந்த உத்தரவு 24 மணி நேரத்துக்குள் செயல்படுத்தப்படுவதில் ஏதேனும் அசட்டையீனம் காட்டப்படுவதாகத் தான் கருதப்படுமிடத்து பிரதம நீதியரசருக்கு அடிப்படை உரிமை மீறல் புகாரைச் செய்ய நேரிடும் என்றும் கண்டிப்பாக எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அரச அதிபர் தனது கடமையைச் சரிவர நிறைவேற்றவில்லை என்றும் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முற்பட்டுள்ளார் என்றும் நீதிமன்றம் குற்றம் சாட்டும் அளவுக்கு அதிகாரிகள் அக்கறையின்றி இருந்தனர். சமீப காலங்களில் அரச அலுவலர்கள் பலரும் யுத்தம் மற்றும் பல்வேறு காரணங்களைக் காட்டி தமது பொறுப்புக்களை உதாசீனம் செய்து வருவதாக நிலவி வந்த குற்றச் சாட்டுக்கள் நீதிமன்றத் தீர்ப்பினால் பெரும் திருப்பத்துக்குள்ளாகியிருக்கிறது.

நிர்வாகத் துறையினருக்கு எதிராக விடப்பட்ட உத்தரவானது நிர்வாகச் சீர்கேடுகளைக் குடாநாட்டில் குறைக்கும் என்று பல்வேறு தரப்பினரும் எதிர்பார்த்துள்ளனர். உலர் உணவு நிவாரண விநியோகத்தை உரிய காலத்துக்குள் வழங்க இந்தத் தீர்ப்பு எதிர்வரும் காலங்களில் உதவியாக அமையும் என்று இடம் பெயர்ந்த மக்கள் திருப்தி கொள்கின்றனர்.

அதேவேளை இந்த நிவாரணப் பொருட்களின் தரம், விலை என்பன குறித்து இடம் பெயர்ந்தோர் விசனம் தெரிவிப்பதையும் காணமுடிகின்றது. கடந்த பல மாதங்களை உலர் உணவு நிவாரணத்துக்கு சிவப்புப் பச்சை அரிசியே வழங்கப்படுகின்றது. பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இந்த அரிசி பழுதடைந்து போயிருப்பதையும் காணமுடிகின்றது.

அதுபோக அரிசி தவிடு நீக்கப்படாமலே வழங்கப்படுகின்றது. இதனால் தவிடு நீக்க 2 அல்லது 3 ரூபாய்களை செலவிட வேண்டியிருப்பதுடன் அரிசியின் நிறையும் குறைவடைகின்றது. கடந்த பல மாதங்களாக சிவப்புப்பச்சை அரிசியே வழங்கப்படுகிறது. இதனை சோறு சமைக்கப் பயன்படுத்த முடியாதுள்ளது

நிவாரணம் எந்தவொரு மனிதனுக்கும் போதுமானதாக இல்லாத போதும் அதை உணவுக்கு நேரடியாகப் பாவிக்கக் கூடியதாகவேனும் வழங்க வேண்டும். சோறு சமைக்கப் பயன்படுத்த முடியாத சிவப்புப் பச்சை அரிசியை குறைந்த விலைக்கு விற்று புளுங்கல் அரிசியை மாற்றாக ரூபா 35 கொடுத்துக் கொள்வனவு செய்ய வேண்டியிருக்கிறது.


அதேவேளை தென்பகுதியில் மிக மலிவாகக் கிடைக்கும் அரிசி யாழ்ப்பாணத்தில் 50 ரூபாவுக்கே அரசு வழங்குகின்றது. இந்த அரிசி ரூபா 20 வரையே இங்கு இடம் பெயர்ந்தோரால் விற்கப்படுகின்றது. இதனால் அவர்கள் தமது உணவை பூர்த்தி செய்து கொள்ள முடியாதிருக்கின்றது. அதேபோல நிவாரணத்துக்கு கோதுமை மாவு வழங்கப்படுவதில்லை.

நவம்பர் மாத நிவாரணத்துக்கு பருப்புக் கூட வழங்கப்படவில்லை சிவப்பு, மஞ்சள் பருப்புகள் கலந்த நிலையில் 100 மெ.தொன் பருப்பு மிகவும் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டதால் தான் பருப்பை நிவாரணத்துக்கு வழங்கவில்லை என்று செயலக வட்டாரங்கள் கூறுகின்றன. அரசாங்கம் திட்டமிட்ட ரீதியில் யாழ்ப்பாண மக்களுக்கு தரம் குறைந்த பொருட்களை வழங்குகின்றதா என்ற கேள்வியை இது எழுப்புகின்றது.

கொழும்பிலுள்ள அதிகாரிகளே அரிசி மற்றும் நிவாரணப் பொருட்களின் தரத்தைத் தீர்மானிப்பதாகவும் அவர்கள் அனுப்புவதையே தாங்கள் விநியோகிப்பதாகவும் கூட்டுறவுச் சங்கச் சமாச வட்டாரங்கள் கூறுகின்றன. யாழ்ப்பாண மக்களின் நிவாரணப் பொருட்கள் அதிகாரிகளாலோ அல்லது அரசினாலோ திட்டமிட்ட அடிப்படையில் தரம் குறைவாக அனுப்பப்படுகின்றது.

இலவசமாகக் கொடுப்பதை எந்தத் தரத்திரலாவது கொடுக்கலாம் தானே என்ற மனோபாவமா? அல்லது தமிழன் தானே கழிவை உண்ணட்டும் என்ற எண்ணப்பாடா? இடம் பெயர்ந்து மாற்றுத் தொழில் வசதியின்றி உள்ள மக்களுக்கு தவிடு நீக்க செலவிட வேண்டிய பணமும், உடனடி உணவுக்கு பயன்படுத்த முடியாத பொருட்களை வழங்குவது போன்ற சிக்கல்கள் அவர்களை மேலும் மேலும் துன்பத்துக்குள்ளாக்குகின்றன.

இந்த விடயங்களை யாழ்ப்பாண அரச அதிகரிகளுக்குச் சுட்டிக் காட்டினால் அவர்கள் கொழும்பை நோக்கிக் கை நீட்டுகிறார்கள். ஆனால் கொழும்பிலுள்ள அதிகாரிகளின் முறைகேடுகளோ அல்லது திட்டமிட்ட நடவடிக்கையோ தமிழ் மக்களின் அடிப்படைத் தேவையான உணவுப் பிரச்சினை என்பதை அவர்கள் கவனிக்கத் தவறியுள்ளனர். போனது போகட்டும் இனியாவது கொழும்பிலுள்ள அரச அதிகாரிகள் இடம் பெயர்ந்த மக்களுக்கு தரமான பொருட்களை அனுப்பி வைப்பார்களா?



இது இந்த நிலையில் இருக்க கடந்த சில வாரங்களாக படையினரின் பாதுகாப்புக் கெடுபிடிகள் யாழ். குடா நாடு முழுவதுமே தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. சோதனைச் சாவடிகள் அதிகரிக்கப்படும் வீதியில் செல்லும் வாகனங்களும், தனி நபர்களும் தீவிரமான சோதனைகளுக்குள்ளாக்கப்பட்டனர். பகுதி பகுதியாக பல்வேறு பிரதேசங்களும் சுற்றி வளைப்புக்குள்ளாகிப் படையினரின் தேடுதல் வேட்டைக்குள்ளாகின.

அத்துடன் வீதியால் ரோந்து சென்ற படையினரின் மோட்டார் சைக்கிள் அணி திடீர் திடீரென வீதிகளில் நின்று சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகளும் புலிகளின் மாவீரர் நாள் தாக்குதல்களைத் தடுக்கும் நோக்குடன் தான் மேற் கொள்ளப்பட்டன. இருந்த போதிலும் புலிகள் யாழ்ப்பாண நகரம் மற்றும் அதை அண்டிய ஆணைக் கோட்டைப் பகுதிகளில் சமீப நாட்களில் மூன்று தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

பலம்மிக்க பாதுகாப்புக்களையும் மீறிப் புலிகள் படையினர் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றும் விட்டனர் என்பது தான் வேடிக்கை. இத் தாக்குதல்களில் இரு இராணுவத்தினரும், பொலிசாரும் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் காயம் அடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது .

படையினர் புலிகளின் மாவீரர் நான் செயற்பாடுகளை தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் முழுமையாகக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நவம்பர் மாத முற்பகுதியிலிருந்தே பாதுகாப்பு நடவடி க்கைகளை மேற்கொண்டிருந்தனர். இதன் ஒரு கட்டமாகவே வலிகாமம் கிழக்குப் பகுதியில் உள்ள கோப்பாய்ப் பிரதேச ஆலயங்கள், தேவாலயங்களின் மணி கூட ஒலியெழுப்பக் கூடாது எனப் படையினர் கண்டிப்பான உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தனர்

மறு அறிவித்தல்வரை மணி ஒலி இன்றியே பூசைகள் நடத்தப்பட வேண்டும் என்ற படையினரின் இந்த உத்தரவால் கடவுள்கள் கூட மௌனமாக இருக்க வைக்கப்பட்டனர். இருந்த போதும் இந்தப் பாதுகாப்பு நடைமுறைகள் படையினருக்கு வெற்றியாக அமைந்ததா? அது தான் இல்லை.

படையினரின் பாதுகாப்புக் கெடுபிடிகளையும் மீறிப் புலிகள் மாவீரர் நாள் சம்பந்தமாகவும், புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் 46வது பிறந்த தினம் தொடர்பானதுமான சுவரொட்டிகள் யாழ். நகர் மற்றும் பல்வேறு பகுதிகளிலும் ஒட்டப்பட்டிருந்ததும், துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதும் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் இருந்த ஓட்டைகளைத் தெரியப்படுத்துகின்றதா?

அல்லது படையினரின் கண்களுக்கு மண்ணைத் தூவிவிட்டு செயற்படக் கூடிய ஆற்றல் புலிகளிடம் உள்ளது என்று சொல்வதா? என்பது புரியவில்லை.

அரவின்

# தவறவிட்ட சந்தர்ப்பங்களை மீளப்பிடிக்கும ஸ்ரீலங்கா

✍ குத்தூசி

யூன் 16 - 2000 திகதியிடப்பட்ட உலக வங்கி ஆவணம் ஒரு உண்மையை கக்கிவிட்டது. ஆவணத்தில் முடிவுரையின் கடைசி வசனம் இப்படி அமைகிறது;


**வேறு சில அம்சங்களுடன் இந்துசமுத்திரத்தில் அதன் கேந்திர அமைவிடம் படித்த மக்கள் செழிப்பு மிக்க இயற்கை வளங்கள் நெடுங்கால பண்பாட்டு விழுமியங்கள் ஆகியவற்றைக் கொண்ட ஸ்ரீலங்காவின் மூலாதார இருப்பு வளச்செல்வத்தை மீள் வலுவூட்டுவதற்கான மீள் நிரப்பு கைக்கான காலம் வந்துவிட்டது.**

-மிக்க நன்றி உலக வங்கி-

நவீன ஏகாதிபத்தியம் ஸ்ரீலங்கா அரசிற்கு ஏன் துணை போகிறது என்பதற்கான பதில் வந்தேவிட்டது இரத்தினச் சுருக்கமாக.

ஒரு தேசிய இனத்தின் தாயகம், பொருண்மியம், தனித்துவமான பண்பாடு, மொழி, ஏன் அதன் முழுமையான இருப்பே அழிப்புக்குள்ளாகும் வகையிலான இன ஒடுக்குமுறைக்கு ஆளாகும் போது தேசியவிடுதலைப் போராட்டம் தவிர்க்கவே முடியாத வரலாற்று நியதியாகி விடுகிறது. எனவே அரசியல், சமூக பொருண்மிய, இராணுவ தங்குநிலைக்கு, தேசியமானது நேர் எதிராகவே விளங்கும்; நவீன ஏகாதிபத்தியம் தங்கு நிலையினையே வரவேற்கும் நவீன ஏகாதிபத்தியமோ மூலதனத்தையும், நவீன தொழில் நுட்பத்தையும் வறுமையில் வாடும் மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து உற்பத்திக்கும் சேவை வழங்கலுக்கும் சந்தை வாய்ப்புகளுக்கும் ஏற்பாடு செய்து விடுகிறது. மக்களின் தேவைக்கான உற்பத்தி என்பது பின்தள்ளப்பட்டு சர்வதேச மூலதனத்திரட்சியின் தேவை முன்னிறுத்தப்படுகிறது அதாவது அப்பட்டமான நிதி மற்றும் வளச்சுரண்டல் மூலம் அந்நாடுகளை தனது லாபவேட்டைக்கான களங்களாக்கி விடுகிறது. எதிர்ப்பு ஏற்படும் போது உள்ளூர் தரகு முதலாளித்துவ அதிகார வர்க்கத்தினரின் மறைமுக அல்லது நேரடி அச்சுறுத்தல் மூலம் விவகாரங்களை சாதித்து விடுகின்றனர். தங்குநிலை உருவாகி விடுகிறது.

நவீன ஏகாதிபத்தியத்திற்கு (ஆவணத்தில் குறிப்பிடப்படுவது இதுவேதான்) சுரண்டுவதற்கு செழுமைமிகு இயற்கை வளங்கள் தேவை; படித்த ஆனால் வேலையற்ற உடல், உள உழைப்பாளர்கள் தேவை (இவர்களே தமது கடுமையான உழைப்பின் மூலம் சுரண்டலுக்குத் தேவையான உபரி மதிப்பைத் தோற்றிவிப்பவர்கள்); உறுதியற்ற நெகிழ்வுத்தன்மை கொண்ட பண்பாட்டுத்தளம் தேவை; பொது மொழிதேவை தொடர்பாடலுக்கு; (சிங்கள மொழி திணிப்பு ஏற்பட்டது இந்நோக்கத்திலேயே) இவற்றுடன் பரந்த நுகர்வுச்சந்தையும் தேவை. தமக்கே உரித்தான தேசியத்தை இறுகப் பற்றி கட்டிக்காத்துக் கொள்ள முனையும் தொகையில் குறைந்த தமிழினமா அல்லது தனது தேசியத்தையும், இறைமையையும் சர்வதேச மூலதனத்திற்கு தாரை வார்த்து விடத்துடிக்கும்



ஒரு தேசிய இனத்தின் தாயகம், பொருண்மியம், தனித்துவமான பண்பாடு, மொழி, ஏன் அதன் முழுமையான இருப்பே அழிப்புக்குள்ளாகும் வகையிலான இன ஒடுக்குமுறைக்கு ஆளாகும் போது தேசிய விடுதலைப் போராட்டம் தவிர்க்கவே முடியாத வரலாற்று நியதியாகி விடுகிறது.

பெரும்பான்மைச் சிங்கள இனமா? சிங்கள பௌத்த பேரினவாதமோ தமிழின அழிப்பிற்கு "பேயுடனும் கூட" ஒட்டுறவு வைத்துக்கொள்ளும் மனப்பாங்கை என்றோ பெற்று விட்டது இப் பின்னணியில் நவீன ஏகாதிபத்தியத்தின் சார்பு நிலை எதுவாக இருக்கும்? விடைபகருகிறது உலக வங்கியின் ஆவணம் உலக வங்கி; சர்வதேச நாணய நிதியம் உலகவர்த்தக அமைப்பு வரி மற்றும் தீர்வைக்குமான பொது உடன்படிக்கைகள் யாவுமே சர்வதேச மூலதனத்தின் உலக மயமாக்கலை இலகுபடுத்தும், முரண்பாடுகளைக்களைந்து விடுவதற்குமான ஏற்பாடுகள், ஒழுங்காக்கிகள் சர்வதேச மூலதன பகாசுரர்களின் தீராத பசிக்கு தீனி போடுவதற்கான ஏற்பாடுகளே

இவை பன்னாட்டு நிறுவனங்கள் ஸ்ரீலங்காவில் காலடி வைத்துள்ளமை பழைய கதை (யுனிலீவர்ஸ், மக்டொனால்ட், புரொக்ரர், அன்ட்கம்பிள், கொக்காகோலா, சொனி எரிக்சன், செல்ரெல் எனப்பட்டியல் நீளுகிறது, இலங்கையின் நிதிச்சுற்றோட்டத்தின்

## உலக வங்கி ஆவணம் - கண்ணோட்டம்

தேவைக்கு அப்பாலான சர்வதேச வங்கிகள் உள்ளடங்கலாக) இத்தேவைகளுக்கேற்ப ஸ்ரீலங்காவின் அமைப்பினை மறுசீரமைத்துக் கொள்ளுமாறு உலக வங்கி கேட்கிறது, சாதகமான சூழல் சிறிலங்காவில் உண்டு.

உலக வங்கியின் இந்த ஆவணம் "அகா சபாஷ்" எனத் தட்டிக் கொடுக்கிறது சரியான தடத்தில் ஸ்ரீலங்காவின் பொருளாதார நிலவரம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதாம்; தனிநபர் வருமானம் பிராந்தியத்திலேயே மாலைதீவுக்கடுத்ததாக உயர் நிலையில் உள்ளதாம் (820 அமெரிக்கடாலர்கள்) வேலைவாய்ப்பின்மையும் பணவீக்கமும் இறங்குமுகமாம்; ஏற்றுமதிகள் பல்துறை சார்ந்ததாக விரிவடைந்து விட்டனவாம்; நேரடி வெளிநாட்டு முதலீடுகள் ஏறுமுகமாகிவிட்டதாம்; வெளிநாட்டு மூலதனங்களைக் கவரும்வகையில் ஊக்குவிப்புகளாம்; தொழிலாளரை அதிக உற்பத்தியில் ஈடுபடுத்தும் வகையில் (கசக்கிப்பிழியும்?) தொழில் சட்டங்களில் மாற்றங்களாம்; உள்கட்டுமான வசதிகள் பெருகுகின்றனவாம்; தனியார் மயப்படுத்தலுக்கான நடைமுறைகள் வேகமாக்கப்பட்டுள்ளனவாம்; பொருண்மியத்தில் அரசாங்கத்தின் பிடிமானம் குறைக்கப்பட ஏற்பாடுகளாம்; ஆகா என்ன பிரகாசமான எதிர்காலம்! உலகத்திலுள்ள அத்தனை வண்ணங்களையும் கொண்ட ஒரு அற்புதமான சித்திரம்! என்றாலும் ஒரு பிரச்சினைதான் தடங்கலேற்படுத்துகிறதாம். ஸ்ரீலங்காவில் அமைதியின்மை அதாவது சமூக மோதல் ஏற்பட்டுவிட்டது. இந்தப் பதமே திரும்பத்திரும்ப பாவிக்கப்படுகிறது. இன மோதல் என்ற பதம் ஆவணத்தின் 64 பக்கங்களில் ஏதாவது ஒரு பக்கத்தில் ஒரே ஒரு கிடையாது அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்குமான மோதல் என்ற தோற்றப்பாடே உருவாக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அரசியல் நிகழ்ச்சித்திட்டத்தில் இச்சமூக மோதலுக்கு தீர்வு காண்பது முக்கிய இடம்பெறுகிறதாம். பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் அரசாங்கத்தின் யாப்புச் சீர்திருத்தப் பொதிக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவு தருவதாகவும் இரண்டாவது அத்தியாயம் கூறிவைக்கிறது. அழுத்தம் பெறுகிறது இன்னுமொரு விடயம்.

அரசாங்கமானது நிவாரணம் புனர்வாழ்வு இணக்கப்பாடு ஆகியவற்றிற்கான சட்டவரைவினை உருவாக்க முயற்சி மேற்கொண்டுள்ளது. இச்சட்டக வரைவிற்கான தயாரிப்பில் தொழில்நுட்ப உதவி உலக வங்கியினால் தலைமை தாங்கப்படும் சர்வதேச உதவு முகவர்களால் வழங்கப்படும் உள்ளூர்சமூக நிறுவனங்களது ஒத்துழைப்பும் உண்டு பலே என்ன "ஆக்கபூர்மான" சொற்றொடர்கள்!

உலக வங்கியின் உதவியுடன் ஒரு திட்டம், வடக்கு - கிழக்குப் பிரதேச நீர்பாசன விவசாயத் திட்டம் - நியாய - வடக்கு கிழக்கில் பொருண்மிய விவசாய செயற பாடுகளை உந்தி விடுவதற்காக 2000ம் ஆண்டு மார்ச்சில் ஆரம்பிக் கப்பட்டுள்ளது என்கிறது ஆவணம். இடம் பெயர்ந்து ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் யுத்த வெறியினால் பாதிப்புற்று இன்னலுறும் வடக்கு-கிழக்கு மக்களைத் தவிர்த்துவிட்டு அரிதாரம் பூசிநிற்கும் இத்திட்டம் யாருக்கு?

ஸ்ரீலங்கா அரசாங்கம் மோதலால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கு உணவு மருத்துவம் மற்றும் அத்தியாவசிய விநியோகங்களை தவறாது மேற்கொள்வதாகவும் வடக்கு கிழக்கில் நிவாரண புனர்வாழ்வு செயற்பாடுகளிலீடுபடுவதாகவும் ஆவணம் கூறுகிறது. (பக்கம்3), வடக்கு - கிழக்கு மற்றும் எல்லைப்புறக் கிராமங்களில் வறுமை (என்ற உப-தலைப்பு) ஆகா என்ன கரிசனை! ஸ்ரீலங்கா பேரினவாத அரசாங்கத்தின் தலைமை ஆளுமை அதிகாரி சந்திரிக்கா பூரிக்கப்போகிறார்.

உலக வங்கி கல்வி அமைச்சின் முயற்சிகளுக்கு ஆதரவு தருகிறதாம் அதாவது ஒரு புதிய பாடத்திட்டம் முனைப்புடன் தயாராகிறதாம். தமிழ் மாணவர்கள் சிங்களம் படிக்கவும் சிங்களமாணவர்கள் தமிழ் படிக்கவும் திட்டம் தயார் கல்விச் செயற்பாட்டின் ஊடாக இன சமூக ஒத்திசைவினை ஏற்படுத்த பள்ளி நூல்களில் பக்க சார்பினையும் மாற்றுள்ள இனத்துவ முறைப்படுத்தலை அகற்றவும் மறுசீரமைப்பிற்கான ஏற்பாடுகள் உள்ளனவாம்.

இப்படித் தொடருகிறது கதை ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு மகிமை உண்டாவதாக எனக் கூறாமல் விட்டார்களே.

ஸ்ரீலங்காவின் மனித உரிமை நிலைப்பாடு குறித்தும், சிறிய குறிப்புண்டு. 1994இற்கு முன்னர் இருந்த நிலையிலும். மனித உரிமைகள் பேணலில் முன்னேற்றமுண்டுதான். ஆனாலும் மனித உரிமைகளை மீறும் நாடுகளின் பட்டியலில் ஸ்ரீலங்கா முன்னுக்கு நிற்கிறதாம். என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சின் மனித உரிமைகளுக்கான துறையின் கூற்றை இந்த ஆவணம் முன்வைக்கிறது இதே சாம் அம்மான் பெருந்தன்மையுடன், ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதத்திற்கு இடுக்கண்களையும் உயர்நட்பாக மாற்று வழிகளில் ஆயுதங்களையும் ஸ்ரீலங்கா அதிரடிப்படையினருக்கு சிறப்புப் பயிற்சிகளையும், போர்ச்செய்திகளை ஊடகங்களுக்கு வடிவமைத்துக் கொடுப்பதற்கான நிபுணர்களையும் தந்துதவுகிறது.

நிறையவே புள்ளி விபரங்கள் தரப்பட்டுள்ளன. ஸ்ரீலங்காவின் மத்திய வங்கியினால் தரப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. விசுவாசமிக்க ஊழியர்களால் தயாரிக்கப்பட்டுள்ள இவற்றின் உண்மைத்தன்மையும் நம்பகத்தன்மையும் கேள்விக்குரியனவே உலக வங்கியினால் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்பட்டுள்ள இந்த ஆவணம் நவீன ஏகாதிபத்தியத்தின், சுரண்டலுக்கான ஒழுங்காக்கியாக ஸ்ரீலங்கா பேரினவாத அரசின் செயற்பாடுகளை நியாயப்படுத்துவதாகவே உள்ளது. தெளிவாகப்புலனாகிறது. எனவே புனைந்துரைகள் நிறைந்து காணப்படும் இந்த ஆவணத்திற்காக வரலாற்றின் குப்பைத் தொட்டி காத்திருக்கிறது.

**நன்றி ஈழநாதம்**

## இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள்

# திட்டமிட்டே தட்டிக்கழிக்கப்படும் முஸ்லிம் மக்களின் உணர்வுகளும், உரிமைகளும்

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்மின் தலைமையிலான தூதுக் குழுவினர் அண்மையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசியதும், பின்னர் ஜனாதிபதியுடன் அச்சந்திப்பு பற்றி கலந்துரையாடியமையும் நாமெல்லோரும் அறிந்த செய்தியே. இந்நிகழ்வினை வைத்து நாட்டிலுள்ள பெரும்பாலான ஊடகங்களும் அரசியல் அவதானிகளும் சமாதான முயற்சிகளுக்கான சமிக்ஞை ஒன்று தோன்றியுள்ளதாகவும், அச்சமாதான முயற்சிகள் எவ்வாறு அமையும், அல்லது அமைய வேண்டும் என்றெல்லாம் ஆராய்வதிலும், ஆரூடம் சொல்வதிலும் தீவர கவனம் செலுத்தின, செலுத்துகின்றன.

நாட்டில் எரிந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு, தீர்வு ஒன்று காண்பதற்கான முனைப்புகள் எத்தரப்பிலிருந்து முன்னெடுக்கப்பட்டாலும், அது நிச்சயம் வரவேற்கத் தக்கதும், பாராட்டக் கூடியதுமான விடயமே. அவ்வாறானதொரு தீர்வு முயற்சி, பேச்சு வார்த்தை ஒன்றனூடாகத்தான் ஆரம்பிக்கப்பட வேண்டும். என்பதிலும் மாற்றுக் கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால் அவ்வாறானதொரு பேச்சு வார்த்தை மேசையில் அங்கம் வகிக்க வேண்டிய தரப்புகள் பற்றிய தெளிவானதும், உறுதியானதுமான தமது நிலைப்பாடுகளை தெரிவிக்க அதிகமான ஊடகங்களும் அரசியல் சிந்தனையாளர்களும் தவறி விட்டனர்.

இனப்பிரச்சினை தீர்வு ஒன்றிற்கான பேச்சு வார்த்தை முயற்சியொன்று பற்றிப் பேசப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மிக அதிகமானோரால் அரசு - புலிகள் அல்லது சிங்களவர் - தமிழர் ஆகிய இரு தரப்புகள் பற்றியே பேசப்படுகிறது. துரதிஷ்டவசமாக அச்சந்தர்ப்பங்களின் போது, முஸ்லிம்கள் பற்றி சிந்திப்பதையோ பேசுவதையோ பலரும் தவிர்த்தே வருகின்றனர். இது மிகவும் கவலைக்கும், விசனத்துக்குமுரியதொரு விடயமாகும்.

இலங்கையில் தமிழர்கள் எனும் ஒரு சிறுபான்மை தேசிய இனத்துக்கு, அரசியல் ரீதியாக பிரச்சினைகள் இருப்பது எவ்வளவு உண்மையோ மற்றுமொரு சிறுபான்மை தேசிய இனமான முஸ்லிம்களுக்கும் அவ்வாறான அரசியல் பிரச்சினைகள் இருப்பதும் மறுக்க முடியாத உண்மையே. ஆக, இனப் பிரச்சினை தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், முஸ்லிம்கள் பற்றி சிந்திக்கப்பட வேண்டியதும், பேசப்பட வேண்டியதும் மிகவும் அவசியமாகும்.

சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களுடைய போராட்டங்களில். குறிப்பாக ஆயுதப் போராட்டங்களில் தமிழ் மக்களோடு இணைந்து முஸ்லிம் மக்களும் தமது பங்களிப்பை வழங்கியே வந்திருக்கின்றனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், முஸ்லிம்களின் பங்களிப்பு என்பது எவ்வகையிலும் குறைத்து மதிப்பிடக் கூடியதொன்றல்ல. புலிகள் இயக்கத்திலும், ஏனைய ஆயுத இயக்கங்களிலும் முஸ்லிம் இளைஞர்கள் வகித்த முக்கிய தலைமைப் பதவிகளே அதற்கு நல்ல சான்றுகளாகும்.

ஆனால் 1990களுக்குப் பின்னரான புலிகளின் செயற்பாடுகளும், தமிழீழப் போராட்டத்தில் முஸ்லிம்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட தமிழ் பேரினவாத அடக்குமுறை நடவடிக்கைகளும், முஸ்லிம் மக்களை தமிழீழப் போராட்ட நடவடிக்கைகளிலிருந்து விலகி இருக்கச் செய்தன. 90களுக்கு முன்னர் தமிழ் பேசுவோர் என்ற பரந்த சிந்தனையின் அடிப்படையில் தமிழர்களோடு இணைந்து செயற்பட்ட முஸ்லிம் மக்கள், 1990களுக்குப் பின்னர் இன ரீதியாகச் சிந்திக்கத் தலைப்பட்டனர். அதாவது சிந்திக்கத் தலைப்பட்டனர் என்பதை விட, அவ்வாறு சிந்திக்க வேண்டிய ஒரு சங்கடமான நிலைக்கு தள்ளப்பட்டனர் என்பதேசரியாகும்.

> இலங்கையில் தமிழர்கள் எனும் ஒரு சிறுபான்மை தேசிய இனத்துக்கு, அரசியல் ரீதியாக பிரச்சினைகள் இருப்பது எவ்வளவு உண்மையோ மற்றுமொரு சிறுபான்மை தேசிய இனமான முஸ்லிம்களுக்கும் அவ்வாறான அரசியல் பிரச்சினைகள் இருப்பதும் மறுக்க முடியாத உண்மையே.

தமிழீழம் எனும் புலிகளின் இலக்கு, அவர்களுக்கு கிடைப்பதற்கு முன்னரே, அவர்களோடு தோளோடு தோள் நின்று போராடிய சகோதர இனமான முஸ்லிம்களை இந்த புலிகள் எத்தனை கொடுமைப் படுத்தினார்கள். முஸ்லிம் மக்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து விரட்டியடித்தமையும் பள்ளிவாயில்களில் வைத்து நூற்றுக் கணக்கானவர்களை கொன்று குவித்தமையும் என்று.... அவை புலிகளின் போராட்ட வரலாற்றில் என்றுமே அழிக்க முடியாத கறையினை ஏற்படுத்திய நிகழ்வுகளாகும். மட்டுமன்றி, சகோதர தமிழினத்தை, முஸ்லிம் மக்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கக் கூடிய ஓர் அவல நிலையினையும் புலிகளின் அச்செயற்பாடுகள் உருவாக்கி விட்டிருந்தது. அதனால் தமிழர்கள் எவ்வாறு சிங்கள பேரினவாத அடக்கு முறையிலிருந்து விடுபட்டு தமக்கான சுய நிர்ணய ஆட்சியொன்றை கோரி நிற்கின்றார்களோ, அதே போன்று முஸ்லிம்களும் தமக்கெதிரான சிங்கள மற்றும் தமிழ் பேரினவாத அடக்கு முறைகளிலிருந்து விடுபட்டு தமக்கானதொரு சுய நிர்ணய ஆட்சி ஒன்றை அல்லது ஆட்சிப் பரப்பொன்றை கோரி நிற்க தலைப்பட்டுள்ளனர். நடுநிலையாக சிந்திக்கும் போது, முஸ்லிம் மக்களின் இந்தக் கோரிக்கையானது எவ்விதத்திலும் மறுத்தொதுக்க முடியாததொன்றாகவேபடுகிறது.

இது இவ்வாறிருக்க, முஸ்லிம்களின் இவ்வாறான கோரிக்கையானது தமிழ், சிங்கள தரப்புகளிலிருந்து மறுக்கப்படும் அதேவேளை, முஸ்லிம்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்வதிலும் அத்தரப்புகள் தமது எதிர்ப்பினைக் காட்டி வருகின்றன. சிங்கள பேரிவாதம் என்பதும் ஒரு போதும், சிறுபான்மை சமூகங்களினது உணர்வுகளையும் அபிலாசைகளையும் மதித்ததோ, ஏற்றுக் கொண்டதோ கிடையாது. அந்த வகையில் முஸ்லிம்கள் விடயத்தில் தெரிவிக்கப்படும் சிங்கள பேரினவாதத்தின் இந்நிலைப்பாடானது அதிர்ச்சிகரமானதோ ஆச்சரியப் படத்தக்கதோ அல்ல. ஆனால் இவ்விடயத்தில் தமிழ் தரப்பிலிருந்த, முஸ்லிம்களுக்கு காட்டப்படும் இவ்வாறான எதிர்ப்பு நிலைப்பாடானது ஆத்திரமூட்டத்தக்கது, கவலைக்குரியது. ஒரு சிறுபான்மை இனத்தினது ஆசைகளையும் உணர்வுகளையும் மற்றுமொரு சிறுபான்மை இனமே தட்டிக்கழித்து உதாசீனப் படுத்துவதானது எந்தவகையில் நியாயம் என்று புரியவில்லை.

> தமிழர்கள் தம்மைத்தாமே ஆள்வதற்கு சுதந்திரமான ஆட்சி அலகொன்றினை கேட்கலாம் ஆனால் தம்மால் ஆளப்படுவதற்கு கூடவே ஒரு இனத்தையும் சேர்த்துக் கேட்கக் கூடாது.

முஸ்லிம்களின் ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்வதற்கு அதிகமான தமிழ் இயக்கங்களும் கட்சிகளும் தயக்கம் காட்டுகின்றன அல்லது எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. முஸ்லிம்கள் இஸ்லாமியத் தமிழர்கள் என்பதே அவர்களின் நிலைப்பாடாகும். இது விடயத்தில் புலிகளும் தமது உறுதியான நிலைப்பாட்டினை இதுவரை உத்தியோக பூர்வமாக தெரிவிக்கவில்லை.

எனவே, இனப்பிரச்சினை பற்றிய பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பங்களில், தேசிய இனமாக தம்மால் அங்கீகரிக்கப்படாத முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் அப்பேச்சுக்களில் பங்கு கொள்வதை, தமிழ்க் குழுக்களும், கட்சிகளும் ஏற்றுக் கொள்ளுமா என்பது கேள்விக் குறியே.

இது இவ்வாறிருக்க, முஸ்லிம்கள் தமக்கான அதிகார அலகொன்றினை கோரி நிற்கின்ற அதேவேளை அந்த முஸ்லிம் ஆட்சி அலகு எது என்பது பற்றிய சர்ச்சைகள் இன்று முஸ்லிம் மக்களுக்கிடையிலேயே தோன்றியுள்ளன. அது தென்கிழக்கு அலகா? அவ்வாறெனில் அதன் விஸ்தீரணம் என்ன? அல்லது கிழக்கு மாகாணமா? அப்படியாயின் வடக்கு முஸ்லிம்களின் நிலையென்ன? இவ்வாறு பல்வேறுபட்ட கேள்விகளும் விவாதங்களும் அந்த முஸ்லிம் ஆட்சி அலகு பற்றி எழுப்பப்பட்டாலும், அவ்வாறானதொரு அலகொன்றின் தேவையின் அவசியம் குறித்த பொது உடன்பாட்டில் இன்று பெரும்பாலான முஸ்லிம்கள் ஒன்றுபட்டிருக்கின்றனர்.

இதேவேளை வடக்கு -கிழக்கு இணைந்த மாகாணத்தின் கீழ் முதலில் தமிழர் பிரச்சினைக்கான தீர்வொன்றினை காண்போம். அதன் பின்னர், முஸ்லிம்களுக்கான பங்கு அல்லது தீர்வு என்ன என்பது பற்றி யோசிப்போம் என்ற கருத்துப்படவே அதிகமான தமிழ் கட்சிகளும் இயக்கங்களும் கூறுகின்றன. இது எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்து அல்ல.

தமது கைகளில் ஆட்சியும் அதிகாரமும் இல்லாததொரு நிலையிலேயே, சகோதர இனமான முஸ்லிம்களின் அபிலாசைகளை ஏற்றுக் கொள்ள மறுக்கின்ற, அவர்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள தயங்குகின்ற தமிழ் இயக்கங்களும் கட்சிகளும் தமது கரங்களில் அதிகார பலம் கிடைத்தவுடன் முஸ்லிம்களை மதித்து நடத்துவார்களா என்பது சந்தேகமே.

முஸ்லிம் மக்கள் ரீதியிலான தமிழ் கட்சிகளின் மேற்கண்டவாறான நிலைப்பாடுகளைக் கண்டித்து, மறைந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் கூறுகையில் தமிழர்கள் தம்மைத்தாமே ஆள்வதற்கு சுதந்திரமான ஆட்சி அலகொன்றினை கேட்கலாம் ஆனால் தம்மால் ஆளப்படுவதற்கு கூடவே ஒரு இனத்தையும் சேர்த்துக் கேட்கக் கூடாது. என்ற கருத்துப்பட தெரிவித்திருந்தார். இக்கூற்று சகல தரப்பினராலும் சிந்திக்கப்பட வேண்டியதொரு கூற்றாகவே காணப்படுகிறது.

ஆக இனப்பிரச்சனைக்கான தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படும் போது, இனியும் சிங்கள - தமிழ் இனங்கள் பற்றி மட்டுமே சிந்திப்பதை விடுத்து, மூன்றாவது இனமான முஸ்லிம்கள் பற்றியும் சிந்திக்க வேண்டும், அவர்களும் அவ்வாறான தீர்வு முயற்சிகளுக்குள் உள்வாங்கப்பட வேண்டும். ஏனெனில், தமிழர்களைப் போலவே, முஸ்லிம்களும் ஒரு தேசிய இனம் மட்டுமன்றி தமிழர்களைப் போலவே முஸ்லிம்களும் பல்வேறுபட்ட அரசியல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

அதிலும் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் சிங்களப் பேரினவாதத்தின் அடக்கு முறைக்கு மட்டும்தான் தமிழர்கள் முகம் கொடுக்கிறார்கள். ஆனால் முஸ்லிம் மக்களோ, சிங்கள தமிழ் என்கின்ற இரண்டு பேரினவாதத்தின் அடக்கு முறைகளுக்கும் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

யூயெல் மஃறூப்

# முற்போக்குச் சிந்தனை வளராமைக்கு காரணம் சைவ வேளாள நிலைகளும் கிறிஸ்தவ கருத்து நிலைகளுமே!

**தமிழ்த் தேசிய அரசியல் அன்றிலிருந்து இன்று வரை**

**அரசியல் தொடர் 25**

- ஆதிசங்கரர்-

தமிழர் அரசியலின் முதலாவது கட்டத்தில் மைய நீரோட்டத்திற்குள் வராதவர்களாக யாழ். குடா நாட்டில் சைவ வேளாளர் அல்லாத பிரிவினரும், குடா நாட்டிற்கு வெளியே வடக்கு- கிழக்கு எங்கும் பரந்து வாழ்ந்தவர்களும் அடங்கியிருந்தனர்.

குடா நாட்டிற்குள் வாழ்ந்தவர்களில் கத்தோலிக்க மதப்பிரிவினர், புரட்டஸ்தாந்து மதப் பிரிவினர், தாழ்த்தப்பட்ட மக்கள் என்போர் இவ்வகைக்குள் அடங்குவர்.

இவர்களில் கத்தோலிக்க மதப் பிரிவினர் கடற்கரையை ஒட்டிய கரையோரப் பிரதேசங்களிலேயே அதிகமாக வாழ்ந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் கரையார் சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர். உயர் சாதியைச் சேர்ந்தவர்களும் கணிசமான அளவினர் கத்தோலிக்க மதத்தில் இருந்தனர். குறிப்பாக ஊர்காவற்றுறை, இளவாலை, பண்டத்தரிப்பு போன்ற இடங்களில் இத்தொகை சற்று அதிகமாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க மதத்தின் தலைமை ஆதிக்கம் யாரிடம் இருக்க வேண்டும் என்பதில் இவர்களுக்கிடையே கடும் போட்டி கூட நிலவியிருந்தது. தீவுப் பகுதியைச் சேர்ந்தவர்களே அதிகளவில் ஆயராக வருவது வழக்கமாக உள்ளது. சைவ வேளாளரைத் தவிர்த்தால் குடா நாட்டில் மிக அதிகளவிலும், பலம் வாய்ந்தவர்களாகவும் இருந்த சமூகப் பிரிவினர் கத்தோலிக்கர் என்றே கூற வேண்டும்.

கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த படியால் சுதந்திரமான மீன்பிடித் தொழிற்றுறையொன்று இவர்கள் வசம் இருந்தது. இதனால் பொருளாதார ரீதியாகச் சைவ வேளாளரின் கட்டுப்பாட்டிற்குள் செயற்பட வேண்டிய தேவை இவர்களுக்கு இருக்கவில்லை. கல்வியைப் பொறுத்த வரையிலும் கூடத் தரமான கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு சிறந்த பாடசாலைகள் இவர்களுக்கு இருந்தன. கத்தோலிக்க மத பீடம் சமூகத் தலைமைத்துவத்தையும் வழங்கியிருந்தது. அரசியல் தலைமைத்துவம் இவர்களின் கைகளில் இல்லாமைதான் இவர்களைப் பொறுத்தவரை பிரச்சினையாக அமைந்தது. நாவலரின் சைவமும், தமிழும் என்ற சிந்தனையை எதிர்ப்பதற்காக கத்தோலிக்க மதத்தினைத் தமிழ்மயப்படுத்துவதிலும் இவர்கள் பெரிதும் அக்கறை காட்டினர். சுவாமி ஞானப்பிரகாசர் இச்செயற்பாட்டில் முன்னணியில் நின்றார்.

புரட்டஸ்தாந்து மதப் பிரிவினர் மிகச் சொற்பளவிலேயே குடா நாட்டில் இருந்தனர். அவர்கள் அனைவரும் வேளாளர் சாதியிலிருந்து மதம் மாறியவர்களாவர். காலனித்துவக் கலாச்சாரத்தை முதலில் சுவீகரித்துக் கொண்டவர்களும் இவர்களேயாவர். ஆட்சியாளர்களின் சலுகைகளும், மிஷனறிகளின் சலுகைகளும் இவர்களுக்கு மிகத் தாராளமாகவே கிடைத்தன. நாவலரின் போராட்டம் இவர்களுக்கு எதிராகவே அமைந்திருந்தது. கத்தோலிக்கர்களில் பெரும்பான்மையானவர்கள் சைவ வேளாளர் அல்லாதபடியால் நாவலர் அவர்கள் தொடர்பாக அதிகளவு அக்கறை காட்டவில்லை. ஆனால் புரட்டஸ்தாந்து மதப் பிரிவினர், சைவ வேளாளர்களை மதம் மாற்றிய படியாலேயே அவர்களுக்கு எதிராக போர்க் கொடி உயர்த்தினார். எனினும் மிஷனறிச் செல்வாக்கும் ஆட்சியாளர்களின் சலுகைகளும் இவர்களை எப்போதும் ஒரு உயர்ந்த நிலையிலேயே வைத்திருந்தது. இவர்களுடைய காலனித்துவ கலாச்சாரம் காரணமாக மொத்த சமூகத்திலிருந்து சற்று அந்நியப்பட்ட நிலையிலேயே இவர்கள் வாழ்ந்தனர். எனினும் தரமான ஆங்கில மொழிப் பாடசாலைகளை இவர்கள் நடாத்திய படியால் சைவ வேளாளர்களினால் முழுமையாக அந்நியப்பட முடியவில்லை. இவர்களுடைய பாடசாலைகளில் குறிப்பாக யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லீக் கல்லூரி என்பவற்றில் தங்கள் பிள்ளைகள் படிப்பதை யாழ். சைவ வேளாளர்கள் மிகப் பெருமையாகவே கருதினர். இந்துக் கல்லூரிகள் வளர்ச்சியடையும் வரை இந்த நிலையே நீடித்திருந்தது. இப்பாடசாலைகளிலிருந்து அக்காலத்தில் வெளியேறியவர்களும் அசல் காலனித்துவ கலாச்சாரத்தின் பிரதிநிதிகளாகவே விளங்கினர்.

உண்மையில் மிதமிஞ்சிய காலனித்துவ கலாச்சாரத்தை ஒட்டிய கட்டுப்பாடுகள் காரணமாக இரு வகையான மாணவர்களே இக்கல்வி நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டனர்.

ஒன்று, எந்தவித கேள்வியும் இல்லாமல் அதிகாரத்திற்குப் பணிந்து கட்டுப்பட்டுப் போகும் பிரிவினர். இவர்கள் கல்லூரியை விட்டு விலகி, உயர் உத்தியோகங்களில் பணியாற்றுகின்ற போதும் அசல் காலனித்துவ அதிகாரிகள் போலவே செயற்பட்டனர்.

இரண்டாவது; அதிகாரத்திற்கு பணிந்து போவதாக நடித்துக் கொண்டு வெட்டி ஓடும் பிரிவினர். இவர்களின் தொகை மிகச் சொற்பமாக இருந்தது.

சமூக உணர்வோடு நியாயத்திற்காக போராடுபவர்கள், தன்னம்பிக்கையுடன் செயற்படுபவர்கள் போன்றோரை இக்கல்லூரிகள் உருவாக்கியதென்றால் மிக அருமை என்றே கூறுதல் வேண்டும். எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஹண்டி பேரின்பநாயகம் போன்றவர்கள் மட்டும் இப்பொதுப் போக்கிற்கு விதிவிலக்காக இருந்தனர்.

மாறாக இந்துக் கல்லூரிகளில் கற்ற மாணவர்களிடையே ஒரு தன்னம்பிக்கையும், சமூக உணர்வும், நியாயத்துக்காகவே போராடுகின்ற தன்மையும், முன்கையெடுத்துச் செயற்படுகின்ற தன்மையும், தமிழ்த் தேசிய உணர்வும் அதிகளவில் இருந்தது.

இயக்கங்களில் பங்குபற்றி போராளிகளாக மாறியவர்களில் பெரும்பாலானவர்கள் இந்துக் கல்லூரிகளில் இருந்து வெளியேறியவர்களே! இதில் யாழ். இந்துக் கல்லூரி தமிழ்த் தேசிய உணர்வின் மையமாகவும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சமூக மாற்றத்துடன் கூடிய தேசிய உணர்வின் மையமாகவும் நீண்ட காலம் நிலைத்திருந்தது.

யோகி, ராதா, திலீபன் போன்ற தமிழ் தேசியத்தை மட்டும் வலியுறுத்திய புலிகளின் தலைவர்கள் இந்துக்கல்லூரியிலிருந்தே உருவாகினார். அதேவேளை சமூக மாற்றத்துடன் தேசிய உணர்வினை வற்புறுத்திய உமா மகேஸ்வரன், நாகராஜா, தேவதாசன், சேரன், ஆதவன், ஒளவை, சபேசன், ரவி, போன்றோர் மகாஜனாக் கல்லூரியி லிருந்து உருவாகினர். மகாஜனாவை உருவாக்கிய தெ.து. துரையப்பாபிள்ளை யிடம் காணப்பட்ட சமூக சீர்திருத்த கருத்துக்கள் இதற்கு அடித்தளமாக இருந்திருக்கலாம்.

யாழ். சைவ வேளாளக் கருத்து நிலைகளின் பலத்தினாலும் சமூக மாற்றத்தை முன்னெடுத்த அமைப்புகளின் தவறுகளினாலும் சமூக மாற்றத்துக்கான அரசியலும், சிந்தனையும் தொடர்ச்சியாகத் தோல்வியைத் தழுவின என்பது தான் குடா நாட்டு அரசியலின் வரலாறு.

சமூக மாற்றச் சிந்தனையின் தேக்கத்தினால் யாழ். சைவ வேளாள கருத்து நிலைகளும், கிறிஸ்தவ பாடசாலைகளினால் உருவாக்கப்பட்ட காலனித்துவ கருத்து நிலைகளுமே இன்றும் குடா நாட்டில் ஆதிக்க நிலையில் உள்ளன. தமிழ்த்தேசப் போராட்டத்திலுள்ள தவறுகளுக்கு இவற்றின் ஆதிக்கமே பிரதான காரணமாக இருந்திருக்கலாம் என்று நான் நினைக்கின்றேன். முற்போக்குச் சிந்தனைகள் ஊடுருவ முடியாத நிலைக்கும் இவையே பிரதான காரணங்களாக இருந்திருக்கலாம். யாழ். இந்துக் கல்லூரியில் சைவ வேளாள கருத்து நிலையின் ஆதிக்கம் மிக அதிகமாக இருந்தது. இன்றும் அவ் ஆதிக்கம் நிலவுகின்றது.

யாழ். குடா நாட்டில் உள்ள இன்னோர் பிரதான பிரிவினர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களாவர். தமிழர் அரசியலின் முதலாவது கட்டத்தில் இப்பிரிவினர் கவனத்தில் கொள்ளப்படாதவர்களாகவே இருந்தனர். இவர்களுக்கென அமைப்புக்கள் எதுவும் பெரிதாக இருக்கவில்லை. விவசாயக் கிராமங்களில் இவர்கள் முழுமையாக வேளாளரின் கட்டுப்பாட்டில் இருந்தனர், பொருளாதாரக் கட்டுப்பாடு, சித்தாந்த கட்டுப்பாடு என இரண்டும் இவர்கள் மீது திணிக்கப்பட்டிருந்தது. விவசாயக் கிராமங்கள் அல்லாத இடங்களில் இவர்கள் சற்றுச் சுதந்திரமாக இருந்தனர். காலனித்துவ ஆட்சியின் விளைவினால் உருவான நகர உருவாக்கத்தின் காரணமாக இவர்களில் சிலர் கிராமிய கட்டுப்பாடுகளிலிருந்து சற்று விடுபட்டு, நகரங்களில் உள்ள கராஜ்களில் இயந்திர திருத்துனர்களாக தொழில் செய்தனர். சிலர் கட்டிட ஒப்பந்தத் தொழில்களிலும் ஈடுபட்டனர்.

கத்தோலிக்க மதபீடம் இவர்களின் மேல் நிலையாக்கத்திற்கு சிறிது உதவியிருந்தது. உரும்பிராய், வசாவிளான் போன்ற விவசாயக் கிராமங்களில் பலர் மதம் மாறி கத்தோலிக்க மதத்தில் சேர்ந்ததால் சற்று மேல் நிலையாக்கம் பெற்றனர், கல்வி வாய்ப்புக்களையும் பெற்றனர். இது விடயத்தில் சுவாமி ஞானப்பிரகாசரின் பணிமகத்தானது ஆகும். இக் கிராமங்களிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களிலிருந்து சில படித்தவர்கள் உருவாகியிருக்கிறார்கள் என்றால் அதற்குப் பிரதான காரணம் சுவாமி ஞானப்பிரகாசரேயாவார். இவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அவர் சைவ வேளாளருடன் மட்டுமல்ல கத்தோலிக்க மத பீடத்துடன் கூட பல தடவைகள் முரண்பட வேண்டியிருந்தது.

எனினும் கத்தோலிக்க மதத்திற்குள்ளும் சாதிப் பாகுபாடு நிலவியிருந்தது. இளவாலையில் தாழ்த்தப்பட்டவர்களுக்காகக் கோவில் ஒன்றில் தனியான ஆசனமே ஒதுக்கப்பட்டிருந்தது. இதற்கு தீர்வாக மதத்தலைமைப் பீடம் ஒவ்வொரு சாதிக்கும் என கோவில்களைக் கட்டி பிரச்சினைகளைத் தீர்க்க முயன்றது. டானியலின் கானல் நாவல் கத்தோலிக்கரிடையே நிலவும் சாதிப் பாகுபாடுகளை தெளிவாக வெளிக்காட்டிய ஒன்றாகும்.

ஆனால் சைவ மதத்தைப்போல மதச்சித்தாந்தத்தில் சாதிப் பாகுபாடு அங்கு இருக்கவில்லை. இது மத ரீதியான ஒடுக்கப்படுவதற்கான வாய்ப்புக்களை இல்லாமல் செய்தது.

இக்காலகட்டத்தில் குடா நாட்டிற்கு வெளியே வாழ்ந்த மக்களின் நிலை யாது? இதனை அடுத்த இதழில் பார்ப்போம்.


**சமூகமாற்றச் சிந்தனையின் தேக்கத்தினால் யாழ். சைவ வேளாள கருத்து நிலைகளும், கிறிஸ்தவ பாடசாலைகளினால் உருவாக்கப்பட்ட காலனித்துவக் கருத்து நிலைகளுமே இன்றும் குடா நாட்டில் ஆதிக்க நிலையில் உள்ளன. தமிழ்த்தேசப் போராட்டத்திலுள்ள தவறுகளுக்கு இவற்றின் ஆதிக்கமே பிரதான காரணமாக இருந்திருக்கலாம்.**

# பறிபோன தமிழ் பிரதிநிதித்துவம்- தமிழர் மகாசங்கத்தை செயல்பட தூண்டுமா?

**தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தனித்துப் போவதாக கூறியதைக் கேட்டு ஏன் ஒதுங்க வேண்டும். கூட்டணி கூடியவாக்கு வங்கியை கொண்ட கட்சி என்பது மறுக்க முடியாத உண்மைதான். ஆனால் அவர்கள் தனித்துப் போக முற்படும் முன்பே அவர்களுக்குள் ஏற்பட்ட குத்து வெட்டுகளை தமிழர் மகாசபை அறியவில்லையா?**

**நட்டாமுட்டியன்**

திருமலை தமிழர் பிரதிநிதித்துவம் பறிபோனதைப் பற்றி ஒவ்வொருவரும் தமக்கு விரும்பிய வியாக்கியானங்களை தரவே முற்படுகின்றனர். தமிழ் கட்சிகள் ஒன்றாக இணையாததால் இழப்பு என்று தமிழர் மகாசபையும் பேரினவாத கட்சிகளால் தூண்டிவிடப் பட்ட சுயேட்சைக் குழுக்கழும், 48ம் ஆண்டிற்கு பின் போட்டியிடாத தமிழ் காங்கிரஸ் இம்முறை போட்டியிட்டமையே என தமிழர் விடுதலைக் கூட்டணியும், இதற்கெல்லாம் ஒரு படிமேல் சென்று தமிழ் வாக்காளர்கள் வாக்களிக்காதது தான் காரணம் என்று தமிழ் காங்கரசும் கூறி ஒருவர் மேல் ஒருவர் பழிபோடவே முனைகின்றனர்.



இந்த வாதங்களின் மறுபக்கத்தை நாம் பார்த்தால் ஒட்டுமொத்தமாக இவர்கள் அனைவரும் செய்த பொறுப்பற்ற செயலே இந்த நிலைக்கு காரணம் என விளங்கும்.

1994ல் அம்பாறையில் பெற்ற பாடத்தால் சகல தரப்பினரையும் ஓரணியில் கொண்டுவந்து 94ல் இழந்த 2வது ஆசனத்தையும் பெற்றுவிட வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டு உண்ணாவிரதம் வரை சென்ற திருமலை தமிழர் மகா சபையின் ஆரம்ப நடவடிக்கை பாராட்டத் தக்கதே. ஆனால் கூட்டணியினர் கூறிய நொண்டிச் சாட்டை ஏற்றுக் கொண்டு அவர்களை விலத்தி பின் மற்றவர்களை ஓரணியில் திரட்ட முனைந்து அதில் இரு பிரிவினர் சுழியோடித் தப்பியதாக கூறி சகல நடவடிக்கைகளிலும் இருந்து ஒதுங்கியது தான் வேதனையானது.

தமிழர் மகாசபை தான் கொண்ட இலட்சியப் பயணத்தை இடைநடுவில் விட்டது தான் இந்த வரலாற்று தோல்விக்கு வழிகோலியது. விதண்டா வாதிகளும் சுயநலவாதிகளும் உள்ள அரசியல் களத்தில் தாம் மேற் கொண்ட தீர்க்க தரிசன முடிவை செயல்படுத்துவதில் அது பின்வாங்கியிருக்க கூடாது. வாக்குகள் பிரிந்து பிரதிநிதித்துவம் பறிபோய் பாடம் படிக்கட்டும் என ஒதுங்கியதால் ஏற்பட்டது வரலாற்று தோல்வியாகும்.

உண்மையில் தமிழர் மகாசபை செய்திருக்கக் கூடிய சாத்தியமான வழி என்ன? தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தனித்துப் போவதாக கூறியதைக் கேட்டு ஏன் ஒதுங்க வேண்டும். கூட்டணி கூடியவாக்கு வங்கியை கொண்ட கட்சி என்பது மறுக்க முடியாத உண்மைதான். ஆனால் அவர்கள் தனித்துப் போக முற்படும் முன்பே அவர்களுக்குள் ஏற்பட்ட குத்து வெட்டுகளை தமிழர் மகாசபை அறியவில்லையா? கூட்டணியின் முதன்மை வேட்பாளராக சிறீ தெரிவிசெய்யப்பட்டதும் பின் ஈழத்து நாதன் போன்றோர் குழப்ப நிலையால் சிவபாலன் முதன்மை வேட்பாளராக கூட்டி வரப்பட்டாலும் பகிரங்கமானவையல்லவா?

எல்லாவற்றிற்கும் மேலாக கூட்டணியின் செயலாளர் நாயகமும் திருமலை மண்ணின் மைந்தனுமான சம்பந்தர் தேர்தலில் போட்டியிட முன்வராதது ஏன் என்று தமிழர் மகாசபைக்கு தெரியாதா?

1994இல் தங்கத்துரை போட்டியிட்டால் தனக்கு பிரதிநிதித்துவம் கிடையாமல் போகும் என்பதால் கடைசி நிமிடம் வரை தான் போட்டியிட மாட்டேன் என கூறி பின் பாராளுமன்ற காலத்தை பங்குபோடும் ஒழுங்கில் ஒத்துக் கொண்டதால் சம்பந்தர் போட்டியிட வந்தார் என்பதும் பின் 2 வருடங்களின் பின் தங்கத்துரை ஒப்பந்தபடி நடக்கவில்லை என திருமலை கூட்டணிக்குள் ஏற்பட்ட முறுகல் நிலையும் தமிழர் மகாசங்கம் அறியாததா?

இம்முறையும் தன் வெற்றிபற்றிய அவநம்பிக்கை தான் அவர் போட்டியிடாமைக்கு காரணம் என்பது முழுத் திருமலைக்கே தெரிந்த விடயமல்லவா?

அதேவேளை சிறீ, ஈழத்துநாதன் இருக்கையில் தன் தெரிவாக சம்பந்தர் சிவபாலனை ஏன் கொண்டு வந்தார் என்பதை மகாசபை அறியாதா? இவரது வரவானது திருமலை கூட்டணிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தி வாக்கு வங்கி கொண்ட கட்சியின் வேட்பாளர்களின் குழப்பத்தால் பிரதிநிதித்துவம் பறிபோகும் என்பதை மகாசங்கம் சிந்திக்கவில்லையா?

இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டார்களாயின் ஏன் சம்மந்தர் கூறிய வியாக்கியானங்களைக் கேட்டு மற்றவர்களை ஒன்று சேர்க்க போனார்கள். அப்படியானால் திருமலையில் 2 பிரதிநிதித்துவம் பெறப்படமாட்டாதென்பது மகாசங்கத்தினருக்கு கூட்டணியின் செயல்பட்டால் முன்பே தெரிந்திருக்க வேண்டுமல்லவா?


அடுத்து அவர்கள் மற்றவர்களை யாவது ஓரணியாக்க முயன்றதும் வரவேற்கத்தக்கதே. ஆனால் அங்கும் காங்கிரசும், சூரியமூர்த்தியும் சுழியோட்டம் போட்டதால் பேதலித்தது சரியானதா? மகா சங்கத்தின் நேர்மையான நோக்கம் 2 பிரதிநிதித்துவத்தையும் காப்பது. அதில் ஒன்றை கூட்டணியின் செயல்பட்டால் கோட்டைவிட்ட மகா சங்கம் மற்றையதை கூட்டுக்கு வராத இருவரினால் பறிகொடுத்தது தான் உண்மை. ஏனென்றால் இவர்களின் செயல்பாட்டை பார்த்த மகாசங்கம் ஒதுங்கியதால் தமிழர் பிரதிநிதித்துவம் ஓரங்கட்டப்பட்டது.

திருமலை பிரதிநிதித்துவத்தை இவர்கள் தான் குத்தகைக்கு எடுக்க முடியும் என்பது போல் செயல்பட முற்பட்ட கூட்டணிக்கும் மற்ற இரு அணிகளிற்கும் மகாசங்கம் ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்திருக்க முடியும்.

திருமலை மண்ணை நேசிக்கும் மண்ணில் வாழும் படித்த பயனுள்ள வேட்பாளர்களுக்கு பஞ்சம் என்றா மகாசங்கம் ஒதுங்கியது. இவர்கள் தாமே ஒரு குழுவை நியமித்து அதில் மற்றவர்களை (துரோகம் இளைத்தவர்களை தவிர்த்து) இணைத்து முன்னிறுத்தியிருந்தால் நிலைமை மாறியிராதா?

ஏனெனில் திருமலையில் நடந்த கூத்தால் வெறுப்படைந்த பலர் வாக்களிக்கவில்லை. வேறுபலர் பேரினவாத கட்சிகளே மேல் என எண்ணத் துணிந்தனர்.

இங்கு கிட்டத்தட்ட தமிழ் கட்சிகள் குழுக்களுக்கு அளிக்கப்படாத; பேரினவாத கட்சிகளுக்கு அளிக்கப் பட்ட வாக்குகளின் தொகை 30 ஆயிரம் இதனை எடுக்க தவறிய குற்றத்தை தமிழர் மகா சபை ஏற்கத் தான் வேண்டும். 3 அணிகள் ஏற்கனவே குழிபறிக்கையில் 4வது அணியாக நாம் ஏன் பிரதிநிதித்துவம் பறிபோக துணைபோக வேண்டும் என மகாசபை பயந்தது உண்மை தான். ஆனால் இப்படிப்பட்ட குழிபறிப்பவர்களை அம்பலப்படுத்தியிருந்தால் வெறுப்படைந்தவர்களின் வாக்குகள், ஒதுங்கியிருந்தவர்களின் வாக்குகள் எல்லாம் ஒருங்கிணைக்கப் பட்டு ஒரு ஆசனமாவது கிடைத்திருக்கும். இந்த தவறை செய்ய மகாசங்கம் இனிவரும் தேர்தல்களில் அம்பாறையில் கிடைத்த பாடத்தை அரிச்சுவடியாகக் கொள்ள வேண்டும்.



தனக்கென ஒரு வாக்கு வங்கி உள்ள ஒரே காரணத்தால் தான் எடுக்கும் எல்லா முடிவுகளுக்கும் தமிழ் மக்கள் தலையாட்டுவர். புள்ளடி போடுவர் என்ற திருமலை கூட்டணியின் இறுமாப்புக்கு ஆப்புவைக்கப்பட வேண்டும்.


கூட்டணி வாக்கு வங்கி உள்ளது. திருமலையில் தனித்துவமானது; என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால் சம்பந்தர் பற்றிய விமர்சனங்களும் விசனங்களும் உண்டு என்பதும் உண்மை. சம்பந்தரின் செயற்பாடுகள் விசனத்திற்குரியது. 94இல் தேர்தல் உடன்பாட்டின் பின் கடைசி நேரத்தில் பலவாதப் பிரதிவாதங்களுக்கு பின் தான் அவர் தேர்தலில் போட்டியிட சம்மதித்தார்.

ஆனால் இம்முறையோ தலைமை கொடுக்க வேண்டியவரே ஒதுங்கி தன் பிரதிநிதித்துவத்தை தேசியப் பட்டியல் மூலம் பெற முனைந்தார். இந்த சுயநல போக்கே திருமலையை பலிக்கடாவாக்கியது.


இனிவரும் காலங்களில் தனிநபர் சுயநல நோக்கிற்கு எல்லாவகையான நெருக்குதல்களுக்கும் முகம் கொடுக்கும் திருமலை மக்கள் தம் பிரதிநிதித்துவத்தை பறிகொடுக்கக் கூடாது. திருமலை பிரதிநிதித்துவம் எந்த ஒரு கட்சியின் சொத்துமல்ல. எவருக்கோ கொடுத்த குத்தகையும் அல்ல என்பதனை எதிர்வரும் தேர்தலிலாவது இந்த மண்ணின் மக்கள் நிரூபிக்க வேண்டும்.

அதற்கான ஆரம்ப அடித்தள வேலைகளை தமிழர் மகாசபை மேற்கொள்ளத்தான் வேண்டும். வெறுமனே தேர்தல்கால கோசம் போடுபவர்களை மட்டும் நம்பியிராது இந்தப் பிரதேசத்தின் எதிர்கால நலன் கருதி அதற்காக சேவை செய்யக் கூடிய; செயல்படக்கூடியவர்களை இப்பொழுதே அடையாளம் காண வேண்டும். அவர்களை ஓரணியில் திரட்ட வேண்டும். பிரதிநிதித்துவம் இல்லை என்பதால் எம் பிரச்சினைகளுக்கு தீர்வு இல்லை என ஒதுங்கி விடாது தமிழர் மகா சபைக்குள் உள்வாங்கப்படும் இவர்கள் மக்களின் பிரச்சினைகளை முன்னெடுப்பவர்களாக செயல்பட வேண்டும். படித்தவர்கள், இளைஞர்கள், மாணவர்கள் என்ற பல அணிக ஒருங்கிணைக்கப்பட்டு பிரதேச நலனுக்காக உழைக்கும் வேலைத் திட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

தற்போதைய பாராளுமன்றத்தில் இருக்கும் எந்த தமிழ் பிரதிநிதியாக இருந்தாலும் அவர் எந்த மாவட்டத்தை பிரதிநிதித்துவ படுத்தினாலும் அவரின் சேவையை இந்த பிரதேசத்திற்குப் பெற்றுக் கொடுக்க தயங்கக் கூடாது. ஏனென்றால் வடக்கு கிழக்கின் மையம் திருமலை தான் என்ற அடிப்படை நிலையில் இருந்து நாம் மாறிவிடக் கூடாது. தலைநகரைக்காக்க முடியாதவர்கள் தமிழர் நிலையை எப்படி மாற்ற முடியும். திருமலை தமிழர் இதனை சிந்திக்க வேண்டும். உடன் செயல்பட வேண்டும். நீறுபூத்த நெருப்பாக உள்ள திருமலை தமிழ் மக்களின் இரண்டு பிரதிநிதித்துவத்தையும் இனிவரும் காலங்களிலாவது காப்பாற்ற தமிழர் மகாசபை ஆவன செய்யுமா?



# இந்தியாவின் மூலோபாய நடவடிக்கைகளும் சீனாவின் நிலைப்பாடும்



தெற்காசியப் பிராந்தியத்தில் தன்னை ஒரு வல்லரசாக வரிந்து கொள்வதற்கு இந்தியா எடுத்துவரும் முயற்சிகளுக்கு பாகிஸ்தானும் சீனாவும் தொடர்ந்தும் பெரும் சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் இருக்கின்றன. இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் கடைப்பிடித்துவரும் விரோதக் கொள்கைகள் காரணமாகவும், சீனா தனது ஏவுகணைத் திட்டங்களை நவீன மயப்படுத்தி வருவதாலும் சமாதான அடிப்படையிலான நீண்டகால பாதுகாப்பு மற்றும் வெளிவிவகாரக் கொள்கைத் திட்டம் ஒன்றை உருவாக்கிக் கொள்வதில் இந்திய கொள்கை வகுப்பாளர்கள் பெரும் சவாலையும், சங்கடத்தையும் எதிர் கொள்கிறார்கள். கெடுபிடி யுத்த கால நிலைமைகளின் "நிழல்" இப்போதும் தொடர்வது தெற்காசியப் பிராந்தியத்தில் தொடர்ந்தும் ஒருவித பதற்ற நிலையைத்தான் உருவாக்கி வைத்திருக்கின்றது.

இம்மாத நடுப்பகுதியில் பாகிஸ்தான் வர்த்தக நகரான கராச்சியில் நடைபெற்ற "ஐடியாஸ்- 2,000 பாகிஸ்தான்" என்ற பாதுகாப்புக் கண்காட்சியும், சீனா அதில் முக்கிய பங்காளியாகக் கலந்து கொண்டமையும் தெற்காசியப் பிராந்தியத்தில் ஆயுதப் போட்டி தீவிரமடையக் கூடிய சூழ்நிலைகளைத் தான் வெளிப்[illegible]தியிருக்கின்றது. முக்கியமாக இது தமக்கு எதிரான ஒரு எச்சரிக்கை என இந்தியா உணர்வதிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்கின்றது. பாகிஸ்தானில் உற்பத்தி செய்யப்படும் அதி நவீனரக ஆயுதங்களை ஏற்றுமதிச் சந்தைக்கு அனுப்பிவைப்பது தான் இந்தக் கண்காட்சியின் முக்கியமான நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற போதிலும், இந்தியாவுக்கு சவால் விடுவதாகவே இக் கண்காட்சி முடிவடைந் திருக்கின்றது.

பாகிஸ்தானிய விமானப் படையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்த தகவல்களும் இந்தியாவுக்கான ஒரு எச்சரிக்கையாகவே கருதப்பட வேண்டியதாகவுள்ளது. "பாகிஸ்தானில் தயாரிக்கப்படும் ஆயுதங்களும் வெடி பொருட்களும் "நேட்டோ" வின் தரத்துக்கு நிகரானவை. இவை அனைத்தும் காட்சிக்கு வைக்கப்படவில்லை. தெரிவு செய்யப்பட்ட சில ஆயுதங்கள் மட்டுமே வைக்கப்பட்டன." இவ்வாறு இவர் கூறியிருப்பது பாகிஸ்தானின் கையிருப்பில் மேலும் பெருமளவு சக்திவாய்ந்த ஆயுதங்கள் இருப்பதை உணர்த்துவதற்காகத்தான்.

பாகிஸ்தானில் அதன் சொந்த முயற்சியாலும் சீனாவின் உதவியுடனும் தயாரிக்கப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. முக்கியமாக விமானப் படைக்குத் தேவையான அதி நவீன யுத்த விமானங்கள், யுத்தத் தாங்கிகள், ஏவுகணைகள் என்பன பாகிஸ்தானின் இராணுவ பலத்தை வெளிப்படுத்திக் காட்டிக் கொண்டிருந்தன. இதற்கு முன்னர் ஒரு போதுமே பாகிஸ்தான் தன்னுடைய ஆயுத பலத்தை இந்தளவுக்கு காட்சிக்கு வைத்ததில்லை என்பதை அந்நாட்டு அதிகாரிகளே உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள். அதேவேளையில் இந்தியாவுக்கு எதிராகப் 'பாகிஸ்தானால் எந்த ஒரு யுத்தத்தின் போதும் பயன்படுத்தக் கூடியபலத்தையே இதன் மூலம் அந்நாடு வெளிப்படுத்திக் காட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதனைவிட ஆயுத பலத்தில் தான் யாரையும் நம்பியிருக்கவில்லை என்பதைக் காண்பிக்க வேண்டிய தேவையும் பாகிஸ்தானுக்கு இருந்தது. ஆயுத உற்பத்திகளைத் தாமதப்படுத்த வேண்டும் எனவும், இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களுக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிக் கொள்ள வேண்டும் எனவும் பாகிஸ்தான் மீது அமெரிக்கா தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருவது தெரிந்ததே. இதனைக் காரணமாகக் காட்டி பாகிஸ்தான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைக ளையும் விதித்திருந்தது. இதற்கு மத்தியிலும் தம்மால் "சுயதேவை" யைப் பூர்த்தி செய்வதற்கும் அதிகமாக ஆயுதங்களை உற்பத்தி செய்ய முடியும் என்பதை வெளிப்படுத்துவதுதான் பாகிஸ்தானின் நோக்கம் எனத் தெரிகின்றது. தம்மீது முழுமையான தடைகள் விதிக்கப்பட்டாலும் கூட, ஆயுத பலத்தில் தம்மை கட்டுப்படுத்த முடியாது என்பதை இஸ்லாமிய நாடுகளுக்குக் காட்டிக் கொள்வதும், இவ்வாறான சந்தர்ப்பங்களில் சீனாவின் உதவி கிடைக்கும் என்பதைக் காட்டிக் கொள்வதும் தான் பாகிஸ்தானின் அக்கறையாக இருந்துள்ளது.

பாகிஸ்தான் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே அதன் வெளியுறவுக் கொள்கையிலும் பாதுகாப்புக் கொள்கையிலும், பிரதான அம்சமாக இருப்பது இந்திய எதிர்ப்புணர்வு தான். இந்தியாவைச் சீர்குலைப்பதுதான் பாகிஸ்தானின் வெளியுறவுக் கொள்கை என இந்திய விமர்சகர்கள் குறிப்பிடுகின்றார்கள். இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதும், இந்தியாவின் எல்லைகளுக்குள் புகுந்து தாக்குதலை நடத்துவதும் பாகிஸ்தானின் வழமையாக வுள்ளது எனவும் இவர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். கெடுபிடி யுத்த காலத்திலும் அதன் பின்னரும் ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் பாகிஸ்தான் தலையிட்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் சர்வதேச ரீதியான கண்டனத்தை பெற்றது. ஆனால் ஆரம்பத்தில் இவ்வாறு தலையிடுவதற்குத் தூண்டுதலாக இருந்ததே அமெரிக்காதான் என்பதும் கவனிக்கத் தக்கது.

அதேவேளையில் பாகிஸ்தானிய இராஜதந்திரிகளும் புத்திஜீவிகளும் இந்தியாவுடன் அதற்கு ஏற்பட்ட யுத்தங்களை நியாயப்படுத்தியே வருகின்றார்கள். மேற்குலக நாடுகளும் பாகிஸ்தானுடன் இஸ்லாமிய தீவிரவாதிகள் கொண்டிருப்பதாகக் கருதப்படும் நெருக்கமான உறவுகள் தொடர்பாக மிகவும் அவதானமாகவே இருந்து வருகின்றார்கள். இவற்றுக்கான ஆயுதங்கள் கூட பாகிஸ்தான் மூலமாகவே வழங்கப் படுவதாகவும் கருதப்படுகின்றது.

பாகிஸ்தானின் அணுவாயுதத் திட்டத்தை சீனா தான் ஊக்குவித்து வருகின்றது என்பதில் எந்த ரகசியமும் இல்லை. பிராந்தியத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தியா- பாகிஸ்தான்- சீனா என்ற முக்கோண இராணுவ அமைப்பில் தனது பாதுகாப்பை உறுதி செய்துகொள்வதற்கு பாகிஸ்தானின் துணை இந்தியாவுக்கு அவசியம். அதேபோல இந்தியாவுக்கு எதிராக தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்கு பாகிஸ்தானுக்கும் சீனாவின் துணை தேவை. அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகள் தன்னைக் கைவிட்டாலும் சீனா தனது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உதவும் என பாகிஸ்தான் நம்புவதுதான் இரு நாடுகளுக்கும் இடையே இராணுவ ரீதியான உறவுகள் வலுவடைந்திருப்பதற்குக் காரணம். மறுபுறத்தில் இந்தியாவின் அண்டை நாடுகள் அனைத்தும் தனித்தனியாகவோ கூட்டாகவோ அதனுடன் எதிர்ப்புணர்வைத் தான் கொண்டுள்ளன.

சீனாவின் வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தவரையில் அது எப்போதும் மர்மமான ஒன்றாகத்தான் இருந்து வருகின்றது. சரித்திர ரீதியாக சீனா ஏனைய நாடுகள் மீது ஆக்கிரமிப்பைச் செலுத்தும், விஸ்தரிப்பு வாதக் கொள்கையைக் கொண்டுள்ள ஒரு நாடாகவே இருந்து வருகின்றது. கெடுபிடி யுத்த முடிவில் புதிய உலக ஒழுங்கை அமைத்துக் கொள்ளும் போது, தெற்காசியப் பாதுகாப்பைப் பொறுத்த வரையில், இரண்டு அடிப்படைகளிலேயே தனது கொள்கையை சீனா வகுத்துக் கொள்ள விரும்புகின்றது. ஒன்று சீனா- அமெரிக்க உறவுகளுடன் சம்பந்தப்பட்டது. இரண்டு- இந்தியாவுடன் நேரடியாகத் தொடர்புபட்டது.

தற்போதைய உலக ஒழுங்கில் இந்த ஒரு சர்வதேச அமைப்பிலும் சீனா ஓர் சக்திவாய்ந்த மாற்று நாடாக இருப்பதைத் தான் விரும்புகின்றது. தொழில்நுட்பத் துறையில் சீனாவின் சக்தி வரையறுக்கப்பட்டதாக இருந்தாலும் கூட, உலகம் முழுவதிலும் இடம்பெறும் சம்பவங்களில் அமெரிக்காவுக்கு போட்டியான ஒரு நிலைப்பாட்டை எடுக்க முற்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இதிலிருந்து தெற்காசியப் பிராந்தியமும் விதிவிலக்காக இருக்க முடியாது. அண்மைக்காலத்தில் வளர்ச்சியடைந்து வரும் இந்திய அமெரிக்க உறவ்களும், அமெரிக்க- பாகிஸ்தான் உறவுகளில் ஏற்பட்டு வரும் விரிசலும் தெற்காசியப் பிராந்தியத்தில் சீனாவின் மேலாண்மைக்கு ஒரு அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றது. இதேபோல சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான நம்பிக்கையீனங்கள் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளைப் பாதிப்பதாக உள்ளது. மறுபுறத்தில் இது மறைமுகமாக தெற்காசிய பிராந்தியப் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கின்றது. அத்துடன் இந்தச் சூழ்நிலை, இந்தியாவுடனான பாகிஸ்தானின் முறுகல் நிலையை மேலும் அதிகப்படுத்துவதாகவும் இருக்கும்.

இரண்டாவதாக ஆசியப் பிராந்தியத்தில் ஒரே ஒரு சக்திவாய்ந்த நாடாக தானே இருக்க வேண்டும் என்பது தான் சீனா விரும்புகின்றது. இதற்கு இந்தியாதான் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இந்தியப் பொருளாதாரத்தின் துரித வளர்ச்சி குறிப்பாக- தகவல் தொழில் நுட்பத் துறையில் இந்தியா கண்டுள்ள முன்னேற்றத்துடன் பாதுகாப்புத் துறையில் சீனாவில் ஏற்பட்டுவரும் அதிக வளர்ச்சி இந்தப் பிராந்தியத்தில் சீனாவின் மேலாண்மைக்கான நேரடி அச்சுறுத்தலாக அமைந்திருக்கின்றது. இதனால், சீனாவின் வெளியுறவுக் கொள்கை வகுப்பில் மட்டுமன்றி, பாதுகாப்பு விடயங்களிலும் இந்தியா தொடர்பான விடயங்கள் முக்கியத்துவத்துடன் கவனம் செலுத்தப்படுகின்றது. இந்தியாவின் மூலோபாய நடவடிக்கைகள் தான் சீனாவின் தீவிர நிலைப்பாட்டை நிர்ணயிக்கும்.

இந்தியாவைச் சுற்றிவளைத்தல் என்ற சீனாவின் கொள்கையின் அடிப்படையிலேயே இந்தியாவின் பலத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை சீனா மேற்கொள்வதாக ராஜதந்திர வட்டாரங் கள் குறிப்பிடுகின்றன. 1983ஆம் ஆண்டிலேயே பாகிஸ்தானுக்கு அணு வாயுதம் தொடர்பான முழுமையான திட்டம் ஒன்றை சீனா வழங்கியதாக அமெரிக்க புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்திருந்தன. மீண்டும் 1986 ஆம் ஆண்டில் அணு ஆயுதங்கங்களைத் தயாரிப்பதற்கு அவசியமான மூலப் பொருட்கள் சிலவற்றை பாகிஸ்தானுக்கு சீனா வழங்கியதுடன் சீன விஞ்ஞானி களும் உதவி புரிந்ததாக அமெரிக்க புலானாய்வுத் துறையினருக்குத் தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து 1991ம் ஆண்டில் சீனாவிடமிருந்து பாகிஸ்தான் அணுசக்தியைப் பயன்படுத்தக் கூடிய எம்-11 ஏவுகணைகளை பாகிஸ்தான் கொள்வனவு செய்ததாக "வோல் ஸ்றீட் ஜேர்னல்" பரபரப்பான செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது. இந்தியாவுடன் பாகிஸ்தானுக்குள்ள பகைமையைப் பயன்படுத்திக் கொண்டே இவற்றை சீனா வழங்கியது. இந்தியாவைச் சுற்றிவளைத்தல் என்ற பாகிஸ்தானின் தந்திரோபாயத்தில் இது முதலாவது அம்சமாகக் கருதப் படுகின்றது.

இந்தியாவைச் சுற்றிவளைக்கும் தந்திரோபாயத்தின் மற்றொரு அம்சமாக பர்மாவுக்கு சொந்தமன கொகோ தீவுகளில் ராடர் தளம் ஒன்றை சீனா நிறுவியிருக்கிறது. இது அந்தமான்- நிக்கோபார் தீவுகளுக்கு மிகவும் சமீபமாகவுள்ளது கவனிக்கத்தக்கது. இதனைவிட திபெத் உட்பட இந்தியாவின் எல்லைப் பகுதிகள் சிலவற்றில் தமது சக்திவாய்ந்த ஏவுகணைகளை சீனா நிலைநிறுத்தியுள்ளது. இந்தியாவின் "அக்னி" ஏவுகணைக்குப் போட்டியாகவே இவை நிலைநிறுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில்தான் அமெரிக்காவுடனான உறவுகளைப் பலப்படுத்துவதில் இந்தியா அதிகளவு அக்கறையைக் காட்டிவருகின்றது. இருந்தாலும் தெற்காசியாவில் இந்திய- சீன முறுகல் நிலை- பாகிஸ்தான் இந்திய உறவுகளை மட்டுமன்றி தெற்காசியாவிலேயே அரசியலில் செல்வாக்கைச் செலுத்தும் ஒரு அம்சமாக இருக்கும் என்பதே உண்மை நிலையாகும்!

ரதன்

## சிறு கதை



# தவறான தராசுகள்

## திக்குவல்லை கமால்

கென்ரீன் கலகலத்தது. அதுதான் எமது தகவல் பரிவர்த்தனை நிலையம். காலை வேளையில் தான் ஒலிபரப்புக்கள் அதிகம்.

அப்படிப்பட்டதொரு சந்தர்ப்பத்தில் தான் எல்லோரது கவனத்தையும் ஈர்த்துக் கொண்டு அமீன் நானா அங்கே வந்தார். எல்லோருமே அவரை மொய்த்துக் கொண்டனர்.

வாடிச் சோர்ந்து போயிருந்தார். முகத்திலே தொன் கணக்கில் கவலை.

"எப்பிடி இப்ப நல்லமா...?" பலரும் ஒரே குரலில் கேட்டனர்.

"கொஞ்சம் நல்லம்"

வேலைக்கு வரக் கூடியளவுக்கு உடல் தேறியிருக்கிறதென்ற அர்த்தம் அதற்குள்ளே தொனித்தது.

மெல்லச் சிரித்தபடி கென்ரீனில் அமர்ந்திருந்த நுவைஸ் மாஸ்டர் எழுந்து வெளியே சென்றது அமீன் நானாவுக்கு என்னவோ போலிருந்தது.

"சேர் போறா?"

அவராவது கதைக்க வேண்டுமே!

"வாரன் வாரன்... இப்பவே போறல்லேன்"

என்றபடி ஏதோ பெரிய வேலைபோன்று முன்வைத்த காலைத் தொடர்ந்து முன்வைத்தார்.

சிற்றூழியராகச் சேர்ந்தவர் அமீன் நானா. முப்பது வருடமாக வேலை. பென்ஷன் வயதையும் எட்டிப் பிடித்து விட்டார். இங்கு தொடர்ச்சியாக நீண்டகாலம் வேலை செய்த பெருமை அவரையே சாரும்.

எத்தனை மாணவர்களை... எத்தனை ஆசிரியர்களை... எத்தனை அதிபர்களை அவர் கண்டு விட்டார். ஒரு காலத்தில் மாணவர்களாக இருந்தவர்கள் தான் பெரும்பாலும் இன்று ஆசிரியர்களாக இருக்கிறார்கள்.

எந்தக் கதவுக்கு எந்தத் திறப்பு, எந்தக் கபேட்டில் எந்த ஃபைல் என்பதெல்லாம் அமீன் நானாவுக்கு தண்ணிப் பட்டபாடு தான்.

சுருக்கமாகச் சொன்னால் எல்லோருக்குமே வேண்டிய பிரகிருதி .

"இந்தாங்கோ பிளேன்டி குடீங்கோ. பாண் துண்டொன்று தின்னியா? பருப்புக் கறீக்கி" கென்ரீன் காரன் முந்திக் கொண்டு உபசரித்தான்.

"நெனச்சதெல்லாம் திண்டகாலம் பெய்த்து" வயிற்றைத் தடவியபடி அமீன் நானா சொன்னார்.

குறுக்கும் நெடுக்குமாக வயிற்றைக் கிழித்து... மீண்டும் தையல் போட்டு... சுருக்கமும் மிதப்புமாக பார்க்கவே நெஞ்சு பதைக்கும் காட்சி.

"பௌத்து நோவு" என்ற படி பாடசாலையிலிருந்து தான் ஒரு நாள் இடைநடுவில் வீட்டுக்குப் போனார் அமீன் நானா.

கைமருந்து, உள்ளூர் டாக்டர்... அப்படி இப்படியே போய் இரவாகும் போது ஆஸ்பத்திரிக்கே போய்ச் சேர்ந்து விட்டார். உடனடியாக "எபன்டி சைட்" சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார் என்ற செய்தி அடுத்த நாள் காலையிலேயே பாடசாலைக்குப் பறந்து வந்துவிட்டது.

எல்லோருக்குமே ஒரு அதிர்ச்சி தான். அமீன் நானாவுக்கு பாடசாலையென்றால் வீடுதான். ஒவ்வொரு வேலையாகப் பார்த்துப் பார்த்துச் செய்து கொண்டிருப்பார். எல்லோருடனும் அன்பு. உதவிசெய்யும் மனப்பான்மை.

"லீவெல்லாம் முடிஞ்சிக்குமே" இரண்டு டீச்சர்மார் கவலை தெரிவித்தனர்.

"எனத்தியன் செய்த... ஏன்டமாதிரி வந்து ஸைன் வெக்கச் சென்ன பிரின்ஸிபல்"

மாறி மாறி ஒருவர் இருவராக வந்து கொண்டிருந்தனர்.

"ஒபரேஷன் பண்ணி வெச்சீக்கச் செல்லே பெய்த்துப் பார்த்த... நானென்டா தலயகௌபுமெண்டு நம்பலல்ல... இப்ப எவளவு நல்லமன்"

"பாவம் புள்ள குட்டிக்கார மனிசன். எடுக்கிய சம்பளம் தின்னக் குடிக்கவே போத. நசல் நறுக்கு செல்லிக்கொண்டா வார. நாங்க ஸ்டாஃபால ஐயாயிரம் மட்டும் சேத்திக்குடுத்தேன். பொஞ்சாதீட மொகத்தில எவ்வளவு சந்தோசம்"

அமீன் நானாவைப் பார்த்து விட்டு டீச்சர்மார் இருவர் இப்படிக் கதைத்த வண்ணம் சென்றனர்.

அமீன் நானாவுக்கு பாடசாலையை ஒருமுறை சுற்றிப் பார்க்க வேண்டும் போலிருந்தது. பார்த்த பார்வைக்கு ஆங்காங்கே இரண்டொரு ஆடுகள் தன் பாட்டில் மேய்ந்து கொண்டிருந்தன. ஒன்றோ கேற் பூட்டப்படவில்லை. அல்லது வேலிக் கம்புகள் பிடுங்கப்பட்டுள்ளன. உள்ளவன் இல்லாவிட்டால் இப்படித்தானே?

"அமீன் நானா தேத்தண்ணி குடிக்கோமா?"

கென்ரீன் காரனும் இடைக்கிடை அமீன் நானாவை கவனிக்கத் தவற வில்லை. பாக்கி ஏதும் இருந்தால், சம்பளம் கிடைத்து அடுத்த நாளே முகத்தில் பாயும் குணம் அவருக்கு. நினைத்துப் பார்த்த போது அமீன் நானாவுக்கு திக்கென்றது.

"நான் சல்லியள் தரீக்கா?"

"இல்ல அமீன் நானா. அதெல்லாம் பொறகு பார்சேலேன்"

சற்றே நிம்மதி அவருக்கு.

கோமேந்து வாட்டிலிருந்து தப்பினோம் பிழைத்தோமென்று வந்துசேர்ந்து, கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக மருந்து மாயமென்றும் சாப்பாடென்றும் வண்டி ஓடுகிற தென்றால், அதை ஓடவைத்தது. அவர் பழகிய பாடசாலைச் சமுதாயம் தான்.

ஒரு நாள் மேல்வகுப்பு மாணவர்கள் வந்தார்கள். பிள்ளைகள் தானே என்று அவர் பெரிதாக ஒன்றும் கணக்கெடுக்கவில்லை. அவர்கள் கொடுத்துச் சென்ற கவருக்குள் மூவாயிரம் இருந்த போது அவருக்கு தூக்கி வாரிப் போட்டது.

பெரிதாகப் பழக்க மென்றில்லாதவர்களும் வரத்தான் செய்தனர். அவர்களோடு இரண்டொரு படிக்கும் பிள்ளைகளும் வந்தனர். சும்மாவல்ல ஒரு பிஸ்கட் பக்கற்றோ, பால்மாவோ கொண்டு தான் வந்தார்கள்.

மக்கள் தொடர்பு பற்றி சுயமதிப்பீடு செய்து கொள்ள நோயும் ஒரு வகையில் உதவத்தான் செய்கிறது போலும்.

அவருடைய மனைவி மர்ஹமா அவ்வப் போது சொல்வாள்.

"மாஸ்டர் மாரட டீச்சர் மாரட கலியாணமெண்டு நீங்களும் மாஸம் மாஸம் குடுத்துக் கொண்டே நிக்கிய."

"ஒரெடத்தில வேல செய்தெண்டா அப்பிடித்தானே" அவர் சமாளிக்கப் பார்த்தார்.

"நீங்களும் எல்லாரையும் கூப்பிட்டு ஒரு சாப்பாடு போடுங்கோ. அப்ப குடுத்ததெல்லாம் கெடைக்கும்" கலகலென்று சிரித்தபடியே அவள் சொன்னாள்.

"இங்க பாருங்கோ. எடுக்கப் பாத்துக் கொண்டு குடுக்கப்படாது. நல்ல நோக்கத்தோட குடுத்தா அது எப்பசரி திரும்பி வார"

அவர் என்றோ சொன்னது போல் இப்பொழுது திரும்பி வந்து கொண்டிருக்கிறது.

"டனன்... டனன்..."

இன்டவலுக்கு மணியடித்து விட்டது. பிள்ளைகள் ஆரவாரத் தோடு வெளியே பாய்ந்து கொண்டிருந்தனர்.

பதினொரு மணியென்றதுமே மருந்து ஞாபகம் வந்தது அவருக்கு. இனிப் புறப்படத் தானே வேண்டும்.

"கொஞ்சம் நில்லுங்கோ. புள்ளையள் போடிய கூத்துக்கு ஒங்கட மேல்ல வந்து முட்டினா எனத்தியன் நடக்கிய"

கன்ரீன் காரன் தடுப்புப் போட்டதில் அர்த்தம் இருந்தது.

"சரி சரி" என்றவாறு மீண்டும் வாங்கில் அமர்ந்து கொண்டார்.

"அமீன் நானா... நான் ரூமுக்கு பெய்த்திட்டு வாரன் கொஞ்சம் நில்லுங்கோ"

எங்கிருந்து வந்தாரென்று கூட அவருக்கு விளங்கவில்லை. இப்படிச் சொல்லிவிட்டு குவாட்டர்ஸ் பக்கமாக விரைந்தார் நுவைஸ் மாஸ்டர்.

என்ன விஷயமென்று அமீன் நானாவுக்கு பிடிபடவில்லை. இன்னொரு வகையில் அவர் மீது அடிமனதில் ஒரு வெறுப்புணர்வும் இழையோடத் தான் செய்தது.

"எல்லா விரலும் ஒரு மாதிரியா? என்று கேட்டு அதை மறக்க முனைந்தபோது அது இன்னுமின்னும் மேலெழுந்து வந்தது.

அமீன் நானாவுக்கு முதுகை நிமிர்த்தக் கூடிய சுகம் கிடைத்த போது ஸ்கூலால் கொடுத்த ஐயாயிரம் ரூபாவின் நிழல் கூட இருக்கவில்லை. அந்தப் பட்டியல் மாத்திரம், இருக்கவே செய்தது.

பொதுவான கொடுப்பனவுகள், அன்பளிப்புகள் செய்யும் போது ஏலவே ரோணியோ செய்து வைத்துள்ள பெயர்ப்பட்டியலில் ஒவ்வொருவரதும் தொகை குறிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு கொடுப்பது பொதுவான நடைமுறை.

அந்த லிஸ்டை அமீன் நானா பார்த்த போது ஐம்பதும் நூறுமென்று எல்லோருந்தான் போட்டிருந்தார்கள். நுவைஸ் மாஸ்டரைத் தவிர!

"நான் அவருக்கு எனத்தியன் செஞ்ச குத்தம்?" படுக்கையிலிருந்த படியே யோசித்து யோசித்துப் பார்த்தார். அவரால் கண்டுபிடிக்க இயலவேயில்லை.

"அவருக்கிட்ட கடன்கிடன் எடுத்திட்டு குடுக்கா முட்டோ"

அவ்வப்போது கைமாற்றுக்கள் செய்தபோதும் அடுத்த சம்பளத்துக்குமேல் அது நீடிப்பதில்லையே.

"டனன்... டனன்"

அடுத்த மணி மாணவர்களை மீண்டும் வகுப்புக் கூட்டுக்குள் கொண்டு போய்ச் சேர்த்தது.

இனிப் போகலாந்தான். ஆனால்....

"ஆ அமீன் நானா வாங்கோ" சொல்லி வைத்தாற்போல் வந்து கூப்பிட்டார் நுவைஸ் மாஸ்டர்.

இருவரும் முன்கேற் பக்கமாக நடந்தனர்.

"இங்க பாருங்கோ ஒங்களுக்கு ஸ்டாஃபால ஒதவி செய்யச் செல்லே நான் ஊருக்குப் பெய்த்தீங்க... ம்... அம்பது நூறு தந்து வேலமில்ல. இந்தாங்கோ இத வெச்சிக்கோங்கொ"

அந்தக் கவரைக் கைநீட்டி எடுத்த அமீன் நானாவின் முகத்திலே ஆயிரம் நன்றிப் பூக்கள்.

அதையெல்லாம் சுமந்துகொண்டு திரும்பி நடந்தார் நுவைஸ் மாஸ்டர்.

"யா அல்லா என்ன மன்னிச்சிக்கோ"

அவரது மனம் அந்தக் கனத்திலேயே மன்னிப்புக் கோரியது.

"பொறத்தீ மனிசன்... ஒதவி செய்யோணுமெண்டு நீங்க எதின வேலவெட்டி செஞ்சி குடுக்கியன். நன்டில்ல.... நீங்க நசல்ல புழுந்தெண்டு ஒரு அம்பதுருவக் சல்லி தந்தா... ம்... ஏன்ட புள்ளக்கி கொஞ்சம் கணக்கு படிச்சிக் குடுக்கச் சென்ன... டைமில்லையாம்.... தாருக்காலும் ஒரு ஒதவி செய்தல்ல... இந்த வந்தான் வருத்தானியருக்கு எடம்குடுக்கவே படாது"

சில நாட்களுக்கு முன்பு நுவைஸ் மாஸ்டரைப் பற்றிக் கதையெழுந்த போது, நாச்சியா டீச்சர் சொன்ன வார்த்தைகள் அமீன் நானாவின் காதுக்குள் எகிறி மண்டையைப் பிளப்பது போலிருந்தது.

மெல்ல மெல்ல நடந்து... நின்று நிதானித்து சுருட்டிய கவரை விரல்களால் நீக்கி கண்ணொளி பாய்ச்சினார் அமீன் நானா.

உள்ளே... மயிலொன்று தோகை விரித்து ஆடிக்கொண்டிருந்தது.

# அல்லல்படும் மக்கள் இன்னல் தீருமா?

தேர்தல் முடிவடைந்து தெரிவானவர்களும் தலைநகரில் தஞ்சமடைந்து விட்டனர். வாக்காளப் பெருமக்கள் வேட்டுச் சத்தங்களையும் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையும் மீண்டும் முகம் கொடுக்க தொடங்கி விட்டனர். வென்றவர்களில் ஒரு பகுதியினர் அரசு அமைப்பதற்கு தெளிவான ஆதரவை தந்த போதும் மற்றவர்கள் மாற்றுக் கட்சி ஆட்சிக்கு முன் நிபந்தனைகள் விதித்து அவை நிறைவேறினால் மட்டுமே ஒத்துழைப்பு என கூறி எந்த மாற்றமும் இல்லாமல் இருந்த அரசே மீண்டும் தன்னை நிலை நிறுத்தியுள்ள வேளையில் புதியதொரு நிலைப்பாடும் ஏற்பட்டுள்ளது.


மத்திய அரசில் பொதுசன ஐக்கிய முன்னணியை பலப்படுத்திய ஈ.பி.டி.பி அதன் அமைச்சரவையிலும் இடம் பெற்றதே அந்த நிகழ்வாகும்.

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, தமிழர் விவகாரம் என வடிவமைக்கப்பட்ட அமைச்சின் அமைச்சர் பதவியை ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா பொறுப்பேற்றார்.

இம்மந்திரி பதவி பற்றி பலரும் பலவித கருத்துக்களை பதவிப்பிரமாண நாளில் இருந்து தெரிவித்து வருகின்றனர்.

1965ல் யுஎன்பி அரசினை ஸ்தாபிக்க உதவிய தமிழரசு கட்சியில் இருந்து அதன் ஆசீர்வாதத்துடன் அமைச்சரான மாகாண சுயாட்சியும் இந்திய (அமைதி) படையுடனான யுத்தத்தினால் திசைமாறி கழுதை தேய்ந்து கட்டெறும்பானதாக மாகாண சபையும் அதன் செயல்பாடும் அமைந்தது.

ஈழப் போராட்டம் மாகாண சபையாகி பின் மாகாணசபை மத்திய அரசின் ஆளுனரின் கீழ் நிர்வாக அலகாக மாறியது. ஆக மீண்டும் இருந்த இடத்திற்கே திரும்பிய நிலை அதிகாரிகளின் செயல்பாட்டை மட்டுமே கொண்ட மாகாண



அதுவரை அரசியல் சீர்திருத்த சூழலில் இடம் பெற்று அரசிற்கு பலவழிகளில் தனிப்பட்ட ரீதியில் முட்டுக் கொடுத்த சம்பந்தரின் சம்மதத்துடன் தான் சமர்ப்பிக்கப்பட்டதாக அரசவட்டாரங்கள் கூறியபோதும் கூட்டணியின் ஒரு பகுதியினரின் எதிர்ப்பால் கடைசிநேரத்தில் கூட்டணி எதிர்த்ததும் உண்மை.

ஆக 1994இல் இருந்து மிகவும் உக்கிர மடைந்த யுத்த கெடுபிடிகளால் இன்னல்படும் மக்களுக்கு எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

இருந்தால் போதுமா? பாராளுமன்ற பிரதிநிதிகளால் தமது நாளாந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற மக்களின் எதிர்பார்ப்புகள் தவறானதா? யுத்த சூழலில் தாம் வாழ அரச பாதுகாப்போடு சொகுசு வாகனங்களில், கொழுத்த சம்பளம் சலுகைகளோடு கொழும்பில் முடங்கும் தலைமை தான் தம் தலைவிதி என மக்கள் மனத்திருப்தி கொள்வார்களா?

ஈழப்போராட்டம் ஆரம்பமாகும் வரை வீரவசனங்கள், உணர்ச்சிகர, பேச்சுக்கள் என உரு ஏற்றப்பட்ட மக்கள் ஈழப்போராட்டத்தின் ஆரம்பத்தில் கொடுத்த ஆதரவு நிலையில் தான் இப்போதும் இருக்கின்றார்களா?

அழிவுகள், அகதிவாழ்வு, அலைச்சல்கள் என ஓடி ஓடி ஓய்ந்து விட்ட அவர்கள் தம் அவலநிலைக்கு ஏதோ ஒரு வழிமாற்றம்; அது தமது பெருஞ் சுமைகளை ஓரளவாவது தீர்க்க உதவ வேண்டும் என எண்ண மாட்டார்களா?

நிவாரணமும் வேலைவாய்ப்பும் புனர்வாழ்வும் புனரமைப்பும் தான் தம் உடனடி தேவை என எண்ண விளையும் அளவிற்கு அவர்களை தொடரும் கொடுமையான யுத்த சூழலால் தூண்டியது யார் தவறு?

வெறுமனே ஈழம் கிடைத்தால் வாழ்வு அதுவரை அழிவு, சாவு என்பதும், அரசியல் தீர்வு திட்ட நிறைவேற்றமே மாற்று வழி

வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு- தமிழர் விவகாரம் என்ற இந்த அமைச்சின் செயல்பாட்டை நாம் முற்றாக நிராகரிக்கத்தான் வேண்டுமா? இன்றைய யுத்த சூழல் எம்மக்களிற்கு ஏற்படுத்திய தாக்கத்திற்கு ஓரளவான மாற்றத்தை இந்த அமைச்சினால் ஏற்படுத்த முடியாதா?

கேட்டது தனிநாடு கிடைத்தது ஜப்பான் ஜீப் என்ற 77ன் நிலைக்கும் போராடியது ஈழத்திற்கு அடைந்தது அமைச்சர் பதவி என்ற வாதவிளக்கமும் பாரிய வேறுபாடு கொண்டது- ஜப்பான் ஜீப் காலத்தில் மக்கள் அழிவை சந்திக்க வில்லை. அவர்கள் இன்று பட்டுவேட்டி கனா கண்டவர்களாக அகதி முகாம்களில் முடங்கிப் போயுள்ளனர்.

77ல் பெற்ற ஆணையால் 81ல் பெற்றது மாவட்ட சபை. ஆனால் அது அற்றுப் போக இன்றுவரை 13வது சரத் துப்படி மாகாண சபை இருந்தாலும் அரசியல் தலைமை இல்லை. ஆக மாற்று வழியாக அமைச்சு வேலைத்திட்டங்களாவது மக்களை சென்றடைய கூடாதா? மாகாண சபையை அரச அதிகாரிகளின் செயல்பாட்டில் தொடருதல் எந்தளவிற்கு பயனுள்ளதாகும். மத்திய அமைச்சர்களின் மகுடிக்கு ஆடவேண்டிய இவர்களிற்கு தமிழ் அமைச்சரின் தலைமைத்துவம் மாற்று வழியாகாதா?

வடக்கு கிழக்கில் பெருமளவு அதிகாரிகள் தமிழர்களே. மாகாணசபை நிர்வாகமும் தமிழ்

# அமைச்சு பதவி அதற்கு காவல் வேலியாகுமா?

மு. திருச்செல்வத்திற்கு பின்னர் வடக்கு கிழக்கை அத்திவாரமாக கொண்ட தமிழ் கட்சியொன்று அரசில் மட்டுமல்ல மந்திரி சபையிலும் இடம்பெறும் நிகழ்வென ஒரு சாரரும், ஈழவிடுதலைக்கு புறப்பட்ட போராளிக் குழுத் தலைவர்களில் மந்திரி சபையில் முதலாவதாக இடம் பெற்றவர் என ஒரு சாராரும், கிழக்கு புனர் வாழ்வையும் உள்ளடக்கியதாக இல்லை என்ற விசனத்துடன் இன்னொரு சாரரும்; உடனடித்தேவை அரசியல் தீர்வே அன்றி மந்திரி பதவி அல்ல என மற்றவர்களும் பல அபிப்பிராயங்களை கொண்டுள்ள வேளையில் நாம் இவை எல்லாவற்றையுமே கவனத்தில் கொண்டு விடயங்களை ஆராய்வோம்.

கடந்த 17 ஆண்டுகளாக உக்கிரமடைந்த போராட்டமானது பாரிய அழிவுகளையும் உயிர் இழப்புகளையும் அகதி வாழ்க்கையையுமே எம்மக்களுக்கு பலனாக கொடுத்தது. பலமுனைத் தாக்குதல்களை நடாத்திய போராளிக் குழுக்கள் தம்மிடையேயான மோதல் களினால் ஈழ விடுதலை போராட்டத்தை, அதன் முனைப்பை, மக்களின் ஆதரவை பாரிய பின்னடைவிற்கு தள்ளினார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இந்நிலையால் இந்திய (அமைதி) படைகளின் வருகை தனி நாடு என்ற உச்சியில் இருந்து மாகாண சுயாட்சி என்ற நிலைக்கு கீழிறங்கி செல்ல வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டோம்.

இந்திய அரசின் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த சபையில் கடந்த ஒரு தசாப்தமாக அரசியல் நிர்வாகம் என்பது இல்லை. இதனால் மத்திய அரசின் விருப்பங்களை, கட்டளைகளை நிறைவேற்றும் அதிகாரி களை கொண்டதாகவே மாகாண சபை இன்றுவரை செயல்படுகின்றது. இங்கு ஒரு இடைக்கால நிர்வாக மாவது ஏற்பட வேண்டும் என பலதடவைகள் குரல் எழுப்பப்பட்டது. ஆனால் இக்கோரிக்கைகள் தேர்தல் வாக்குறுதிகளாக அறிவிக்கப்பட்டதே தவிர செயல்படு நிலைக்கு வரவில்லை. ஒரு கட்டத்தில் ஜனாதிபதி ஈ.பி.டி.பி. யின் தொடர் அழுத்தங்களால் அறிவித்த திட்டவரைவு ஏற்பாடு த.வி.கூட்டணியின் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

அரசியல் தீர்வின் மூலமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிட்டும். அதுவரை எந்த நிர்வாக அலகின் அரசியல் தலைமைத்துவ செயல்பாடும் அநாவசியமானதென்பதே கூட்டணியின் விளக்கமாகும். மாகாண சபைக்கான இடைக்கால நிர்வாக சபை ஏற்பாட்டை நிராகரித்த கூட்டணி அரசியல் சீர்திருத்த யோசனைகளில் பங்கேற்றல், அவசரகால சட்டத்திற்கு எதிராக வாக்களித்தல் போன்றவற்றிற்குள் தன் செயல்பாட்டை வரையறுத்துக் கொண்டது.

1995ல் கொண்டுவரப்பட்ட நீலன்திருச்செல்வத்தின் ஆலோசனையுடன் உருவாக்கப்பட்டதாக கூறப்படும் தீர்வுத்திட்டம் செயல்படாமல் பல மாற்றங்களுக்குட்படுத்தப்பட்டு பின் பாராளுமன்றம் கலைக்கப்படு முன் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது

அல்லல்படும் மக்களின் அகதிவாழ்விற்கான இடைக்கால தீர்வுதானும் ஏற்பட முயற்சிகள் முன்னெடுக்கப்பட வில்லை. எம்மக்களின் அவலத்தை உலகறியச் செய்வோம், அரசிற்கு எடுத்து ரைப்போம் என்ற வீர பிரதாபங்களுடன் மீண்டும் தேர்தலை சந்தித்து பாராளுமன்றம் சென்ற கூட்டணியினர் ஜனாதிபதி பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக ஏற்பாட்டிற்கு கடும் எதிர்ப்பை தெரிவித்தது எந்த அடிப்படையில்?

எங்களுக்கு எழும் கேள்வி என்ன வென்றால் ஏன் இருக்கின்ற சபைக்கு தேர்தலை வை என இடித்துரைக்க வில்லை? அல்லது இடைக்கால 'நிர்வாக மாவது ஏற்படல் வேண்டாமென்கிறார்கள். இதனால் எம்மக்களுக்கு எதுவுமே கிடைக்காதென ஏன் மறுக்கவேண்டும். பாராளுமன்ற தேர்தல் என்றால் எழுந்து, வலிந்து வாக்கு கேட்பவர்கள் இது பற்றி ஏன் மாற்றுக் கருத்துக்குள்ளவர்களாகின்றனர். யாழ். மாநகர சபை நிர்வாகம் போல பெற்றால் போதும், பிறகேன் நிர்வாகம் என்ற வேண்டா வெறுப்பான போக்கா?

அரசியல் தீர்வு தான் முடிந்த முடிவு. ஆனால் புலிகளும் உள்ளடக்கப்படாது அரசியல் தீர்வு ஏற்படுமா? புலிகள் வருவார்களா? அதுவரை அல்லல்படும் மக்களின் இன்னல் தீர்க்கும் ஏற்பாடுகள் வேண்டாமா? இனி அறிக்கைகள் விட்டும் எதிர்ப்பு தெரிவித்தும் 6 வருடங்களிற்கு பாராளுமன்ற கதிரைகளுக்கு பாரமாக என்பதும் எந்தளவு தூரம் இந்த மக்களைப் பற்றிய பொறுப்போடு கொள்ளப்படும் செயல்பாடு என்பதனையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மறுபக்கம் தமிழ் மக்களுக்கு கிடைக்கக் கூடிய அரசியல் தீர்வினை மூர்க்கத்தனமாக எதிர்க்கும் பேரினவாத போக்கை கடந்த தீர்வுதிட்ட விவாதத்தின் போது நாம் பாராளுமன்றத்தில் பார்த்தோம்.

இது எமக்கு தரும்பாடம் என்ன? எந்த ஒரு தீர்வும் உள்ளிருந்து வரமுடியாது. இது மூன்றாம் தரப்பொன்றால் திணிக்கப்பட வேண்டும். சர்வதேச அழுத்தம் மட்டுமே இதற்கான அடிப்படையாக இருக்க முடியும். அதற்கான ஆரம்ப அறிகுறிகள் அண்மைக் காலங்களில் தென்படுகின்றன. அதே வேளை இது செயல் திட்டமாகும் வரை அல்லல்படும் மக்களின் அன்றாடப் பிரச் சினைகளை தீர்ப்பதற்காக பெற்றுக் கொண்டதாக கூறப்படும் அமைச்சின் செயல்பாட்டை பயனுள்ள தாக்கக் கூடாதா என்ற கேள்வியும் எழத்தான் செய்கின்றது.

அதிகாரிகள் கையில்தான் இவர்களின் நிலை என்ன. ஆளுனரின் கட்டளைப்படியும் மத்திய அரசின் ஆணைப்படியும் தங்கள் நிலைகளை தக்கவைக்கும் போக்குத்தானே வெற்றிடங்கள் நிரப்பப்படாமை, நியமனங்கள் நிரந்தர மாக்கப்படாமை, பட்டதாரிகள் உண்ணா விரதம், தொண்டர் ஆசிரியர் தொடர் போராட்டம், வேலையற்றோர் விரக்தி என தீர்த்து வைக்கப்படாத விடயங்களாகிவிட்டன. மக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்க்கக் கூட திடமான முடிவெடுக்க கூடிய திடமான போக்கு இவர்களிடம் இல்லாமல் போய்விட்டதே. கிடைத்ததை பெறுவோம் என்ற நிலையல்ல எடுத்ததை நடாத்தி நம் மக்களின் நாளாந்த பிரச்சினைக்கு தீர்வுகண்டு கூனிக் குறுகி நிற்கும் அதிகாரிகளை நிமிர்ந்து செயல்பட செய்தல் வேண்டும். அரசியல் தலைமைத்துவம் இல்லாத எந்த நிர்வாகத்தின் நிலையும் இதுவாகவே அமையும். எனவே தான் புதிய அமைச்சும் அதன் அமைச்சரும் புதிய கோணத்தில் நோக்கப்படல் வேண்டும். அது எம் மக்களுக்கு பயனுள்ளதாக மாற்றப்பட வேண்டும்.

**மாயவன்**

**இக் கட்டுரை தொடர்பான கருத்துக்களை வாசகர்களிடமிருந்து ஆதவன் எதிர்பார்க்கின்றது. தரமானவை பிரசுரிக்கப்படும்**

# அரசியல் ரீதியான ஆசிரியர் இடமாற்றங்களுக்கு உயர் நீதின்ற தீர்ப்பு எச்சரிக்கை

இலங்கையின் அண்மைக்கால அரசியல் வரலாற்றில் ஒவ்வொரு தேர்தல்கள் நடைபெற்று முடிந்த பின்னரும் ஆட்சிக்கு வரும் அரசியல் கட்சி ஆதரவாளர்களால் எதிர்க் கட்சியை ஆதரித்த அரசாங்க ஊழியர்கள் பழிவாங்கப்படுவது வாடிக்கையான ஒரு விடயமாகிவிட்டது.

அரசாங்க ஊழியர்கள் அரசியல் அடிப்படையில் பழிவாங்குவதில் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல. இவ்வாறு பழிவாங்கப்படுவோரில் கல்வித் திணைக்களத்தில் கடமை செய்வோரே மிகவும் மோசமாக பழிவாங்கப்படுகின்றனர். என்பது அண்மைக் காலத்தில் பெறப்பட்ட புள்ளி விபரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் என பலவேறு வகையானோர் இப்பழிவாங்கல்களுக்கு உள்ளாகின்றனர். இவர்களுக்கான பழிவாங்கல்கள் பல வழிகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

1.தூர இடங்களுக்கு இடமாற்றம்.

2. சேவை மூப்புக் கவனிக்கப்படாமல் கனிஷ்ட உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு வழங்கி மூப்புள்ள உத்தியோகத்தரை அவருக்கு கீழ் கடமையாற்றுமாறு நிர்ப்பந்தம் செய்தல்.

3. அலுவலகத்திலோ அல்லது பாடசாலையிலோ எவ்வித கடமைப் பொறுப்புக்களும் வழங்கப்படாத நிலையில் மன உழைச்சலுக்கு உத்தியோகத்தரை புறக்கணித்தல்.

4. ஓரங்கட்டுதல், புறக்கணித்தல்.

என பல்வேறு வகையான பழிவாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆட்சிக்கு மாறி மாறி வரும் அரசாங்கங்கள் பழிவாங்கல்களுக்கு உட்படுவோருக்கும் நிவாரணம் வழங்குதலுக்கும், பதவி உயர்வுகளை வழங்குதலுக்கும் என ஆணைக் குழுக்களை நியமிப்பதும் அதன் மூலம் பெருந்தொகைப் பணம் நட்டஈடாக வழங்கப்படுவதும் எவ்வித அடிப்படைத் தகைமையும் இல்லாது அரசியலே தகைமையாகக் கொண்டு பதவியுயர்வு வழங்கப்படுவதும் இலங்கையில் வாடிக்கையாகிப் போய்விட்டது.

இவ்வாறான அரசியல் பழிவாங்கல்களுக்கு அண்மைக்காலத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கல்முனைப் பிரதேசம் பிரசித்தி பெற்ற இடமாக மாறிவருகின்றது. இங்குள்ள கல்வி அலுவலகங்களில் கடமையாற்றும் கல்விப் பணிப்பாளர்கள் அரசியல் வாதிகளின் எடுப்பார் கைப்பிள்ளைகளாக மாறி இந்த பழிவாங்கல்களுக்கு துணை போகின்றனர். இங்குள்ள கல்விப் பணிப்பாளர்களை ஒரு அரசியல் கட்சியின் உள்ளூர் ஏஜன்டுகள் நீதி, நியாயத்தை சிந்திக்க விடாமல் தமது காரியத்தை முடிப்பதிலும், தமது எதிரியை பழிவாங்குவதிலும் முனைப்புக் காட்டுகின்றனர்.

இதில் இன்னுமொரு வேடிக்கையான சம்பவம் என்னவெனில் தமக்கு வழங்கப்படும் இடமாற்றத்தை முறையீடு செய்யச் செல்லும் ஆசிரியர்களிடம் சில கல்விப் பணிப்பாளர்கள் உள்ளூர் அரசியல் முகவர்களின் சிபாரிசுக் கடிதம் கோருவது தான்.

**அரசியல் ரீதியாக ஆசிரியர்கள் பழிவாங்கப்படுவதற்கு வடக்கு-கிழக்கு மாகாண சபை ஒரு முடிவு காண வேண்டும் இல்லையேல் பாதிக்கப்படும் ஆசிரியர்கள் நீதிமன்ற உதவியை நாடுவது தவிர்க்க முடியாததாகும்.**

கல்முனை பிரதேசத்தில் இடம்பெறும் நீதிக்கு முரணான இடமாற்றங்கள் குறித்து வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கோ, வடக்கு-கிழக்கு கல்வி அமைச்சுக்கோ முறையிட்டால் அது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் அரசியல் அழுத்தம் காரணமாக அங்குள்ள அதிகாரிகள் கண்ணை மூடிக் கொண்டிருக்கின்றனர். இக்கட்டுரையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின் கல்முனையில் இடம்பெற்ற மூன்று இடமாற்றங்களை சுட்டிக் காட்டுவதன் மூலம் எந்தளவுக்கு வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகளும் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுனர் செயலக அதிகாரிகளும் முறை கேடான செயல்களுக்கு துணை போகின்றனர் என்பதை வாசகர்கள் அறிந்து கொள்ளலாம். இந்த இடமாற்றங்கள் யாவும் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திலேயே இடம் பெற்றன. இந்த இடமாற்றங்களுக்குப் பின்னணியில் இங்கு கடமையாற்றும் ஒரு பிரதிக் கல்விப் பணிப்பாளரே பொறுப்பாக இருந்துள்ளார். இவர் துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களின் அம்மாறை மாவட்ட கல்வித் துறை இணைப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். ஒரு பதவி நிலை உத்தியோகத்தர் எவ்வாறு இப்பதவியில் நியமிக்க முடியும் என்பது கேள்விக்குட்படுத்த வேண்டிய விடயம்.

இனி கல்முனையில் இடம்பெற்ற அரசியல் ரீதியான இடமாற்றங்களுக்கு வருவோம்,

1. கல்முனை கல்வி வலயத்தில் ஏ.எல்.எம். முக்தர் என்பவர் கடமை நேரத்தில் விபத்து ஒன்றில் சிக்கியமைக்காக காலில் சத்திர சிகிச்சை செய்து ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த இந்த உதவிக் கல்விப் பணிப்பாளருக்கும் வடக்கு-கிழக்குமாகாணக் கல்வியமைச்சினால் கல்முனையில் இருந்து கல்குடா வலயக் கல்வி அலுவலகத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் மாகாண ஆளுனர் உட்பட சகல அதிகாரிகளையும் கெஞ்சினார். அரசியல் அழுத்தம் அக்கோரிக்கையை நிறைவேற்ற முடியாமல் தடுத்து விட்டது.

இந்நிலையில் அந்த உத்தியோகத்தர் அம்பாறை மேல் நீதிமன்றத்தின் வழக்கொன்றைத் தொடர்ந்தார். வாழக்கு இல - HE/Am/Writ/114/2000 இதன் மூலம் அவரது இடமாற்றம் நிறுத்தப்பட்டது.

2. கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் பிரதம இலிகிதராக கடமையாற்றிய எம்.ஏ.றகீம் என்பவர் எவ்வித காரணமுமின்றி அம்பாறை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இடமாற்றப்பட்டு அவரது இடத்திற்கு சேவை மூப்புக் குறைந்த சேவை மூப்பு பட்டியலில் 07ம் இடத்தில் இருக்கும் யூஎல்.எம்.இஸ்மாயில் என்பவர் பிரதம இலிகிதராக நியமிக்கப் பட்டார்.

இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்து தருமாறு வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சை சம்பந்தப் பட்டவர் கோரிய போது அம்பாறை வலயக் கல்வி அலுவலகத்திற்கு வழங்கப்பட்டது. இவ்வலுவலகத்தின் கீழ் நூறு வீத சிங்கள பாடசாலைகளும், சிங்கள மொழி மூலம் ஆசிரியர்களும் வருகின்றனர். இந்த உழியருக்கு ஒரு வசனம் கூட சிங்களம் தெரியாது. மீண்டும் அவர் விண்ணப்பித்தார். எவ்வித நடவடிக்கைகளையும் மாகாணக் கல்வி அமைச்சு எடுக்கவில்லை. மாறாக அவரை கல்வி அமைச்சு நிருவாகத்தில் இருந்து விடுவித்து வேறு எங்காவது அனுப்புமாறு மாகாண பொது நிர்வாக அமைச்சைக் கேட்டள்ளது. இந்த சூழ் நிலையில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் எங்கும் வேலைக்குப் போக முடியாத நிலையில்

தொடர்ச்சி 17ம் பக்கம்.........

மேற்குலக எசமானர்கள் இப்போது ஒவ்வொருவராக எமது நாட்டுக்கு வந்து அறிவுரைகள் கூற ஆரம்பித்துள்ளனர். தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்குமாறு அனைவரும் அறிவுறுத்துகின்றனர். நாம் 1975ம் ஆண்டிலிருந்து கூறுவதையே இன்று வெள்ளைக்கார துரைமாரும் கூறுகின்றனர். தமிழ் மக்களுக்கு சரி சமமான, சுய பரிபாலனம், சுய நிர்னயம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பரவலாக்கல் ஒன்றின் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பது அக் காலம் தொட்டே நாங்கள் கூறிவருகின்றோம். இவ்வாறு கூறியதற்காக எமக்கு எதிராக இனவாதிகள் பயங்கரமான தாக்குதல்களை முடுக்கி விட்டனர். இப்போது அந்தக் கருத்துக்களை வெள்ளைக்காரர்கள் கூறும்போது அனைத்து பணக்கார வர்க்கத் தலைவர்களும் அமைதியாக செவிமடுத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த யுத்தம் மேலும் முன்னெடுத்துச் செல்லப்படுமென்றால் வெளிநாட்டு மூலதனங்களுக்கு பாதகம் ஏற்படும் என்ற பயத்தின் காரணத்தினாலேயே வெளிநாட்டு சக்திகளும் ஏனைய சக்திகளும் இவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

லெனினின் சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே எமது தீர்வு யோசனைகளை அன்று நாம் முன்வைத்தோம். பல்லினங்கள் அசாதாரணமான முறையில் சிக்குண்டு வாழும் பிற்போக்குத் தனத்தினாலான சமுதாயத்தில் சமமான சுயபரிபாலன உரிமைகளுடன் கூடிய, சுயநிர்னய உரிமை கொண்ட சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தீர்வை முன்வைப்பதன் மூலம் பணக்கார ஆட்சியாளரின் இயலாமையை வெளிப்படுத்துவதோடு, அனைத்து இனங்களின் தலைமைத்துவத்தை பாட்டாளி வர்க்கம் முன்னெடுக்க முடியும். கிராமிய விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்க பணக்கார சமுதாயத்தால் முடியாது என ஒப்புவிக்கப்படுவதன் மூலம் கிராமிய விவசாய சமுதாயம் பாட்டாளி வர்க்க தலைமைத்துவத்தின் பின்னால் ஒன்று திரளுவதோடு மேற்கூறியவாறு பொதுவான தீர்வொன்றை முன்னெடுப்பதன் மூலம் வறிய சமுதாயத்தினருக்கு அந்த வகுப்பினரின் தலைமைத்துவத்தையும் பெற முடியும். அதேபோன்று யுத்தத்தினால் துன்பப்படும் பெரும்பான்மை இனத்தினரின் ஜனநாயக சக்திகளை ஒன்று சேர்க்கவும் முடியும்.

இன்றைய உலக வல்லரசுகளின் தலையீடுகளுடன் கூட தேசிய முதலாளித்தவ வர்க்கத்தினருக்கு அனைத்து இனங்களுக்கும்

கலாநிதி

## விக்ரமபாகு கருணாரத்னா

## பார்வையில்



சமமான உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முடியாது. காரணம் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தினர் இனவாத அடிப்படையில் இணைந்திருப்பது இதற்கு காரணமாகும். பொதுமக்களை அணிதிரட்டுவதன் மூலமாகத்தான் சந்திரிகாவின் அரசிற்கு எதிராக தெளிவான வர்கம் வேலை நிறுத்தப் போராட்டங்களுக்கு முகம் கொடுத்து பொதுவாக முதலாளித்துவ வர்க்கத்தினர் தொழிலாளர் போராட்டங்களுக்கு எதிராக இனத்துவ வாதத்தை கிளறிவிடுகின்றனர். தமிழ் மக்களுக்கு உண்மையான சலுகைகள் வழங்கப்படுமாயின் பொதுசன ஐக்கிய முன்னணி அரசுக்கு பாரிய முரன்பாடுகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

அதிகாரப் பகிர்வு சம்பந்தமான விடயங்களை அவசரமாகச் செயற்படுத்த முயன்றால் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் இனத்துவேஷ தாக்குதல்களில் இருந்தும் தப்புவதற்கு ஒரு திட்டத்தை ஏற்படுத்திக் கொள்வது இலகுவானதல்ல. சிஹல உறுமய அமைப்பு ரீதியாக இன்னும் பலம் கொண்டதாக இல்லாமல் இருந்தாலும் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவோடு நாட்டில் பாரிய கலவரங்களை ஏற்படுத்தக் கூடும்.

மக்கள் விடுதலை முன்னணி இன்னும் கூறுவது தமிழ் தேசிய பிரச்சினைக்கான தீர்வுக்கான ஏகாதிபத்தியவாதிகளின் தாக்கங்களின் காரணமாக முன்வைக்கப்படுவதனால் அவை பொதுமக்கள் விரோதச் செயற்பாடுகளே என்பதாகும். இது சிக்கலான ஒரு வாதமாகும். இலங்கைக்குச் சர்வஜன வாக்குரிமை கிடைத்தது ஏகாதிபத்தியத் தாக்கங்களினால் தான். அச்சந்தர்ப்பத்தால் அதற்காக முன்னின்றவர் ஈ.ஏ. குனசிங்கா அவர்கள் மாத்திரம் தான். இராமநாதன் தொடக்கம் பண்டாரநாயக்கா, சேனநாயக்கா போன்றவர்கள் அனைவரும் சர்வசன வாக்குரிமைக்கு எதிராகவே இருந்தனர். ஏகாதிபத்தியவாதிகள் தூர நோக்குடனேயே இவ்வாறான ஒரு முடிவை எடுத்தனர். ரஷ்யாவில் ஏற்பட்டதை அவர்க்ள உணர்ந்து கொண்டிருந்தனர். ஜனநாயக ரீதியிலான, தேசிய உரிமைக் கோரிக்கைக்கு பொதுமக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். அதனைத் தடுப்பதற்காக மேல் மட்டத்திலிருந்து "ஜனநாயக" வடிவமொன்றைக் கொடுக்கும் போது பொதுமக்கள் போராட்டம் இன்னொரு திசையை நோக்கித் தள்ளப்படுகின்றது.

இவ்வாறு மேல் மட்டத்திலிருந்து மறுசீரமைப்புக்கள் அல்லது பாதித் தீர்வுகள் வழங்கப்படும் போது இடது சார்பு அமைப்புக்கள் என்ன செய்வது? அவ்வாறான சலுகைகளுக்கு எதிராக இருக்கும் தீவிர வகுப்புவாதிகளோடு இணைந்து கொண்டு கிளர்ச்சிகளை மேற் கொள்வதா? அதனால் ஏற்படுவது சலுகைகளை எதிர்பார்த்து நீக்கும் பாட்டாளி வர்க்கத்தினர் செயலிழந்து போவார்கள். அதிகாரப் பகிர்வு பற்றி இதனையே கூற வேண்டியுள்ளது. இனங்களுக்கான சுயநிர்ணய உரிமைகள் பற்றி அன்று விளக்கியவர் லெனின். அந்தக் கருத்தையே இன்று பீட்டர் ஹெய்ன் இங்கு வந்து எமக்கு கூறுவாரேயாயின் எந்த விதமான உட்கருத்துக்கள் இருந்தாலும் அது பொது மக்களுக்கு பிரயோசனமானதொன்றல்ல என்று எம்மால் கூற முடியாது.

புலிகள் அமைப்பும், இலங்கைச் சிங்களவர்களுள் வலதுசாரிகள் மட்டுமல்லாது இடது சாரிகளும் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்குவதற்கு எதிராக இருக்கின்றனர் எனக் கூறுகின்றது. "மாக்ஸ்ஸிசவாதிகளாயினும் தமிழ் தேசிய உரிமைகளை வழங்குவதை எதிர்க்கின்றனர் என இவர்கள் சர்வதேசிய ரீதியாக கூறுகின்றனர். எவ்விதத் தீர்வும் முன்வைக்கப் போவது இல்லை பிரிவு மட்டுமே ஒரே முடிவு என்பதை புலிகள் இதன் மூலம் தெளிவுபடுத்துகின்றனர். அவர்கள் சந்திரிகாவும் தரமாட்டார், ரணிலும் தரமாட்டார், விமல் வீரவன்சவும் தரமாட்டார். புதிய இடதுசரிகள் இணங்கினாலும் அவர்களுக்கு பொதுமக்கள் ஆதரவு கிடையாது. அதனால் ஒரே தீர்வு பிரிவது மட்டும் தான்" சர்வதேச சமுகத்தினரிடம் இதைத்தான் அவர்கள் முன்வைக்கின்றனர். "பிரிவதற்கு எமக்கு உதவுங்கள்" இது தான் அவர்களது வேண்டுதலாகும்.




அந்த நீண்ட மண்டபம் முழுவதும் அனற்காற்று வீசுகிறாற் போல உணர்ந்தாள் கமலா. தலை வழமைக்கு மாறாக மிக நொந்து வலித்தது.

மண்டபத்தின் தென், வடக்குப் பக்கச்சுவர்கள் மிக உயரத்தில் இரண்டு ஜன்னல்களைக் கொண்டிருந்தன. கிழக்கு மேற்குப் பக்கங்கள் கண்ணாடிகளால் முற்றாகவே மூடப்பட்டிருந்தன. மேலே வரிசைக்கு இரண்டு இரண்டாகச் சுழல்கின்ற மின்விசிறிகள், அந்த மண்டபத்தில் இடதுபுறத்திலே நான்கு கண்ணாடி அடைப்பு அறைகள், மேற் பார்வையாளர்கள் மூவருக்கும் ஒரு அறை. துணி வெட்டுபவர்கள் நால்வருக்கு இன்னொரு அறை. மூன்றாவது அறை நிர்வாக முகாமையாளருக்கானவை. குளிரூட்டப் பெற்றது. வெளியே இருந்து பார்க்கிறவர்களுக்கு உள்ளே இருப்பவர் தெரியவே மாட்டார். நிர்வாக முகாமையாளர் உள்ளே இருந்து பார்த்தால் வெளியே எல்லாமே பளீரென்று தெரியும். தையல் இயந்திரத் தில் தைத்துக் கொண்டிருக்கின்ற பெண்கள் யாவருமே, தங்களை நிர்வாக முகாமையாளர் பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்ற அச்சம் மனதினை அலைத்திடக் களைப்பை வெளிகாட்டாமல் சுறு சுறுப்பாகத் தைத்துக் கொண்டிருந்தனர். அறை யெங்கும் சுழன்ற வெப்பக் காற்று அவர்களில் வேர்வையைப் பூசிற்று.

நிர்வாக முகாமையாளர் ரஞ்சனுக்கு அறுபது வயதிருக்கும். ஆனால் வயதை மறைக்கின்ற பிரயத்தனம் எடுபட்டது. இறுகப்படிந்தது முடி. மழுமழுவென்ற முகம். முற்றிலும் வெள்ளாடை பளீச்சென்று கண்ணைக் குத்துகின்ற கடும் வர்ண "டை." வாயைத் திறந்து யாரையாவது திட்டினால் அழுக்கில் நாறும் வாய்க்காலை நினைவூட்டுகின்ற சொற்கள்.

சித்தாலெப்பையை நெற்றியில் பூசி, இரண்டு பனடோலை விழுங்கலாமா என நினைத்தாள் கமலா. அதற்கு ரஞ்சனிடம் சொல்லி விட்டுத்தான் வெளியே போகவேண்டும். இந்த மண்டபத்தை அடுத்த தனியான கட்டிடத்தில் நிர்வாக அலுவலகம். உள்ளே வந்ததும் அங்கேயுள்ள அலமாரிகளில் இலக்கவரிசைப்படி எல்லாரும் கைப்பைகளை வைக்க வேண்டும். பிறகு "பஞ்ச்" அட்டையில் நேரத்தை எழுதி கையெழுத்திட்டு விட்டு, அதற்கென உள்ள மேற் பார்வையாளர் இந்திராணி யிடம் கொடுக்க வேண்டும். இந்திராணிக்கு கொச்சிமிழகாய் என்று பட்டப் பெயர். ஒரு நிமிஷம் பிழையாக எழுதிவிட்டால் போதும். கையெழுத்திட்டவளை வார்த்தைகளால் அடித்து விளாசுவாள். காதுகளை நெருப்பாய் எரிக்கும வார்த்தைகள். எவருக்கும் அவள் புன்னகை செய்யமாட்டாள். ஒடிசலான தேகம். கண்களிலே திருப்தியடையாத பசி.

எதிரே நின்ற கமலாவைப் பார்த்தாள் இந்திராணி.

"என்ன?"

"இரண்டு பனடோல் வேணும்..."

"ஏன்?"

கமலாவின் எரிச்சல் முகத்தில் உதிர்ந்தது. நேருக்கு நேராக அவளைப் பார்த்தாள்.



வார்த்தைகளற்ற உறுக்கல். அலட்சியம். மெல்ல எழுகின்ற சினம்.

"எதுக்கு... சொல்லு?"

"பனடோல் எதற்குப் போடுவாங்க?"

எரிச்சல் பொருமிற்று வார்த்தைகளில்.

விசாரமாக மாறிற்று இந்திராணியின் முகம்.

"இரவிலை அதிக நேரம் நித்திரை இல்லாமல் இருந்தாயா?" கூறியவாறு ஆபாசந்தொனிக்க கமலாவைப் பார்த்தாள். பிறகு முதற்சிகிச்சைப் பெட்டியைத் திறந்து இரண்டு பனடோல்களை எடுத்தாள். எறிகிறாற் போல நீட்டினாள்.

"இந்தா..."

வாங்கியவாறு புறப்பட்டாள் கமலா.

கழிவறைப் பக்கமாக இருந்து அப்போது சந்தியாவும், கீதாவும் வந்தனர்.

சத்தமாக அவர்களைக் கூப்பிட்டாள் இந்திராணி. தயக்கத்துடன் அவர்களிருவரும் அங்கு வந்தனர். முகத்திலே அச்சம் முழுமையாகத் தெரிந்தது.

"எங்கு போய் வருகிறீர்கள்..."

குரலில் கோபமும் நையாண்டியும்.

சந்தியா, கீதாவைப் பார்த்தவாறே சொன்னாள்;

"டொய்லட்டுக்கு..."

"டொய்லட்டுக்கா?"

நையாண்டியாகக் கேட்டாள்.

"ம்ம்..."

"இவ்வளவு நேரமுமா?"

"போனதும் வந்திட்டோம்..."

சந்தியா முனகினாள்.

"ரெண்டு பேர் ஒரு தரத்திலை போகத் தேவையில்லை என்று நான் சொன்னது நினைவில்லையா?"

குரூரமான அதட்டல்.

"நாங்க ஒன்றாகப் போகவில்லை"

அழுத்தமாகக் கூறினாள் சந்தியா.

"அப்போ எப்படி ஒன்றாக வந்தீங்க..."

சந்தியாவின் நெஞ்சில், கையிலிருந்த சுருட்டப்பட்ட தினசரிப் பத்திரிகையால் குத்துகிறாற் போல அடித்து கெட்டவார்த்தையால் திட்டினால் இந்திராணி.

சந்தியாவின் கண்கள் கலங்கின.

"எனக்கு எல்லாந்தெரியும். போங்கடி..."

அலட்சியமாகக் கூறியவாறு அடுத்த அறைக்குப் போனாள் இந்திராணி. அது அங்கு வேலை செய்கின்ற யாருக்காவது திடீர் சுகவீனமாகினால் மருந்து அருந்தி விட்டு இளைப்பாறுகின்ற பெரிய அறை. நான்கு கட்டில்கள் போடப்பட்டிருந்தன. புதிய படுக்கை விரிப்பு. தலையணைகள். நிலைக்கண்ணாடி மேசையில் ஆடம் பரப்பொருட்களும் வாசனைத் திரவியங்களும்.

மூலையிலுள்ள கட்டிலில் சற்று நேரத்துக்கு முன்னர் வந்து படுத்திருக்கிறாள் ஜீவராணி. வேலைக்குச் சேர்ந்து நான்குமாதங்கள். அழகான உடல்வாக்குள்ள பதினெட்டு வயதுப் பெண். முழங்காலைத் தொடுகின்ற சுருள் சுருளான கூந்தல். சிவப்பான உதடுகள்.

அவளின் அருகேயுள்ள ஸ்டூலில் போய் உட்கார்ந்து கொண்டாள் இந்திராணி.

முனகியவாறே புரண்டு படுத்தாள் ஜீவராணி. அவளையே பார்த்துக் கொண்டிருந்த இந்திராணி சந்டென்று எழுந்து அவளின் பிருஷ்டத்தில் பளீரென்று அடித்தாள். ஜீவராணி பதறிப்போய் எழுந்தாள். கண்களும் குரலும் கலங்கிட அவளைப் பார்த்தாள்.

"எ...ன்ன....ன?"

தாடுமாறினாள் ஜீவராணி.

அருவருப்பான சிரிப்போடு இந்திராணி.

"நொந்ததா?"

துளிர்த்த கண்ணீரைத் துடைத்தவாறு பின்னாலே தள்ளி ஒருக்களித்து இருந்தாள் ஜீவராணி. விண்விண்ணென்ற வலியினால் அவதியுற்றாள். மீண்டும் எழுந்து வேலைக்குப் போக மனம் உன்னிற்று.

"சொல்லு... நொந்ததா?"

அவளின் தோளைத் தொட, இவள் உடலைக் குறுக்கிவாறு கட்டிலின் ஓரத்திற்குப் போனாள். அருவருப்பாக இருந்தது அவளை நோக்கவே.

"உனக்கு அடிக்க வேணும் போலை இருந்தது. அது தான்..."

சொல்லியவாறு எழுந்தாள்.

"மேடம்..."

வெளியே இருந்து ஸ்ரீ கூப்பிட்டான்.

எரிச்சல் நிறைய, "என்ன வேணும்..?" என்றாள்.

"ஐயா வரட்டுமாம்..."

"என்னையா?"

"ம்ம்"

"எதுக்கு..."

"தெரியேல்லை, ஆனால் உடனே வரட்டுமாம்..."

இந்திராணி இப்போது யாவற்றையும் மறந்து போனவளாக அங்கிருந்து மண்டபப் பக்கமாக நடந்தாள். மனம் பரபரத்தது. அலுத்தது.

தொடரும்...

## அரசியல் ரீதியான....16ம் பக்கத் தொடர்ச்சி

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உதவியை நாடியுள்ளார். அவரது முறைப்பாட்டிலக்கம். HRC/117/2000

3. கல்முனை வலயத்திற்குட்பட்ட சாய்ந்தமருது மல்ஹறுஸ் ஸம்ஸ் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய எம்.ஐ.மு.ஏ. ஜப்பார் (இ.அ.சே.I) என்பவர் வலுக்கட்டாயமாக அதிபர் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டு அவ்விடத்துக்கு இலங்கை அதிகர் IIIம் தரத்தைச் சேர்ந்த ஏ.ஏ.றசூல் என்பவர் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்பட்டார். இவ்விடமாற்றத்துக்கு எதிராக அப்பாடசாலை ஆசிரியர்கள் எதிர்த்துக் குரல் எழுப்பிய போது உள்ளூர் அரசியல் முகவர் ஒருவரின் சிபாரிசுக் கடிதத்தினை பெற்று வருமாறு கல்விப்பணிப்பாளர் கூறியுள்ளார். இத்தனைக்கும் இந்தப் பாடசாலை இலங்கை அதிபர் சேவை - Iம் தர உத்தியோகத்தருக்கான பாடசாலையாகும்.

இம் மூன்று உதாரணங்களில் இருந்தும் அரசியல் எந்தளவிற்கு கல்முனை கல்வி வலயத்தில் ஊடுருவி கல்வித்துறையை நாசமாக்கு கின்றது என்பதை உணர்ந்து கொள்ளலாம். இது போன்று பல இடமாற்றங்கள் நியாயமற்ற முறையில் நடந்துள்ளது. யார் இவர்களுக்கு நியாயம் வழங்குவார்.

இது இவ்வாறிருக்கும் போது கல்முனைக் கல்வி வலயத்தில் உள்ள நிந்தவூர் அல் - மதீனா வித்தியாலயத்தில் கடமையாற்றிய ஆசிரியர் ஒருவர் பாலியல் ரீதியான குற்றச்சாட்டுக்குள்ளாகி கையும், மெய்யுமாக பிடிக்கப்பட்டதன் பேரில் ஒழுக்காற்று நடவடிக்கையின் பேரில் நிந்தவூர் அஸ்-ஸஹீதா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டார். ஆனால் இந்த ஆசிரியர் கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் அரசியல்வாதிகளின் தூண்டுதலினால் மீண்டும் நிந்தவூர் அல்-மதீனா வித்தியாலயத்திற்கு கடந்த வாரம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவருக்கான சிபாரிசை கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரே செய்துள்ளார்.

இவ்வாறு அரசியல் ரீதியாக ஆசிரியர்கள் பழிவாங்கப்படுவதற்கு வடக்கு-கிழக்கு மாகாண சபை ஒரு முடிவு காண வேண்டும் இல்லையேல் பாதிக்கப்படும் ஆசிரியர்கள் நீதிமன்ற உதவியை நாடுவது தவிர்க்க முடியாததாகும்.

தற்போது அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரதிக் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரைக் கொண்டு இம்முறை பழிவாங்கல் நாடகத்தை அரங்கேற்ற உள்ளூர் அரசியல் முகவர்கள் திட்மிடுகின்றதாக தெரிய வருகின்றது. இவர்களுக்கு கடந்த அக்டோபர் மாதம் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு படிப்பினையாக அமையட்டும். அது அவர்களுக்கு எச்சரிக்கையாகவும் இருக்கலாம். இத்தீர்ப்பினை நீதியரசர்களான மார்க் பெர்னாண்டோ, எஸ்.டபிள்யூ. வடுகொடப்பிட்டிய, அமீர் இஸ்மாயில் ஆகியோர் வழங்கியுள்ளனர். இது பற்றிய செய்தி 04.10.2000ம் திகதி "லங்காதீப" பத்திரிகையில் வெளியாகியுள்ளது. குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த 20 ஆசிரியர்கள் இடமாற்ற விதிமுறைகளுக்கு மாற்றமாக அரசியல் காரணங்களுக்கா இடமாற்றம் செய்யப்பட்டதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்தனர். இவ்வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் இடமாற்றங்களை இரத்துச் செய்ததுடன் 20 ஆசிரியர்களுக்கும் தலா ஒருவருக்கு 60,000 ரூபா வீதம் நஷ்ட ஈடு வழங்குமாறு கல்வியமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளது.

இச்சரித்திர பூர்வ தீர்ப்பானது ஆசிரியர்கள் அரசியல் காரணங் களுக்காகவும், இடமாற்ற விதிமுறைகளுக்கு மாற்றாகவும் இடமாற்றத் திற்கு உட்படுத்தப்பட்டு பழிவாங்கப்படுதலை தடுத்து நிறுத்தும் என எதிர்பார்க்கலாம். விசேடமாக இத்தீர்ப்பானது வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சுக்கும், கல்முனைப் பிரதேசத்தில் உள்ள வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் எச்சரிக்கையாகவும் அதேநேரம் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பாகவும் அமைகின்றது.

விவேகி.

# சிந்திக்க முல்லாவின் கதைகள்



முல்லா இந்தக் கேள்விக்கும் தயங்காமல் பதில் சொன்னார். என் கழுதையின் உடல் முழுவதும் எத்தனை ரோமங்கள் உள்ளனவோ அத்தனை நட்சத்திரங்கள் ஆகாயத்திலும் உள்ளன. வேண்டுமானால் எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றார்.

இரண்டாவது அறிஞரும் பேச்சு மூச்சற்றவரைப் போல உட்கார்ந்து விட்டார்.

மூன்றாம் அறிஞர் எழுந்தார். அவர் முல்லாவைப் பார்த்து, மக்கள் கடைப்பிடிப்பதற்காக இவ்வுலகச் சான்றோர் வகுத்த நெறிகள் எத்தனை? என்று கேட்டார்.

இதைக் கேட்ட முல்லா, இது மிகவும் சுலபமான கேள்வி. பேரறிஞர்களே! உங்கள் மூவருடைய தாடியிலும் உள்ள ரோமங்கள் எத்தனையோ, அத்தனை நெறிகளை உலகச் சான்றோர் மக்கள் நலனுக்காக வகுத்துள்ளனர்.

இதில் எதேனும் சந்தேகம் உங்களுக்கு ஏற்படுமானால் சொல்லுங்கள். உங்கள் மூவருடைய தாடியிலும் உள்ள ரோமங்களைப் பிடுங்கி எண்ணி நான் சொன்ன எண்ணிக்கை சரி என்பதை நிரூபிக்கிறேன் என்று பதில் சொன்னார் முல்லா.

பேரறிஞர்கள் மூவரும் தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டு தங்களுடைய விருதுகளையும், பரிசுகளையும் முல்லாவிடம் ஒப்படைத்தனர். மேலும் முல்லாவே உலகில் சிறந்த பேரறிஞர் என்று அறிவித்தனர்.

## வெட்கம்

நள்ளிரவு வீட்டிற்குள் திருடன் நுழைவதைப் பார்த்து விட்டார் முல்லா, அங்கிருந்த பீரோவின் பின்னால் ஒளிந்து கொண்டார்.

திருடன் வீடெங்கும் சல்லடை போட்டுச் சலித்துவிட்டான். அவனுக்கு ஒரு பொருளும் கிடைக்கவில்லை.

பீரோவின் பின்னால் பதுங்கியிருக்கும் முல்லாவைப் பார்த்துவிட்டான் திருடன். அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்? என்று கேட்டான் திருடன்.

அதற்கு முல்லா "என் வீட்டிலிருந்து நீ திருடிக் கொண்டு போக என்னிடம் ஒரு பொருளும் இல்லையே என வெட்கப்பட்டு, உன் முகத்தைப் பார்க்காமல் இங்கு ஒளிந்து கொண்டேன்" என்றார்.

## ஒரு மேதையின் அறிமுகம்

வெளியூர் பிரயாணத்தில் ஈடுபட்டிருந்தார் முல்லா. இருட்டிவிட்டது. சத்திரத்தில் தங்கி இரவைக் கழிக்க நினைத்தார். சத்திரம் எங்கிருக்கிறது என்று விசாரித்துக் கொண்டு சென்றார்.

சத்திரம் மிகப் பெரியது, வசதிகள் நிரம்பியது. அதில் பல செல்வந்தர்கள் தங்கியிருந்தார்கள். அவர்களைக் கவனிப்பதில் சத்திரக்காரன் ஈடுபட்டிருந்தான். முல்லா அங்கு வந்திருப்பதை அவன் இலட்சியம் செய்யவில்லை.

முல்லாவின் கோரிக்கையை அலட்சியமாக ஏற்று அவரை சத்திரத் திண்ணையில் தங்க அனுமதித்தான். பெயரளவில் உணவு கொடுத்தான். குடிப்பதற்கு நீர் கூடக் கொடுக்கவில்லை.

நடு இரவில் முல்லாவுக்குத் தாகம் எடுத்தது. முல்லா கதவைத் தட்டினார். குரல் கொடுத்தார். குடிக்கத் தண்ணீர் வேண்டும் என முறையிட்டார். சத்திரக்காரன் விழித்துக் கொண்டுதான் இருந்தான். அவன் முல்லாவின் குரலை அலட்சியப்படுத்தினான். மதிக்கவில்லை. இரக்கப்பட்டு ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் கொடுக்கவில்லை.

சத்திரக்காரனின் வாழ்ந்தாருக்கு மாரடிக்கும் குணத்தைக் கண்டு வேதனைப்பட்டார். எப்படியாவது இவனிடம் தண்ணீர் வாங்கியே தீருவது என உறுதி கொண்டார்.

திடீரெனப் பெருங்குரலில் "ஐயோ நெருப்பு, நெருப்பு ஓடி வாருங்கள்" எனப் பலமாகக் கத்தினார்.

சத்திரக்காரன் மட்டுமல்ல அங்கு தங்கி இருந்தவர்களும், பாத்திரங்களில் தண்ணீரோடு வெளியில் ஓடிவந்தனர். முல்லா சத்திரக்காரனிடம் இருந்த நீரை வாங்கிப் பருகினார்.

எல்லோரும் எங்கே நெருப்பு என்று முல்லாவிடம் கேட்டனர்.

என் தொண்டையில் தான் வறட்சி, நெருப்புப் பற்றியது இப்பொழுது அது அணைந்துவிட்டது. தாகம் தீர்ந்து விட்டது நீங்கள் போகலாம் என்றார் முல்லா.

முல்லாவிடம் தான் நடந்துகொண்ட அலட்சியத்தையும், அவர் எல்லோர் முன்னும் தன்னை அவமானப்படுத்தியதையும் உணர்ந்த சத்திரக்காரன் வருத்தமுற்றான். இவர் ஒரு மேதைதான் என்பதை உணர்ந்தான். முல்லாவை மரியாதையோடு உள்ளே அழைத் சென்று வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தான் சத்திரக்காரன்.

---

# பாரதியின் வரலாறு

### இலக்கிய சீடர்கள்

பாரதி புதுவையிலிருந்த போது அவரைத் தமது இலக்கிய குருவாகப் போற்றிய மூன்று இளம் எழுத்தாளர்கள் அங்கே இருந்தார்கள். வ. ராமஸ்வாமி (வ.ரா.), கனக. சுப்புரத்தினம் (பாரதிதாசன்), பரலி, சு. நெல்லையப்பபிள்ளை ஆகிய இம் மூவரும் பாரதி இருந்த போதும் சரி. அவர் இறந்த பின்னும் சரி அவரது இலக்கிய மேதையை உலகுக்கு அறிமுகப்படுத்த உழைத்த தொண்டர்களில் முக்கியமானவர்கள். அரசியல் காரணங்களால் பாரதியின் நூல்களை வெளியிட எல்லாரும் அஞ்சிய காலத்தில், நெல்லையப்பபிள்ளைதான் துணிந்து பாரதியின் பொறுக்கியெடுத்த சில பாடல்களை நான்கு தனி நூல்களாக வெளியிட்டார். பாரதி இறந்த பிறகு அவர் ஒரு மகாகவி அல்ல சாதாரண கவிதான் என்று சிலர் மதிப்பீடு செய்தார்கள். இதை மறுத்து, பாரதியாரின் கவிதா மேதையை விளக்கி அவர் மகாகவிதான் என்று நிலைநாட்டினார் வ. ரா. பாரதிதாசன் பாரதியாரால் தூண்டப்பட்டு, தமிழ் நாட்டின் மிகச் சிறந்த கவிஞர்களில் ஒருவராக மலர்ந்தார்.



### இலக்கியத்தில் புது முயற்சிகள்

தமிழ்ப் பத்திரிகைகளும் இன்றி, தமது நூல்களை வெளியிடவும் வழியின்றியிருந்த பாரதி, 1912 முதல், சென்னையிலிருந்த ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு, ஆசிரியருக்குக் கடிதங்கள் எழுதலானார். இவற்றை அன்னி பெஸண்ட் அம்மையாரின் நியூ இந்தியா நாளிதழ் "காமன்வீல்" வாரப் பதிப்பு, கஸ்தூரிரங்க ஐயங்காரின் "ஹிந்து" நாளிதழ் முதலியவை விரும்பி வெளியிட்டன.

அரசியல் பற்றியும், தத்துவ விஷயங்கள் பற்றியும் பாரதி எழுதிய இந்த ஆங்கிலக் கடிதங்கள் "ஆசிரியருக்குக் கடிதங்கள்" என்ற வகையில் எழுதப்பட்டிருந்தாலும் சிறந்த கட்டுரைகளாக அமைந்துள்ளன. இவையும், பாரதியின் ஆங்கிலக் கவிதைகளும் அக்னி அண்டு அதர் பொயம்ஸ் "எஸ்ஸேஸ்" என்ற இரு நூல்களாக வெளியாகியுள்ளன.

நல்ல வேளையாக பாரதியிடம் பேரன்பு கொண்டவர்களில் ஒருவரான ஏ. ரங்கஸ்வாமி ஐயங்கார், 1915ல் சுதேசமித்திரன் அதிபரும், அசிரியருமானார். புதுவையில் பாரதி வறுமையில் வாடுவதை உணர்ந்த அவர், பாரதியை சுதேசமித்திரனுக்குக் கதை, கட்டுரை எழுதச் சொன்னார். அது மட்டுமல்ல பாரதி எழுதினாலும், எழுதாவிட்டாலும் மாதம் 30 ரூபாய் அவருடைய மனைவிக்கு மணியார்டர் மூலம் அனுப்பப்படும் என்றும் பெருந்தன்மையுடன் தெரிவித்தார் ரங்கஸ்வாமி ஐயங்கார்.

பாரதி, சுதேசமித்திரனுக்கு எழுதத் தொடங்கிய முதல் கட்டுரைகள் தராசு என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. அன்றாட நிகழ்ச்சிகளைக் கொண்டு நம்மிடம் அன்றாடம் பழகும் மனிதர்களைச் சித்தரித்து, உயிருள்ள உரை நடைச் சொற் சித்திரங்கள் வரைவதிலும் தமக்குத் திறமை இருப்பதைத் தராசு மூலம் பாரதி உணர்ந்தார்.

தராசைத் தொடர்ந்து "இப் பள்ளிக்கூடம்" "கடற் பாலத்தில்..." முதலிய நடைச் சித்திரங்கள் தோன்றின. இவைகளில் மனித வர்ணனை, அவர்களுடைய சிந்தனைப் போக்கு, பேச்சு நடை



பாரதி, தனது மனைவி, இரு புதல்விகள் மற்றும் நண்பர்களுடன்

அவர்களுடைய சிறுமை, பெருமைகள் எல்லாவற்றையும் நேரில் கண்டு கேட்பது போல பாரதி சுவைபட எடுத்துரைத் தார். தம்முடைய நண்பர்களுக்கெல்லாம் செல்லப் பெயர்கள் கொடுத்து அவர்களுக்குத் தமிழ் இலக்கியத்தில் இறவாப் புகழ் தந்தார். எப்போதும் வேதாந்தம் பேசும் ஒரு நண்பர் பிரம்மராய ஐயர் ஆனார். நாலு வீடுகளுக்கப்பால் கேட்கும் குரல் கொண்ட அவரது பேச்சு இடிப் பள்ளிக்கூடம் ஆயிற்று. வெள்ளை எலிகள் வளர்க்கும் ஒரு நண்பர் எலிக் குஞ்சு செட்டியார் ஆனார். வாடகைப் பாக்கி கேட்க வந்து பாரதியிடம் பக்தியுடன் நெருங்கி முடிவில் வாடகைப் பாக்கிை வற்புறுத்தாமல் செல்லும் வீட்டுக்காரர் விளக்கெண்ணெய்ச் செட்டியார் ஆனார்.

பரம சாதுவான ஒரு கோயில் அர்ச்சகர் கொங்கணப்பட்டர் ஆனார். சமூக சீர்திருத்தங்களையும், மாதர் விடுதலையையும் வற்புறுத்தும் வேதவல்லி அம்மாள் அதே பெயரில் வந்து ஆண்களைச் சாடினார். புதுவையில் முன்பு இருந்த நீண்ட கடல் பாலத்தில் நண்பர்கள் கூடிப் பேசும் ஊர் வம்பெல்லாம் பாரதிக்குக் கட்டுரை விஷயங்களாயின, தாம் கவி மட்டுமல்ல தமிழ் உரைநடையிலும் புதுமை புகுத்த வந்தவர் என்ற பெருமையைப் பாரதி உணர்ந்தார்.

தொடரும்...

# நூல் அறிமுகமும் விமர்சனமும்



ஆற்றுகை
நாடக அரங்கியலுக்கான
இதழ் - 08
நாடகப்பயிலகம்
திருமறைக்கலாமன்றம்,
288 பிரதானவீதி,
யாழ்பாணம்
**விலை ரூபா 35.00**

"ஆற்றுகை" நாடக அரங்கியலை முன்னிறுத்தி வெளிவருகின்ற இதழ் எட்டாவது இதழ் "நாட்டுக்கூத்து சிறப்பிதழாக" வெளியாகியுள்ளது.

மகாபாரதத்துக்கான தெருக்கூத்து அரங்கு என்ற வெங்கட் சுவாமி நாதனின் ஆங்கிலக் கட்டுரை மொழி பெயர்ப்பு மிகப் பயனுள்ள தகவல் களைத் தருகின்றது. சிந்தனையைத் தூண்டுகிறது. உதயனின் மன்னார் மாதோட்டக் கூத்து பயில்முறை (ச. தில்லை நடேசனின் வட்டுக் கோட்டை கூத்து மரபும் அதன் தோற்றுவாய்க் கான சமூகப்பின் புலமும்.)

"ஒரு திகிலூட்டும் அரங்கியல் அனுபவம்" என்ற மொழியெர்ப்புக் கட்டுரை "வேள்வித்தீ" அரங்க விமர்சனம் ஆகியவை இத்துறை சார்ந்தோருக்கு மட்டுமன்றி ஆர்வமுள்ள வாசகர்களுக்கும் ஆர்வத்தோடு படிக்க ஏற்ற ஆக்கங்கள்.

"நொண்டி நாடகம்" என்ற ஆய்வுக் கட்டுரையினை மிகத்தெளிவாகவும் நிறைந்த தகவல் சேகரிப்போரும் எழுதியுள்ளார். சுருக்கமாயிருப்பினும் எடுத்துக் கொண்ட விஷயம் முழுமையாகச் சொல்லப்பட்டுள்ளது. அரங்கியல சார்ந்த செய்திகள் பேட்டி தகவல்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்ளத்தில் இருந்து என்ற தலையங்கத்தில் வருகின்ற முன்னுரை இன்றைய அரசங்கியலின் சத்தியக்குர லாக இருக்கின்றது.

எமது பாரம்பரியங்களையும் மர புகளையும் தேடுதல் மீட்டெடுத்தல் என்ற சிந்தனையையும் முயற்சிகளும் ஏறத்தாழ அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக முனைப்புப் பெற்று வந்துள்ளன. இன்று இங்கு மட்டு மன்றி புலம் பெயர் நாடுகளிலும் எம்மவர்கள் இம் முயற்சியின் கனதியை நன்குணர்ந்துள்ளார்கள். காரணம் எமது பிரச்சினைகளும் எம்மவர் குடியிருப்புகளம் உலகம் முழுவதிலும் பரந்து உலகப் பண்பாட்டு எல்லைகளுக்குள் நின்று ஈடு கொடுக்கவேண்டிய தேவையை ஏற்படுத்தும் போது ஒரு தேசிய இனத் துக்குரிய தனித்தவ அடையாளங்களை நிரூபிக்க வேண்டிய அவசியம் ஏற்ப டுகின்றது. ஆனால் இதுவரை கால தேடல்களிலும் கருத்துக்களிலும் பெரும்பாலானவை மீள் விசார ணைக்குட்பட்டு நிற்கும் வேளையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப் படலுக்கான தூண்டிகளும் தொடங் கல்களும் மிக அரிதாகவே காணப் படுதல் வேதனைக்குரியதாகும்.

இந்த வகையில் எமது பாரம்பரிய நாட்டுக்கூத்து கலை தொடர்பான முயற்சிகளை நோக்கும் போது இவை இன்னமும் தேவைப்படும் அடித்தளத்தில் இருந்து தொடங்கப் பெறும் முயற்சிகளை கொண்டி ருக்கவில்லைபோல் தெரிகின்றது. பேரா. வித்தியானந்தன் இன்றைய செயற்பாட்டாளர்களும் நின்று கொண்டிருக்கின்றனர். கூத்துக் தொடர்பான ஆய்வுகளும் முடிவு களும், இன்னமும் முற்றுப் பெறவில்லை. அதன் அரோக்கியமான வளர்ச்சிக்குரிய போக்குகள் மிக மிக அரிதலாகவே காணப்படுகின்றது. இதுவரை கால செயற்பாடுகளும், தேடல்களும் முற்றுப் பெறாமலும், மீள் விசாரணைக்குட்பட்டும் நிற்பதற்கான காரணம் இதில் ஈடுபட்டோர் பலர் பட்டங்களுக்காகவே ஆய்வுகளை மேற்கொண்டமையையும். இதற்கூடாக பிரபல்யம் தேடுவதைநோக்காக கொண்டும், முற்சார்புச் சிந்தனை களுடன் செயல் களத்தில் இறங்கி செயற்பட்டமையும் எனலாம் இவை கூத்தின் வளர்ச்சி எல்லைகளை குறுக்கி விட்டதுடன் மாற்றுச் சிந்தனைகளுக்கு வழிவிடாத முடிவுகளை வெளிப் படுத்திய புதிய தொடங்கல்களுக்கான சரியான ஊற்றை கண்டறிய முடியாமலும் செய்து விட்டன.

இன்றைய நவீன யுகத்தின் வேகம் மிக்க நீரோட்டம் மரபுகளை அழித்துக் கொண்டு போகும் அபாயம் காத்திருக்க , மரபுகள் கேள்விக்குற ியாக நிற்பது, அடிப்படைகளையே இழந்து வெற்று வடிவங்களுக்குள் விவாதம் செய்கின்ற போலித்தனங் களையே மிகஞ்ச வைத்துவிடுமோ என்ற ஐயத்தை தோற்றுவித்துள்ளது. எனவே பல்கலைக்கழக மட்டம் முதல் பாரம்பரிய கூத்து வளர்ச்சியில் ஈடுபடும் அமைப்புகள், தனி நபர்கள் வரை இக்கூத்துக் கலையின் தேடல், பேணுகை, புத்தாக்கம் ஆய்வுகள் என்று உளசுத்தியோடு ஈடுபடுதல் இன்றைய காலத்தின் மிக அவசரமான தேவையும் கடமையும் ஆகும். அற றுகை என்ற இந்தப்பயனான இதழ் தொடர்ந்து வெளிவரவேண்டியது அவசியமாகும்.

**செ.யோ**



**நம்பிக்கையோடு**
**நிம்மதியைநாடும்**
**யாழ்ப்பாணம்**
கரு : எஸ். தில்லைநடராஜா
உரு : பி. மாணிக்கவாசகம்
பூபாலசிங்கம் புத்தகசாலை
செட்டியார் தெரு,
கொழும்பு.
**விலை ரூபா 20.00**

போர்க்கால நிலைமைகளைப் பற்றிய நேரிற் கண்டவர்களது கருத்துத் தொகுப்புகள் சர்வதேச ரீதியாகவே விலைமதிப்பற்ற பொக்கிஷங்களாக தனித்துவமான ஆவணங்களாகக் கருதப்பட்டு வருகின்றன. இவை காலம் போகப் போக மிக மதிப்பு வாய்ந்த வரலாற்றுப் பதிவுகளாக ஆகிவிடும். வரலாற்றுச்சான்றாதாரமாக ஆகும்.

1994ம் ஆண்டு கால யாழ்ப்பாண வாழ்வை வெகு நுணுக்கமாகவும் உண்மையோடும் எடுத்துச்சொல்லுகின்ற நூல் இது. இதைப் படிக்கிறபோது இனவாதம் மிக்க ஊடகங்கள் தமிழ் மக்களை எவ்விதமெல்லாம் கொச்சைப்படுத்தி வருகின்றன எனத் துலக்கமாக அறியலாம். அது மட்டுமன்றி சமாதானம் நல்வாழ்வு என்பன வற்றுக்காக இம்மக்கள் மேற்கொண்ட எத்தனங்கள் செயற்பாடுகளென்பனவற்றை இந்நூல் தெரியப்படுத்துகிறது. இந்த வாழ்வு இடிபாடுகளுக்குள்ளும் புதை குழிகளுக்குள்ளும் எவ்விதம் தள்ளப்பட்டன என்பதையும் வாசித்து முடிகிறபோது ஆழ உணரமுடிகிறது.

கொழும்பைச் சேர்ந்த சர்வதேச ரோட்டரிக் கழகப் பிரதிநிதிகள், சிரேஷ்ட அரசாங்க அதிகாரியும் எழுத்தாளருமான எஸ். தில்லை நடராஜா ஆகியோர், 1994ல் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வராத யாழ்ப்பாணத்துக்குச் சென்ற னர். விடுதலைப் புலிகளின் பல்தரப் பட்ட நிர்வாக, பண்பாட்டு, பொருளாதார நடைமுறைகளை நேருக்கு நேராகக் கண்டனர். மக்களோடும் நிர்வாகிகளோடும் பேசினர். இதுபற்றிய விபரங்களை தில்லைநடராஜாவிடமிருந்து விபர மாகக் கேட்டறிந்து எழுதினார் பத்திரிகையாளரான சிவப்பிரகாசம்.

இப்போது இந்தப் புத்தகத்தைப் படிக்கின்ற எவருக்கும் மனதிலே நிறையக் கேள்விகளும் ஏக்கங்களும் உருவாகும். தமிழ் மக்கள் காலத் திற்குக் காலம் அடைகின்ற ஏமாற்றம், இழப்புகளுக்கான கார ணத்தின் வேரைக் கண்டு கொள்ள இந்த நூலின் விவரணங்கள் அடியெடுத்துக் கொடுக்கும்.

1994ம் களின் யாழ்பாணத்தைக் காண்பிக்கும் நூலிற்கு புகைப்படங்கள் மிகுந்த வலுவைக் கொடுக்கின்றன. காலம் செல்லச் செல்ல இந்த நூல் வேண்டப்படுகின்ற ஆவணமாகும்.



**மல்லிகை**
அவுஸ்திரேலியச் சிறப்புமலர்
201-1/ 1 ஸ்ரீகதிரேசன் தெரு
கொழும்பு - 13.
விலை ரூபா : 75.00

மல்லிகை ஆண்டுமலர் வெளியாகி வாசகர்கள் பாராட்டுத் தொடர்கையில் இன்னும் பிர மிப்பை உண்டாக்கும் விதத்தில் அச்சுக்கலை நேர்த்தியுடன் அவுஸ்திரேலியச் சிறப்பு மலரை வெளியிட்டுள்ளார் டொமினிக் ஜீவா.

புலம்பெயர்ந்த வாழ்வில், இலக்கிய செயற்பாடும் முக்கியமானது, இலங்கை எல்லைக்குள் இருந்த இலக்கியத்தளம் புலம் பெயர்ந்த இடங்களை நோக்கி விரிவுப டுவதும் காலத்தின் தேவையே, இலங்கைத் தளத்திலிருந்த இத்தகைய புலம்பெயர் இலக்கியச் சிறப்புமலரை வெளியிடும் முன்னோடி இதழ் மல்லிகை யாகவே இருக்கும்.

அவுஸ்திரேலியாவில் வாழும் சிறந்தபடைப்பாளிகளும் புதியவர்களும், மலரில் பங்கெடுத்திருக்கிறார்கள். த.கலாமணி, மாத்தளை சோமு, அருண் விஜயராணி, அம்பி, மாவை நித்தியானந்தன், வே.இ. பாக்கியநாதன், தி.ஞானசேகரம், பாலம் லஷ்மணன், பேராசிரியர் பூலோக சிங்கம், முருகபூபதி என்று இலங்கையில் நன்கு அறிமுகமான ஆக்ககாரர் களுடன் புதிய அறிமுகங்களும் ஒரு சேர எம்மோடு பேசுகின்றனர். பெரிய, தரமான அவுஸ்திரேலிய இலக்கிய மகாநாடாகவே மல்லிகை மலரை உணர முடிகின்றது.

இந்த மலர் உருவாக்கத்திற்கு களைப்பின்றி உழைத்து உதவிய அருண்விஜயராணி, லெ.முருகபூபதி, மற்றையோருக்கு ஆசிரியர் மட்டுமல்ல தமிழ்ப்படைப்பிலக்கிய உலகே நன்றிசொல்லும்.

அவுஸ்திரேலியாவின் வாழ்வு, கலை இலக்கியம், கேள்விகள் என்பன வற்றை உள்ளடக்கியுள்ள இம்மலரில் குறையொன்றைக் காணமுடிகின்றது. அவுஸ்திரேலிய மலரிலே, மாத இதழில் வெளிவரத்தக்க இலங்கைப்படைப்புகள் வந்திருப்பது, அவை தரமானவையெனினும் - நெருடலாக உள்ளது. இவற்றை ஆசிரியர் தவிர்த்து அவுஸ்திரேலியாவில் தமிழர் வாழ்வைக் கூறும் படங்களைச் சேர்த்திருக்கலாம்.

லண்டன், பிரான்ஸ் ஆகிய மேற்கு நாடுகளுக்குப் பயணமாகும் டொமினிக் ஜீவா, மேற்கூறிய நாடுகளின் இலக்கியமலர்களை வெளியிட, அவுஸ்திரேலிய மலர் உந்து சக்தியாகும் என்பதில் ஐயமில்லை.

## வருகை

அவுஸ்திரேலியப் பயணக் கதை
தி.ஞானசேகரன்
ஞானம் பதிப்பகம்
19ஃ, பேராதனை விதி, கண்டி.
விலை ரூபா. 100.00

நீ இப்பொழுது இறங்கும் ஆறு
சேரன் கவிதைகள் ஒரு நூறு.
காலச்சுவடு பதிப்பகம்.
669, கே.பி.சாலை
நாகர் கோவில் 629001
விலை ரூபா. 90.00
(இந்திய விலை)


அன்பான சிறுவர்களே
செ.யோகநாதன்
குழந்தை இலக்கியம்
எம்.டி. குணசேன
217, ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு — 11
விலை ரூபா. 80.00

சிந்தியா
முத்திங்கள் இதழ்
சிந்தியா கலை இலக்கிய
வட்டம் .
22ஃ17, முதலாம் ஒழுங்கை
கடுமையான்குளம் வீதி,
புத்தளம்.

## 1901

# சிலுவைப் போர்!

மகாபாரதக் கதை இந்திய மக்களிடையே பிரபலமாக இருந்த காலம். அதாவது – சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு... ஜெருசலேம் நகரில் பல புதிய மதங்கள் வேர்விட



ஆரம்பித்தன. இயேசு அவதரித்தார். அப்போது மத்திய தரைக்கடல் நாடுகளில் பெரும் பகுதி ரோமானிய சாம்ராஜ்யத்தின் கீழ் இருந்தது. மன்னர்தான் கடவுள் – கடவுள்தான் மன்னர் என்ற கருத்தை மக்களின் மீது அரசு தீவிரத்தோடு திணித்திருந்த காலம். இயேசு வளர வளர கிறிஸ்தவ மதமும் வளர ஆரம்பித்தது. அவரை தேவதூதன் "தேவகுமாரன்" என்று மக்கள் கொண்டாட ஆரம்பித்தனர். இவரை வளரவிடுவது தங்களுக்கு ஆபத்து என்று ரோமானிய அரசு அஞ்சியது. அதனால் அரசுக்கு எதிராகப் புரட்சியைத் தூண்டுகிறார் என்று குற்றம் சுமத்தப்பட்டு அவர் சிலுவையில் அறையப்பட்டார்.

அப்போது இயேசுவுக்கு வயது 33.

### சிங்கங்களுக்கு இரையானார்கள்

தொடர்ந்து கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முயன்ற பால், பீட்டர் என்ற இயேசுவின் இரண்டு சீடர்களும் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முயன்ற பல பாதிரியார்களை ஆட்சியாளர்கள் கொலோஸிம் என்ற பிரமாண்டமான திறந்தவெளி மைதானத்தில் சிங்கங்களுக்கு உணவாகத் தள்ளினார்கள்.

### சிலுவைப் போர்

பதினோராம் நூற்றாண்டு. அப்போது இஸ்லாமிய ஆட்சியாளர்களின் ஆதிக்கத்துக்கு ஜேருசலேம் கைமாறியிருந்தது. தங்களின் புனித நகரை மீட்க அப்போது போப்பாண்டவராக இருந்த இரண்டாம் அர்பன், "போர் முரசு" கொட்டினார்.

சிலுவைக் குறியை ஆடையில் தரித்துக்கொண்டு ஜெருசலேம் நோக்கி ஐரோப்பிய மக்கள் படையெடுத்துச் சென்றார்கள். புனித நகரம் ரத்தநகரமாக மாறியது.

அடுத்து வந்த நூறு ஆண்டுகள் அதுபோன்ற ஐந்து புனிதப் போர்களைச் சந்தித்தன கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்களின் ஆளுமையின்கீழ் ஜெருசலேம் மாறி மாறி வந்தது.

### பணம் கொடுத்தால் பாவ மன்னிப்பு

சுமார் 1517-ம் ஆண்டு ஐரோப்பிய ஆட்சியாளர்கள் பலரும் பொறாமையில் பொசுங்கும் அளவுக்கு கிறிஸ்தவ தேவாலாயங்களில் செல்வமும் அதிகாரமும் குவிந்தன.

இதே நேரம், ஜெர்மனியில் டெட்சூல் என்ற ஒரு பாதிரியார் பணம் கொடுத்தால் பாவமன்னிப்பு கிடைக்கும் என்று சொல்லி நாடெங்கும் பாமரர்களிடம் ஏராளமாகப் பணம் பறிக்க ஆரம்பித்தார்.



மார்டின் லூதர்

இதை எதிர்த்து ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த மார்ட்டின் லூதர் என்ற இன்னொரு பாதிரியார் கோபமாக குரல் எழுப்பினார். கத்தோலிக்கத் தேவாலயங்களின் பல சம்பிரதாயங்களையும் இவர் கடுமையாக எதிர்த்தார். கிறிஸ்தவ மதம் இரண்டாக உடைந்தது. இவர் கத்தோலிக்க வழிபாட்டு முறையை ப்ரோடெஸ்ட் செய்ததால் இவரைப் பின்பற்றியவர்கள் ப்ரோட்டஸ்டன்ட் என்று அழைக்கப்பட்டனர்.

மார்ட்டின் லூதரை அடுத்து ஜான்கேல்வின் என்பவர் வேறு மாதிரியான சீர்திருத்தங்களைச் சொன்னார். கிறிஸ்தவ மதம் மேலும் உடைந்தது. கேல்வினிஸம் அல்லது ப்பூரிட்டானிஸம் என்று இன்னொரு புதிய மதம் பிறந்தது.

### மன்னரின் மதமே மக்களின் மதம்

இந்தக் காலகட்டத்தில் இங்கிலாந்தின் அரசர் எட்டாம் ஹென்றி, தனது மனைவியை விவாகரத்து செய்ய அனுமதி கேட்டபோது கத்தோலிக்க தேவாலயம் அதற்கு அனுமதி மறுத்துவிட்டது. அதனால் கோபம் கொண்ட மன்னர் தனது நாட்டில் இருக்கும் கத்தோலிக்க தேவாலயங்களுக்குத் தன்னையே தலைவராக நியமித்துக் கொண்டார். மன்னர் சொல்லும் மதத்தைத்தான் குடிமக்கள் பின்பற்ற வேண்டும் என்று சட்டம்கூட இயற்றினார்.

மன்னரின் மறைவுக்குப் பிறகு இங்கிலாந்தின் மகாராணியாக முடிசூட்டிக்கொண்டவர் மேரி. இவர் கத்தோலிக்க தேவாலயத்தின் பக்கம் மீண்டும் சாய நீங்கள் எல்லாம் மனதில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டு மக்கள் கொதித்தெழுந்தனர். மேரி எதிர்ப்பாளர்களை நூற்றுக்கணக்கில் கொன்று குவித்தார். ப்லடி மேரி என்று சரித்திரம் குறிப்பிடும் அளவுக்கு அவர் ஆட்சியில் படுகொலைகள் நடந்தன.

அதன்பின் வியாபாரத்துக்காக வர்த்தகர்களும் நாடுபிடிக்க ஐரோப்பியர்களும் ஆசியா, அமெரிக்கா ஆப்பிரிக்கா என்று கப்பல் ஏற...



போர் வியூகம் வகுக்கும் பாதிரியார்கள்

அவர்களோடு கத்தோலிக்க மற்றும் ப்ராட்டஸ்டண்ட் மதபோதகர்களும் சென்றார்கள். கிறிஸ்தவ மதம் உலகம் முழுவதும் பரவியது. இப்போது உலகம் முழுவதும் சுமார் 120 கோடி கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். இதில் இந்தியாவில் இருக்கும் இரண்டு கோடி கிறிஸ்தவர்களும் அடக்கம்.

நன்றி ஆனந்த விகடன்


### பிறந்தார்கள்

❍ தமிழறிஞரான மீனாட்சி சுந்தரம் பிள்ளை, வால்ட் டிஸ்னி

### நிகழ்வுகள்

❍ ஆல்ஃப்ரட் நோபல் இறந்து பதினைந்து ஆண்டுகள் கழித்து ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் முதன் முறையாக நோபல் பரிசுகள் வழங்கப்பட்டன.

❍ ரவீந்திரநாத் தாகூர் சாந்தினி நிகேதனை நிறுவினார்.



பார்சலோனாவைச் சேர்ந்த 19 வயது இளைஞன் ஒருவன், முதன் முதலாக தான் வரைந்த ஓவியங்களை பொதுமக்களின் பார்வைக்கு வைத்தான்.

"என்ன கண்றாவி இது?" என்று பலர் முகம் சுளித்தார்கள்.

சுலபத்தில் புரியாத அந்த ஓவியங்களை வரைந்த இளைஞனின் பெயர் – பிக்காஸோ!

### மறைந்தார்



❍ சூரியனே அஸ்தமிக்காத அந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மகாராணி ஜனவரி 22ம் திகதி தனது கடற்கரை மாளிகையில் அஸ்தமித்தார்.

64 ஆண்டுகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யதின் மகாராணியாக இருந்த விக்டோரியாவுக்கு ஒன்பது குழந்தைகள். இதில் பலர் ஐரோப்பாவில் உள்ள பல ராஜகுடும்பங்களின் வாரிசுகளுடன் மணம் முடித்துக் கொண்டதால், மகாராணி ஐரோப்பாவின் பாட்டி என்று செல்லமாக அழைக்கப்பட்டார்.

இப் பத்திரிகை வரையறுக்கப்பட்ட ராவய பப்ளிஷர்ஸ் (கறன்ரி) நிறுவனத்தால் மஹரகம பிலியன்தல வீதி 83ம் இலக்க ராவய அச்சகத்தில் 2000ம் ஆண்டு டிசம்பா மாதம் 03ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.